

# தமிழரசு

1-10-1987 ரூ. 1






தமிழ்நாடு அரசின் சார்பில் தந்தை பெரியார் அவர்களின் 109 வது பிறந்தநாள் விழா 17.9.87 அன்று தஞ்சாவூரில் சிறப்புற நடைபெற்றது.

மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் திரு க. இராசாராம் அவர்கள் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார்

தஞ்சையில் நடைபெற்ற தந்தை பெரியார் அவர்களின் பிறந்தநாள் விழாவில் மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் திரு க. இராசாராம் அவர்கள் கலப்புமணத் தம்பதியர்க்கு நற்சான்றிதழ்களை வழங்கினார்.





# அண்ணலைப் பற்றி அண்ணா

உலக உத்தமர் காந்தியடிகளின் பிறந்த நாள், நாடெங்கும் நன்னாளாகக் கொண்டாடப் படுகிறது. அவரவர் தத்தமக்கு விருப்பமான முறையில் காந்தியடிகளுக்குத் தமது அன்பினைக் காணிக்கையாக்கி அளிக்கின்றனர்.

அவருடைய திருவுருவப்படத்திற்கு மாலைகளிட்டும்-அவர் புகழ் பற்றிய பாடல்களை இசைத்தும்-பஜனை நடாத்தியும், நூற்புத் தொண்டாற்றியும், சேரிகளைத் திருத்தும் பணிபுரிந்தும் இந்நாளைக் கொண்டாடுகின்றனர்.

அவர் ஓர் தூயவர். நமது மார்க்கத்தின் மாசு துடைத்திட வந்த மகான்-என்பாரும்,

அவர் ஓர் விடுதலை வீரர், நமது நாட்டு அடிமைத் தளைகளை உடைத்தெறிந்த அஞ்சா நெஞ்சினர் என்பாரும்,

அவர் ஓர் சமதர்மவாதி, ஏழைப் பங்காளர், ஏழைகள் புதுவாழ்வு பெற வழிவகுத்தவர் என்பாரும்,

அவர் கிராம ராஜ்யம் அமைத்திட முனைந்தவர் என்பாரும், இதுபோல அவரிடம் அவரவர் கண்டவற்றினைக் கொண்டு அளவிட்டு வியந்து பாராட்டுவோர் பல்வேறு வகையினர் உளர். இவர்களில் எவருடைய பார்வையில் முழு காந்தி அடிகள் தெரிகிறார் என்பது, காலமெல்லாம் ஆராய்ந்தறிந்து கொள்ள வேண்டிய ஒரு பிரச்சினையாகும். காரணம், ஒரு மனிதர் என்ற முறையிலே மட்டும் கவனிக்க வேண்டியர் அல்லர்; அவர் காலத்தின் சின்னம், ஓர் எழுச்சியின் அடையாளம், ஒரு மறுமலர்ச்சியின் உருவகம்.

அவர் எல்லாத்துறைகளிலும் தமது முத்திரையைப் பொறித்துச் சென்றவர்; எல்லாத் துறையினரும், எமக்காகவே காந்தியடிகள் வாழ்ந்தார், எமக்காகவே பணிபுரிந்தார் என்று சொந்தம் கொள்ளத்தக்க முறையிலே அவருடைய வாழ்க்கையும், தொண்டும் அமைந்திருந்தன.

இன்று, அவருடைய பிறந்தநாள், இது எல்லாத் துறைகளிலே உள்ளவர்களாலும் கொண்டாடப் படுவதற்கான காரணம் இதுவே. அவர் ஒரு நாட்டின் காலம்! ஒரே ஒரு துறைக்கு அல்ல; எல்லாத் துறைகளுக்கும் ஒரு திருப்பத்தை, ஒரு புதிய பொலிவை, வலிவைக் கொடுத்தவர்.

ஒரு நாட்டின் முன்னேற்றம் ஏதோ ஒரு துறையிலே மட்டும் பெறப்படுகிற வெற்றியைப் பொறுத்தது அன்று. எல்லாத்துறைகளிலும் வெற்றி காணவேண்டும். அவைகளின் ஒட்டு மொத்தத்தைக் கொண்டே அந்நாடு முன்னேற்றம் அடைந்திருக்கிறதா என்று கணக்குப் பார்க்க வேண்டும்.

ஒரு நாட்டின் வரலாற்றிலே அவ்விதமான ஒரு கணக்கு அடிக்கடி கிடையாது; ஒரு நூற்றாண்டுக்கு ஒரு முறை கிடைக்கும் என்றும் கூறிவிட முடியாது. அந்தக் கணக்கு இந்நாட்டுக்குக் காந்தியடிகளின் வடிவத்திலே கிடைத்தது. எனவேதான் காந்தியடிகளின் பிறந்தநாள் ஒரு மாபெரும் தலைவரின் பிறந்த நாளாகமட்டுமின்றி, ஒரு நாட்டுக்குக் கிடைத்த பொற்காலம், என்ற முறையிலே சிறப்புப் பெறுகிறது.

அந்த-அரை ஆடை மனிதர் கோடானுகோடி மக்களுக்கு மானமுள்ள வாழ்வு பெற்றுத்தந்ததை விட ''அற்புதம்'' வேறு என்ன இருக்கமுடியும்?

இன்று நடத்திடும் திருநாளின் மாண்பு, நாளையும் மறுநாளும், பிற நாட்களிலும் நமது எண்ணத்திலும் செயலிலும் ஒளிவிடவேண்டும். அதற்கே இந்நாள்! அவர் புகழ் பாடி மகிழ்ந்திட மட்டுமல்ல-அவர் வழி நடந்திட, அவர் காண விரும்பியதைக் கண்டிட, அவர் தந்து சென்றதை உருக்குலைக்காதிருந்திட, அவர் ஊட்டிய உணர்ச்சிகளை உயிருள்ளவை யாக்கிட! மாலையின் மாண்பு மணத்தில்! விளக்கின் பயன் ஒளியில்! விழாக்களின் பலன் நமது செயலிலே இழைந்திடும் மாண்பிலே இருக்கிறது!

*(2.10.1967-ல் வானொலியில் ஆற்றிய உரையிலிருந்து)*


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2018

பிரபவ - புரட்டாசி 15

மலர் : 18 1-10 87 இதழ் : 7

# தமிழக வறட்சிப்பகுதிகளில் பிரதமர்

முன் எப்போதும் கண்டிராத வகையில் தமிழ்நாட்டின் பல பகுதிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையைச் சமாளிக்க அரசு போர்க்கால நடவடிக்கைபோல் பல நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இதற்கிடையில் தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் நிலவும் வறட்சி நிலையை நேரில் பார்வையிட மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் 8-9-87 அன்று மதுரை வருகை புரிந்தார்.

மதுரை, காமராஜர், திருநெல்வேலி கட்டபொம்மன், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்த பிரதமர் அவர்கள் 400 கி.மீ. தூரம் நெடுகிலும் அவரே ஜீப் ஓட்டிச் சென்று வறட்சிப் பகுதிகளைப் பார்வையிட்டார்.

பல இடங்களில் ஜீப்பை நிறுத்திய பிரதமர் அவர்கள் ஆங்காங்கு ஏரி, குளம், கண்மாய் வெட்டும் பணிகளில் ஈடுபட்டிருந்த கிராம மக்களை நேரில் சந்தித்து குறைகளைக் கேட்டார். இந்த வேலைகளுக்காக அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் சம்பளம் மற்றும் இதர சலுகைகளையும் கேட்டறிந்தார்.

பல இடங்களில் கொளுத்தும் வெயிலையும் பாதுகாப்புஅரணையும் பொருட்படுத்தாமல் ஜீப்பை விட்டு இறங்கி, மக்கள் கூடியிருந்த பகுதிக்குச் சென்றார்.

பயணத் திட்டத்தில் இடம் பெறாத இடங்கள் பலவற்றையும் பார்வையிட்டு குறைகளைக் கேட்டறிந்தார். வழி நெடுக ஆண்களும் பெண்களும் சிறுவர்



சிறுமியரும் பெருந்திரளாகக்கூடி யிருந்து பிரதமரை வரவேற்ற னர்.

முன்னதாக, ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்திலிருந்து 8-9-87 அன்று காலை 6.50மணி அளவில் மாண்புமிகு பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களும் அவரது துணைவியார் திருமதி சோனியா காந்தி அவர்களும் விமானம் மூலம் மதுரை வந்தனர். பிரதமருடன் மாண்புமிகு மத்திய தொழில் துறை இணை அமைச்சர் திரு அருணாசலம் அவர்கள் உடன் வந்தார்.

விமான நிலையத்தில் மேதகு ஆளுநர் திரு எஸ். எல்.குரானா, மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன், மாண்புமிகு உணவு அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன், மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. க. இராசாராம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு, மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி.வி. சாமிநாதன், மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் திரு ஆர். சவுந்தரராசன், மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் திரு டி. இராமசாமி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலர் திரு ஏ. பத்மநாபன் இ.ஆ.ப. ஆகியோர் பிரதமர் அவர்களை வரவேற்றனர்.

வரவேற்பிற்குப் பின் விமான நிலைய ஓய்வு அறையில் வறட்சி நிலை பற்றிய ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

வறட்சியைச் சமாளிக்க என்னென்ன திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன? வறட்சியால் ஏற்பட்ட பாதிப்பு எவ்வளவு? என்ற விபரங்களைப் பிரதமர் அவர்கள் கேட்டறிந்தார்.

குடிநீர் பற்றாக் குறையைப் போக்கவும், கிராமப்பகுதிகளில் அதிக வேலைவாய்ப்புக்களை உருவாக்கவும் தமிழக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை தலைமைச்செயலர் அவர்கள் விவரித்து வறட்சிநிலை பற்றிய விபர அறிக்கையை வழங்கினர்.

வறட்சி நிலையைச் சித்திரிக்கும் வீடியோ படகேசட் ஒன்றை நில நிர்வாக இயக்குநர் திரு வி. இராமமூர்த்தி இ.ஆ.ப. அவர்கள் பிரதமரிடம் வழங்கினார்.

மத்திய அரசு தாராளமாக உதவ வேண்டும் என்று மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்னென்ன உதவிகள் வழங்கப்படுகின்றன என்று கேட்ட பிரதமர் அவர்களிடம் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டிக் கொடுப்பது, நிலமற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பது போன்றவை செயல்படுத்தப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

துளைக் கிணறுகள் தோண்ட நிதி உதவியை அதிகமாக்குமாறும் மத்திய அரசு தற்போது மாதந்தோறும் வழங்கி வரும் 50 ஆயிரம் டன் உணவு தானியங்களை 1 இலட்சம் டன்னாக அதிகரிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

30 இலட்சம் வீடுகள் கட்டும் திட்டத்தைப் பற்றியும் பிரதமர் அவர்களிடம் விளக்கப்பட்டது. தமிழகத்திற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்வேன் எனப்பிரதமர் அவர்கள் உறுதி அளித்தார்.

பின் பிரதமர் அவர்கள் வறட்சிப் பகுதிகளைப் பார்வையிடத் தமது பயணத்தைத் துவக்கினார். தாமே ஜீப்பை ஓட்டிக்கொண்டு திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள இளையார் பட்டி என்ற ஊருக்கு வந்தார். அங்குள்ள ஏரி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஆழப்படுத்தப் பட்டு வருகிறது. பிரதமர் அவர்கள் அங்கு வந்தபோது 63 ஆண், பெண் தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

ஏரிக்கரையை அடைந்ததும் அவர்களை அழைத்து பிரதமர் அவர்கள் பேசினார். ஏரியில் எத்தனை நாட்களாக வேலை நடக்கிறது, சம்பளம் மற்றும் சலுகைகள் என்னென்ன பெறுகிறார்கள் என்பதைக் கேட்டறிந்தார். அந்த ஏரியின் கரையில் மரக்கன்று நட்டார்.

இராமானுஜபுரம் என்ற இடத்தில் ஏரிமராமத்து வேலைகள் நடப்பதைப் பார்வையிட்டார்.

பாலவநத்தம் என்ற ஊரில் வறட்சியில் நூற்றுக்கணக்கான மரங்கள் கருகிப்போய் நிற்பதையும் காடுகள் பாளம் பாளமாக வெடித்துச் சிதறிக் கிடப்பதையும் பிரதமர் அவர்கள் பார்த்தார்.

காமராஜர் மாவட்டத்தில் காரியாபட்டி, கல்குறிச்சி, கொண்டு செட்டிப் பாளையம், ராமானுஜம் புதூர், பாளையம் பட்டி ஆகிய பகுதிகள் வழியே

“வறட்சியைச் சமாளிக்க நாம் எல்லா முனைகளிலும் போராட வேண்டும். அரசு மட்டும் அல்ல; அரசியல் கட்சிகள், சமூக நிறுவனங்கள், மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து வறட்சியால் பாதிக்கப் பட்டவர்களைக் காப்பாற்ற வேண்டும்.”

சென்ற பிரதமர் அவர்கள் அங்கே வறண்டு கிடந்த கண்மாய்களைப் பார்வையிட்டார்.

பின் அருப்புக்கோட்டைவழியே விருதுநகர் வந்த பிரதமர் அவர்கள் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த இல்லத்திற்குச் சென்று அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். பிரதமருடன் சென்றிருந்த அவரது துணைவியார் திருமதி சோனியா காந்தி அவர்களும் காமராஜர் சிலையின் காலடியில் மலர்களை வைத்து மரியாதை செலுத்தினார்.

காமராஜர் இல்ல வாசலில் மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி. வி. சாமிநாதன் அவர்ளும் செய்தி - மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன் இ.ஆ.ப. அவர்களும் பிரதமர் அவர்களையும் அவரது துணைவியாரையும் அன்புடன் வரவேற்றனர்.

சுற்றுப்பயணத்தின்போது பிரதமர் அவர்களுடன் சென்றிருந்த மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் காமராஜர் இல்லத்தை பிரதமருக்குச் சுற்றிக் காண்பித்தார்.

பின் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் தங்கை திருமதி நாகம்மாள் அவர்களின் மகள் திருமதி கமலாம்பாளைச் சந்தித்தார்.

அதன்பின் பிரதமர் அவர்கள் ஆமத்தூர், திருத்தங்கல் வழியாக சிவகாசி சென்றார். அங்கு 10 நிமிட ஓய்வுக்குப்பின் தமது பயணத்தைத் தொடர்ந்தார்.

விஜய கரிசல் குளம் கிராமத்தில் வறண்டு கிடந்த கண்மாயை பார்த்தார். அங்கு வேலைசெய்து கொண்டிருந்த தொழிலாளர்களிடம் அவர்கள் வாழ்க்கை நிலை பற்றிக் கேட்டறிந்தார். குகன் பாறையில் வறட்சிப் பகுதிகளைப் பார்வையிட்ட பிரதமர் அவர்களும் அவரது துணைவியாரும் அங்கு மரக் கன்றுகளை நட்டனர்.

வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் தொழிலாளர்களுக்கு கோதுமைப் பொட்டலங்களை பிரதமர் அவர்கள் வழங்கினார்.

பின் திருவேங்கடம் சென்ற பிரதமர் அவர்கள் அங்கு வறண்டு கிடந்த ஏரியைப் பார்வையிட்டார். அங்கு கூடியிருந்த மக்களிடம் பேசினார்.

பின் பெருங்கோட்டூர் வழியாக சங்கரன்கோயில் சென்று அங்குள்ள பெறுகோவிலாள் குளத்தில் காடு வளர்ப்பு திட்டத்தைப் பார்வையிட்டார். தொடர்ந்து நீலித நல்லூர் பகுதியில் காய்ந்து மொட்டை மரங்களாக நின்ற மரங்களைப் பார்த்தபடியே வன்னிக்கோனந்தம் சென்றார்.

செல்லும் வழியில் குடிநீருக்காக துரப்பணக் கருவிகள் வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்ததும் வயற்காட்டினுள் ஒரு மணி நேரம் ஜீப்பை ஓட்டிச் சென்று அங்கு நடைபெறும் பணிகளைப் பார்வையிட்டார்.

பின்னர் குமாரபுரம், குருக்கள் பட்டி, பனவடலி சத்திரம், மருக்காலன் குளம் வழியே லன்னிக் கோனேந்தல் வந்து சேர்ந்தார். அங்கு மின்சார நிலையம் அருகே போடப்பட்டு வரும் ஆழ்குழாய்க் கிணறுகளைப் பார்வையிட்டார்.



பின்னர் மானூர் பெரிய குளம் சென்றார். அங்கு நடைபெறும் வறட்சி நிவாரணப் பணிகளைப் பார்வையிட்ட பின் ராமையன் பட்டி, தச்ச நல்லூர் வழியே பாளையங்கோட்டை சென்றடைந்தார்.

பாளையங்கோட்டையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மாண்புமிகு பிரதமர் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

"இந்த ஆண்டு வறட்சியின் கொடுமை இங்கு மட்டும் அல்ல; இந்தியா முழுவதும் பரவி உள்ளது.

"சுதந்திரம் அடைந்த 40 ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்பட்டுள்ள வறட்சியின் கொடுமை எவ்வளவு அதிகமாக இருந்தாலும் பசி, பட்டினிச் சாவு ஏற்படாத வகையில் வளர்ச்சி அடைந்து உள்ள நிலைமையைப் பெற்று இருக்கிறோம்.

"தமிழ்நாட்டில் முக்கியபிரச்னை இலட்சக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதுதான். வறட்சியால் இலட்சக்கணக்கான மக்கள் வேலைவாய்ப்பை இழந்து விட்டனர். ஆகவே நமது முதல் பிரச்னை அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும்.

"கடுமையான வறட்சியின் போது அதிகமாக பாதிக்கப்படுபவர்கள் விவசாயிகள், அரிஜன மக்கள்தான். நிவாரணப் பணிகளைச் செய்யும்போது இந்த மக்களை கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

"வறட்சிக் கொடுமைகளை சமாளிக்க நாம் எல்லா முனைகளிலும் போராட வேண்டும். அரசு மட்டும் அல்ல; அரசியல் கட்சிகள், சமூக நிறுவனங்கள், மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

"உங்களுக்குத் தெரிந்து இருக்கக் கூடும். இந்திய - இலங்கை ஒப்பந்தம் மூலம் இலங்கைப் பிரச்னை ஒருமுடிவுக்குக்கொண்டு வரப்பட்டது. ஒப்பந்தம் ஏற்பட்ட 6 வாரங்களுக்குள்ளாக அங்கு அமைதி ஏற்பட்டுள்ளது.

"இலங்கையில் வாழும் மக்களிடையே மாமூல் வாழ்க்கை திரும்பி உள்ளது. புதிய அமைதியில் அந்த மக்கள் வாழத் தொடங்கி இருக்கிறார்கள். இந்திய - இலங்கை ஒப்பந்தம் நமக்கு திருப்தி அளித்து உள்ளது.

"இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு துணையாக இருந்த தமிழக அரசுக்கும் தமிழ் நாட்டு மக்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன.

"தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் விரைவில் சுகம் பெற்று தமிழகத்துக்கு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



"எம். ஜி. ஆர். தமிழர் மட்டும் அல்ல; இந்திய தேச பக்தர் என்பதையும் அவர் நிரூபித்திருக்கிறார்.

"தமிழ்நாட்டில் உள்ள எல்லா மக்களுக்கும் குறிப்பாக மதுரை, நெல்லை பகுதிகளில் சிறப்பான வரவேற்பு அளித்த மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

"திருநெல்வேலி ஒரு புண்ணிய பூமி ஆகும். இந்தியாவில் சுதந்திரப் புரட்சி ஏற்பட்டபோது கட்டபொம்மன் இந்த புனித மண்ணில் இருந்து சுதந்திரப் போராட்டத்தை தொடங்கியதாக வரலாறு கூறுகிறது.

"வ. உ. சிதம்பரம் பிள்ளை சுதேசி கப்பலை ஓட்டிய வரலாற்றுக்குச் சொந்தக்காரர். வ. வே. சு. ஐயர், சுப்பிரமணிய சிவா போன்றவர்கள் பிறந்த மண் இது.

"இன்று மதுரையிலிருந்து வரும் வழியில் விருதுநகரில் காமராஜர் இல்லத்துக்குச் சென்றிருந்தேன். காமராஜர் தமிழகத்தின் தலைவர் மட்டும் அல்ல. அவர் காங்கிரஸ் இயக்கத்தில் பல தலைவர்களை உருவாக்கியவர்."

இவ்வாறு கூறினார்.

பின் மீண்டும் ஜீப்பில் புறப்பட்டு நாங்குநேரி பகுதியில் பனக்குடி, வள்ளியூர், காவல் கிணறு, அஞ்சுகிராமம், சுசீந்திரம், கோட்டாறு, ஆகியவற்றின் வழியே குமரிமுனை சென்று மீண்டும் நாகர்கோவில் திரும்பி அன்று மாலை 6.40 மணிக்கு ஹெலிகாப்டர் மூலம் திருவனந்தபுரம் புறப்பட்டார்.

பிரதமர் அவர்களின் இந்த சுற்றுப்பயணத்தின்போது மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு ப. சிதம்பரம் அவர்களும் மாண்புமிகு மத்திய தொழில்துறை இணை அமைச்சர் திரு அருணாசலம் அவர்களும், மாண்புமிகு தமிழக அமைச்சர்களும் உடன் சென்றனர்.

பிரதமர் பதவி ஏற்றபின் திரு ராஜீவ்காந்தி அவர்கள் தமிழ் நாட்டின் தென்மாவட்டங்களுக்குச் சென்றது இதுவேமுதல் முறை. ஒரே நாளில் ஏறத்தாழ 10.30 மணி நேரத்தில் 400 கி.மீ. தூரம் பயணம் செய்து வறட்சிப் பகுதிகளைப் பார்வையிட்டது வறட்சியைச்சமாளிக்கும் பணியில் மக்களுக்குப் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியது.



# வன உயிரினங்களைக் காப்போம்

மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு-மின்துறை அமைச்சர்
திரு வி. வி. சுவாமிநாதன்

இயற்கையுடன் ஒத்து வாழக் கற்றுக் கொள்ளும் உணர்வை வளர்க்கும் பண்பாட்டு வாரவிழாதான் வனவிலங்குப் பாதுகாப்பு வார விழா. மனிதன் விலங்கிலிருந்து வந்தான் என்பது உண்மையோ இல்லையோ நம்மிடம் மிருக உணர்ச்சி இருப்பதை யாரும் மறுக்க முடியாது. மனிதன் மிருகத்தைவிட ஒரு அறிவு அதிகமாக ஆறறிவு பெற்றிருக்கிறான் என்று பெருமைப்பட்டுக் கொள்ளளாம். ஆனால் எந்த மிருகமும் காதல் தோல்வியினாலோ வாழ்க்கையில் வறுமையின் காரணமாகவோ தற்கொலை செய்து கொள்வதில்லை. மிருகம் வாழப் போராடும். அளவுக்கு அதிகமாகத் துன்பத்தை விளைவித்தால் பூனை புலிபோல் சீறுவதும், யானை சிங்கத்துடன் மோதுவதும் மிருகங்கள் வாழத் துடிப்பதைக் காட்டு கின்றன. ஆனால் ஆறறிவு படைத்த மனித ஜென்மங்கள் தற்கொலை செய்துகொள்கின்றன. 'எதையும் தாங்கும் இதயமுள்ள மிருகங்களிடமிருந்து மனிதன் கற்றுக்கொள்ள வேண்டியபாடம் தற்கொலை செய்து கொள்ளக்கூடாது என்பது மாத்திர மல்ல, வேறு நல்ல பல பாடங்களையும் கற்றுக் கொள்ளலாம். கடும் வறட்சியான நேரத்தில் நீரோடைக்குச் சென்ற ஆண் மான் அங்குள்ள குறைந்த நீரைக்கண்டு தான் குடித்துவிட் டால் அதைப் பின்தொடர்ந்து வந்த பெண் மான் குடிக்கப் போதிய அளவு தண்ணீர் இருக் காது என்று கருதியதால், தான் தண்ணீர் குடிக்காமல், குடிப்பதுபோல் பாசாங்கு செய் யும் காட்சியைச் சங்க இலக்கியங்களில் உள்ள வருணனைகளை இன்று கானகங்களில் காண லாம்.

கூடிப் பழகும் ஒரு ஜோடிப் புறாக்கள் வேறு ஒரு ஜோடிப் புறாவுடன் வாழ நினைப்ப தில்லை. பிறர் மனை நயவாமை பெரிய பண்பு, மரபு. தாலி கட்டிய மனைவி இருக் கும்போது இன்னொருவன் வீட்டு மனைவி யிடம் இன்பம் பெற நினைப்பதும் செய்வதும் குற்றமாகும். அதனால்தான் சுக்ரீவன் மனைவி உருமையை அபகரித்துக்கொண்ட மாவீரன் பெரிய தவ வலிமை உள்ள வாலியையும், சீதையைத் தூக்கிச்சென்ற சாகா வரம் பெற்ற இராவணனையும் மாற்றான் மனைவியை மஞ்சத்திற்கு அழைத்தார்கள் என்ற ஓரே குற் றத்திற்காக முழுமுதற் கடவுளே இராம பிரா னாக வந்து நேருக்கு நேர் மரண தண்ட னையை அவரே நிறைவேற்றி தர்மத்தை நிலைநாட்டினார்.

தாய்ப் பறவையானாலும், புலி யானாலும், கரடியானாலும் வேளை தவறாமல் தங்களுக்கு உணவில்லை என்றா லும், தாங்கள் ஈன்ற குழந்தைகளுக்கு இரையை நீரிலே நீந்தி வெகு தூரத்தைக் கடந்து கொண்டுவந்து தருகின்ற காட்சி மிரு கங்களிடம் தாய் உணர்வு எப்படி மிளிர் கிறது என்பதைக் காட்டுவதாகும். அதைப் பார்க்க உடல் சிலிர்க்கும். மயிலுக்கு விரித்தா டும் தோகை, மானுக்குக் கொம்பு, சிங்கத் திற்குப் பிடரி, யானைக்குத் தந்தம் பெண் இனத்தைக் கவரும் அழகிற்காக ஆண் இனத் திற்கு ஆண்டவன் கொடுத்த பரிசுகளாகும். ஆனால் மனித சமூகத்தில் பெண்களுக்கு ஆண் கள் கவனத்தை ஈர்க்க மயில் தோகை அனைய அழகியக் கூந்தலையும், மான் விழிகளையும் இறைவன் நல்கினான்.

வனவிலங்கு வாரம் கொண்டாடும் இந்த நன்னாளில் தமிழ்நாட்டில் ஒதுக்கப்பட்ட



தமிழ்நாட்டின் தன்னிகரில்லா முதலமைச்சர் மாண்புமிகு எம்.ஜி.ஆர் அவர்கள் மிருகங்களை அன்புடன் நேசிப்பவர். அவர் ஆட்சியில் சராசரி ஆண்டு ஒன்றுக்கு குறிப்பாக நடப்பு ஆண்டில் ஏறத்தாழ ரூ. 3.21 கோடி வனவிலங்குகள் பரா மரிப்புக்காக அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சிக்குரியதாகும்.





காடுகளின் பரப்பில் 2 இலட்சம் எக்டேர் வனவிலங்குகள் வாழும் இல்லங்களாக விளங்குகின்றன. இதுதமிழ்நாட்டில் உள்ள மொத்த ஒதுக்கப்பட்ட காடுகளின் பரப்பில்10சதவீதம் ஆகும். உலக வனவிலங்கு உயிர்ப் பாதுகாப்பு ஆராய்ச்சியாளர்கள் பரிந்துரைத்த 8 சதவீதத்தைவிடஅதிகம்.மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் ஆளும் தமிழ்நாட்டில் விலங்குகள் வாழ இருப்பது பெருமைக்குரியதாகும். தமிழ்நாட்டின் தன்னிகரில்லா முதலமைச்சர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் மிருகங்களை அன்புடன் நேசிப்பவர்.அவர் ஆட்சியில் சராசரி ஆண்டு ஒன்றுக்குக் குறிப்பாக நடப்பு ஆண்டில் ஏறத்தாழக் ரூ. 3.21 கோடி வனவிலங்குகள் பராமரிப்புக்காக அரசினால் ஒதுக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சிக்குரியதாகும்.

அது மாத்திரமல்ல, ஆசியாவிலேயே மிகப்பெரிய வனவிலங்குப் பூங்காவாக சென்னைக்கு அருகில் வண்டலூரில் அறிஞர் அண்ணா அவர்கள் பெயரால் 1265 ஏக்கர் 5 கி.மீ. நீளம் கொண்ட நிலப் பரப்பில் இயற்கைச் சூழலில் வனவிலங்குகள் வளர்வதறகாக 7.3 கோடி ரூபாய் செலவு செய்யச்சொல்லி, தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் தந்த அவர் நேர்முக அறிவுரைகளின் அடிப்படையிலும் அவரது பரந்த அனுபவ ஞானத்தின் உதவியாலும் உருவாகிவரும் வனவிலங்குப் பிரதேசத்தைக் குழந்தைகள் முதல் முதியோர்வரை குடும்பத்துடன் அனைவரும் வந்துபார்க்கவேண்டியமிருகங்களின்சொர்கப் பூமியாகும். அங்கு 34 வகை அபூர்வமான, அரிய,ஏன் சொல்லப்போனால் அந்தப்பிராணிகள் உலகத்தை விட்டே அழிந்து விடுமோ என்ற அபாய நிலையில் இருந்த வனவிலங்குகளும், பறவைகளும் வளமுடன் இருப்பதை நீங்கள் நேரில் காணலாம்.

இந்தப் பூங்கா அரிய வெளிமானுக்கான இனவ்ருத்தி மையமாக அகில இந்திய உயிரியல் பூங்கா இயக்குநர்கள் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டுளளது, இது தமிழக அரசுக்குக் கிடைத்த பாராட்டாகும. இங்கு மணிப்பூர் மான், வராக மான், சாரஸ் கொக்கு, பஞ்சவர்ணக்கிளி, நீர் யானை, மலை அணல், போன்ற விலங்குகள் இனவிருத்தி செய்திருப்பது உலகிலேயே வேறு எந்த உயிரியல் பூங்காவிலும் நிகழாத அதிசய நிகழ்ச்சியாகும் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவது என் கடமையாகும்.

ஊர்வன விலங்கினத்தில் மலைப்பாம்பு, தென் அமெரிக்க முதலை போன்றவைகளும் இங்கு இனவிருத்தி செய்கின்றன. இந்தியாவில் பலவேறு வெளி மாநிலங்களிலருநதும் உலகத்தின் வேறு நாடுகளிலிருந்தும் அபூர்வமான மிருகங்கள அறிஞர் அண்ணா வனப் பிரதேசத்திற்கு வனவிலங்குகள் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு தமிழ் நாட்டில் இல்லாத மணிப்பூர் மான், வராக மான், சிங்கம், புலி, இமாலயக் கரடிகள் போன்ற வனவிலங்குகள் சுற்றித்திரிவதைப் பார்க்கலாம். அதைப்போலவே மலேசியாவிலிருந்து குட்டை முதலை, கரடிப் பூனை, நண்டு தின்னும் குரங்குகளும், அமெரிக்காவிலுள்ள ஹானலூலூ பூங்காவிலுள்ள 'சிம்பன்ஜி'' என்று அழைக்கப்படும் ஒரு ஜோடி மனிதக் குரங்குகளும், யூகோஸ்லாவியாவிலிருந்தும், ஐரோப்பாவிலிருந்தும் பெறப்பட்ட பழுப்பு நிறக் கரடிகள், சிறிய கங்காரு, மப்ளான் என்று கூறப்படும் ஐரோப்பிய ஆடுகள், லாமா என்று கூறப்படும் தென் அமெரிக்க ஒட்டகங்கள் ஆகியவைகள் இயற்கைச் சூழலில் மகிழ்ச்சியுடன் நடமாடும் காட்சியைக் காணலாம்.





மேலும், இந்தியாவில் கல்கத்தா ஜெய்ப்பூர், பாட்னா, லக்னோ, ஹைதராபாத் ஆகிய விலங்கியல் பூங்காவிலிருந்தும் குள்ள நீர்யானை, அமெரிக்க சிறுத்தை, வரிக்குதிரை போன்றவைகளை ஹானலூலூ மற்றும் பஃப்லோ உயிரியல் பூங்காக்களிலிருந்தும் 3 பெரிய கங்காரு ஆஸ்திரேலியாவிலிருந்தும் வனவிலங்குகள் பரிமாற்றத் திட்டத்தின்கீழ் இறக்குமதி செய்ய வனத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**வனவிலங்கு வாரம் கொண்டாடும் இந்நாளில் தமிழ்நாட்டில் ஒதுக்கப்பட்ட காடுகளின் பரப்பில் 2 இலட்சம் எக்டேர் வனவிலங்குகள் வாழும் இல்லங்களாக விளங்குகின்றன.**

மிருகங்களை நாம் நண்பர்களாக நேசிக்க வேண்டும். மிருகங்கள் நன்றியுள்ள பிராணிகள். திருடர்கள் இரவில் வரும்போது தூங்கினார்கள் வேலைக்காரர்கள் என்றும், பணத்துக்கும் பவுனுக்கும் ஆசைப்பட்டு வீட்டிலுள்ள முதலாளியை, வயதுவந்த தாய்மார்களைக்கூடக் கொன்றார்கள் என்றும் செய்தியைப் படித்திருக்கிறோம். ஆனால் எஜமானனைக் கொன்ற நாயைக் கேள்விப்பட்டிருக்க முடியாது. மாறாகத் தன்னை வளர்த்த எஜமானனைக் காப்பாற்ற மிருகங்கள் ஆயுதம் தாங்கிய எதிரிகளுடன் போரிட்டு மாண்டதைத்தான் நாம் கேட்டிருக்கிறோம். மிருகங்களுடன் நெருங்கிப் பழக வேண்டும். அவைகளைத் தெய்வமாக வணங்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் முன்னோர்கள் கடவுள்களுக்கு விலங்குகளை உதாரணமாக, சிவனுக்குக் காளையையும், முருகனுக்கு மயிலையையும் விஷ்ணுவுக்குக் கருடனையும், வாகனங்களாகக் கருதி அவைகளைத் தேர்த்திருவிழாக்களில் ஆண்டவனுக்கு நிகராகக் கற்பூர ஆரத்தி எடுத்து வணங்கினார்கள்.

மறைமுகமாக ஆண்டவன் மச்ச அவதாரம், ஆமை அவதாரம், கூர்ம் அவதாரம், நரசிம்ம அவதாரம் எடுத்தவர் என்றும் பிள்ளையாரை யானைமுகமுடையவர்

**இயற்கைச் சூழலில் வனவிலங்குகள் வளர்வதற்காக வண்டலூரில் 5. கி. மீ. நீளம் கொண்ட 1265 ஏக்கர் நிலப்பரப்பில் அறிஞர் அண்ணா அவர்கள் பெயரால் ஆசியாவிலேயே மிகப்பெரிய வனவிலங்குப் பூங்கா அமைக்கப்பட்டது. இதற்கான செலவு ரூ 7.3 கோடி வரகும்.**

என்றும் சொல்லி மிருகங்கள் பக்தியுடன் காக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மதத்தின் மூலம் பரப்பினார்கள். பரந்தாமர் பள்ளி கொண்டிருப்பது பாம்பின் மேல்தான். ஏன் சிவனுடைய முடி மேல் அலங்கரிப்பதும் பாம்புதான். வேடனிடமிருந்து புறாவைக் காப்பாற்ற, தன் துடையில் இருந்து சதையை அறுத்துக் கொடுத்தார் சிபிச் சக்கரவர்த்தி. கன்றைத் தன் மகன் தேர்க்காலில் கொன்றான் என்பதற்காகப் பசுவின் முறையீட்டின் மீது மகனையே இளவரசன் என்றும் தன் எதிர்கால வாரிசு என்றுகூடப் பார்க்காமல் தேர்க்காலில் அரைத்துக் கொன்றான் மனுநீதிச் சோழன். மயிலுக்குப் பட்டாடைப் போர்த்தினார் பேகன், முல்லைக்குத் தேரீந்த பாரி.



அபூர்வமான விலங்குகள் - அழகான விலங்குகள் அழிய விடாமல் இயற்கைச்சுற்றுச் சூழலிலே தட்டுப்பாடு இல்லாமல் உணவளித்து அவைகளின் தேக ஆரோக்கியத்தைக் கவனிக்க டாக்டர்களை நியமித்து வண்டலூரிலும், கிண்டியிலும், வேதாரண்யத்திலும், வேடந்தாங்கலிலும் மிருகங்கள் சரணாலயத்தை அமைத்திருக்கிறார் வள்ளல் தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

மிருகங்களுடன் ஓடியும் கூடியும் விளையாடு பாப்பா. பாலைப்பொழிந்து தரும் பசுக்கள், வாலைக்குலைத்துவரும் நாய்கள், வண்டியிழுக்கும் குதிரைகள், வயல்களை உழுது தரும் மாடுகள், அண்டிப்பிழைக்கும் ஆடுகள் அனைத்தும் நல்லதடி பாப்பா என்று மகாகவி பாரதியார் பாடிய வாக்கியங்களை மறக்கக் கூடாது. மாதம் ஒரு முறை வாருங்கள் வண்டலூர் அறிஞர் அண்ணா பெரிய மிருகக்காட்சிசாலைக்கு; கிண்டி குழந்தைகள் சிறு மிருகக்காட்சிசாலைக்கு; சினிமா டிக்கெட்டைவிடகட்டணம் குறைவு. முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு, மூன்றாம் வகுப்பு என்று ஏற்றத்தாழ்வு இல்லாமல் ஒரேவிதமான டிக்கெட்டுகள் குழந்தைகளுக்குக் குறைவான கட்டணம். பார்க்கத் தவறாதீர்கள். மிருகங்களைக் காக்கத் தவற மாட்டோம் என்று சபதம் எடுப்போம்.

**(வனவிலங்கு வார விழாவையொட்டி மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் வனத்துறை அமைச்சர் அவர்கள் 1.10.87 அன்று வானொலியில் ஆற்றிய உரை)**

“வளர்ந்து வரும் இன்றைய உலகில், மாணவர்கட்கு, வகுப்பறைக் கல்வி மட்டும் போதாது. அறிவியல் ஆய்வுக் கூடங்கள் வேண்டும்; தாய்மொழிப் பற்றையும், தற்சார்புத் திறனையும் வளர்க்கும் இலக்கிய மன்றங்கள் வேண்டும். விளையாட்டுத் திடல்கள் வேண்டும். பல்வேறு இடங்களுக்குச் சென்று மாணவர்கள் பட்டறிவு பெறுதல் வேண்டும்.”



# செவிச்செல்வம்

மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சர்

**திரு சி. பொன்னையன்**

அன்பார்ந்த மாணவச் செல்வங்களே, ஆசிரியப் பெருமக்களே, பேரன்பு கொண்ட பெற்றோரே, பெரியோரே! அனைவர்க்கும் என் அன்பு வணக்கங்கள்.

இன்று இவ்வாண்டிற்குரிய, வானொலிக் கல்வி நிகழ்ச்சிகள் தொடங்கும் நாள்; கல்வி ஒலிபரப்புத்துறை, தொடர்ச்சியான தன் பணிகளுக்குத் தன்னை ஆயத்தமாக்கிக் கொள்ளும் ஒரு மகிழ்ச்சிகரமான நாள்.

வானொலி மூலம் ஒவ்வோர் ஆண்டும், நீங்கள் கல்வி நிகழ்ச்சிகளைச் செவியுற்றுப் பயன் பெற்று வருகிறீர்கள். இவ்வாண்டு இன்னும் புதுப்புதுச் செய்திகளை அறியவிருக்கிறீர்கள். உங்கள் உலக அறிவு, முன்னினும் பன்மடங்காக வளரவிருக்கின்றது. அறிவியல் அறிவு, ஆக்கம் பெற இருக்கிறது. அலைந்து திரிந்து கற்க வேண்டிய ஒரு கட்டாயமும் இல்லாமல், தேர்வுக்காகக் கற்கிறோம் என்னும் ஒரு அச்சம் இல்லாமல், வானொலியின் வாயிலாக நீங்கள் உங்கள் அறிவைப் பெருக்கிக் கொள்ள ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது. பெற்றுப் பயனுற, வேண்டியது உங்களது கடமையும் பொறுப்பும் ஆகும்.

## வானொலியின் கல்விப் பணி

மாணவர்களை வெறும் புத்தகப் புழுக்களாக உருவாக்குவது, கல்விச் சாலைகளின் வேலை அல்ல. பள்ளிக்கூடங்கள், மாணவர்கள் உருப்போட்டதை ஒப்புவிக்கச் செய்யும் சோதனைக் கூடங்களும் அல்ல. நல்ல குடிமக்களை உருவாக்குவதும், பலனுள்ள கல்வியினைத் தருவதும் கல்வியினுடைய சீரிய நோக்கமாகும்.

வளர்ந்து வரும் இன்றைய உலகில், மாணவர்கட்கு, வகுப்பறைக் கல்வி மட்டும் போதாது. அறிவியல் ஆய்வுக் கூடங்கள் வேண்டும்; தாய்மொழிப் பற்றையும், தற்சார்புத் திறனையும் வளர்க்கும் இலக்கிய மன்றங்கள் வேண்டும். விளையாட்டுத்திடல்கள் வேண்டும். பல்வேறு இடங்களுக்குச் சென்று மாணவர்கள் பட்டறிவு பெறுதல் வேண்டும். வானொலி வகுப்புகள் இத்தகைய அறிவுச் செல்வத்தை வாரி வழங்கிட மேற்கொள்ளும் கல்விப் பணி பெரிதும் பாராட்டிற்குரியது.

''வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்தி சிந்தும் கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்''

-என்று தொடங்கும் குற்றாலமலைக் காட்சிப் பாடலை, வகுப்பறையில் படிக்கும்போது, அக்காட்சி நமக்கு மூளையில் மட்டும் தெரிகிறது. வானொலி நிகழ்ச்சியில் இசையோடு பாடப்படும்போது அக்காட்சி, செவி வழியாக நெஞ்சிலும் படுகிறது. இந்த வகையில் வானொலியினுடைய கல்வி ஒலிபரப்புகள் நமக்குப் பெரும் பயனை விளைவிக்கின்றன.

## சுவையான தொடர் நிகழ்ச்சிகள்

''நினைவலைகள்'' என்ற பகுதியில் அறிஞர் பலர், தம் வாழ்க்கையின் சிறப்பு நிறைந்த அரிய நிகழ்ச்சிகளைக் கூறுகிறார்கள். அவர்தம் வாழ்க்கை வரலாறு, குழந்தைகட்கு ஒரு வழிகாட்டியாக அமைகிறது. உழைப்பினால் உயர்ந்த பெரியவர்கள் தம் வாழ்க்கை, சின்னஞ்சிறார்களுக்கு ஒளி விளக்காகப் பயன்படுகிறது.

அது மட்டுமல்லாமல், சேர்ந்து பாடும் நிகழ்ச்சி, இளமையிலேயே இசை உணர்வை வளர்க்கிறது. அது மட்டுமல்ல; நாட்டுப்பற்றினையும், ஒற்றுமை உணர்வினையும் நட்புணர்வினையும் பிஞ்சு உள்ளங்களில் சிறப்பாகப் புகட்டுகிறது. நீதிக்கதைகள் நம் நாட்டின் சொத்துக்களாக இருக்கின்றன.

> வயிற்றுப் பசியைத் தீர்த்துக் கொண்டால் மட்டும் போதாது; விலங்கினங்கள் கூடத்தான் வயிற்றுப் பசியைத் தீர்த்துக் கொள்கின்றன. அவற்றினின்றும் மேம்பட்ட நிலையை மனிதன் அடைவதற்குத் தன்னுடைய ஒவ்வொரு செயலிலும் ஓர் ஒழுங்கினை வரையறுத்துக் கொள்ள வேண்டும்.
>
> —மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்.

இளைய தமிழ்ச்சமுதாயதத்திற்கு வேண்டிய ஒழுக்க உணர்வுகளை ஊக்குவிக்கும் வானொலியின் சிறப்புப் பணியாக இது அமைந்திருக்கிறது. பெரியோருடன் கலந்துரையாடல் எனும் பகுதி பிஞ்சு உள்ளங்களில், பெரியோரை மதிக்க வேண்டும் என்னும் நற்பண்புகளை வளர்க்கிறது. 'சிறுவர் கவிதைப் பகுதி' குழந்தைகளின் உள்ளத்தே கடமை உணர்வுகளையும் சிக்கன வாழ்வு-கடின உழைப்பு-உழைப்பின் மதிப்பு-ஆகிய உயர் பண்புகளையும் வளர்க்கும் பலனுள்ள பகுதியாக அமைந்துள்ளது.

'நமது மாவட்டம்' எனும் நிகழ்ச்சி பரந்துபட்ட வெளியறிவைப் புகட்டுகிறது. 'மருத்துவக் குறிப்புகள்' எனும் நிகழ்ச்சி யாவருக்கும் வேண்டிய வாழ்க்கைக் கல்வியை அளிக்கிறது.

**மொழிப் பயிற்சி**

பத்தாம் வகுப்பிற்கும், திறந்த வெளிப் பள்ளிக்குமான ஆங்கில நிகழ்ச்சிகளைத் தத்தம் வீடுகளில் பெற்றோர்கள் ஒலிப்பதிவு செய்து, தம் குழந்தைகட்குப் போட்டுக் காட்டிக் கற்பிக்கிறார்கள் என்ற செய்தி உண்மையிலேயே மகிழ்ச்சியினை ஊட்டுகிறது. இம்மாதிரியான வானொலி நிகழ்ச்சிகளை, காசட்டுகளில் ஒலிப்பதிவு செய்து கொண்டு, வசதியான நேரங்களில், கேட்டுப் பயன் பெறும் முறையினை, வானொலி ஆலோசனைக் குழு சிந்தித்திருப்பது போற்றற்குரிய ஒன்றாகும்.

அடுத்து, வானொலி நிகழ்ச்சிக் குறிப்புகள் அடங்கிய கையேடு குறித்த நேரத்தில் பள்ளிகளுக்குச் செல்வதில்லை என்ற ஒரு குறை இதுகாறும் இருந்தது. இக்குறையை நீக்க, பள்ளிக்கல்வி இயக்கத்தினுடைய தொழில் நுட்பப் பிரிவும், மாநில பெற்றோர் ஆசிரியர் கழகமும், தேசியப் பணித் திட்டத் துறையினரும், வானொலி நிலையத்தோடு இணைந்து உழைக்கத் திட்டமிட்டுள்ளது போற்றற்குரிய ஒன்றாகும்.

ஆசிரியர்களும், நிகழ்ச்சிகள் பற்றிய குறிப்புகளை முன்பே பார்த்து வைத்து, மாணவர்களை ஆயத்தம் செய்து, நிகழ்ச்சிகளைத் தவறாது கேட்கச் செய்வதில் ஆர்வம் காட்ட வேண்டும். நிகழ்ச்சிகள் பற்றிய ஐயங்களையும், கருத்துக்களையும் நிலையத்திற்கு அவ்வப்போது எழுதுதல் வேண்டும். குக்கிராமங்களில் அமைந்துள்ள சில தொடக்கப்பள்ளி நடுநிலைப்பள்ளிகளிலும் கூட மாணவர்கள் தவறாது நிகழ்ச்சிகளைக் கேட்டு வருகிறார்கள் என்பதனை அறிந்தபோது நமக்குச் சொல்லொணா மகிழ்ச்சி ஏற்படுகிறது.

**மாநில தேசியத் திட்டங்கள்**

இளைய தமிழ்ச் சமுதாயம் வளம் மிக்க-திறன் மிக்க சமுதாயமாக மாறிட, கல்வி முறையில் பல புரட்சிகர மாற்றங்கள் தேவை என்பது தமிழக முதல்வர் டாக்டர் பொன்மனச் செம்மல் அவர்களின் ஆழமான கருத்தாகும். பயனுள்ள வாழ்க்கைக் கல்வியும், தொழிற் கல்வியும் அறிவியல் கல்வியும் தமிழ்க் குழந்தைகள் அனைவரும் பெறல் வேண்டும் என்பது மாண்புமிகு முதல்வர் அவர்களின் சிறந்த செயல்முறைத் திட்டங்களாகும். அதைப் போலவே புதிய கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்தி, அதன் மூலம் நாட்டில் பலனுள்ள மனித வளத்தைப் பெருக்கி, பொருளாதாரச் செம்மையைப் பெறல் வேண்டும் என்பது மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுடைய சீரிய திட்டமாகும். மாநில, மைய அரசுகளின் இந்த உயர்ந்த கல்விக் கொள்கைகள், பாமர மக்களும், பட்டிதொட்டி மக்களும் உயர்ந்து பயன் பெறக் கூடிய அளவிற்கு ஆக்கபூர்வமான நற்பணி ஆற்றுகின்ற வானொலி நிலையத்தாரைத் தமிழக அரசின் சார்பில் நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

இந்த வகையில் கடந்த ஆண்டுகளில் நிகழ்ச்சிகளைத் தவறாது கேட்டுப் பயன் பெற்றதோடு, நிகழ்ச்சிகள் சார்ந்த வானொலி பரிசுகளைப் பெற்ற பள்ளிகளின் தலைமை. ஆசிரியர்களையும், ஆசிரியர்களையும் மாணவர்களையும் தமிழக அரசின் சார்பில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**வானொலி ஆக்கப்பணி**

மிகுந்த ஆர்வத்தோடும், சீரான திட்டங்களோடும், பல துறைகளிலும் உள்ள வல்லுநர்களின் நிகழ்ச்சிகளை அளவோடு உருவாக்கிக் காலந்தவறாது ஆக்கபூர்வமாகக் கல்வித் தொண்டாற்றி வரும் வானொலி நிலையத்தினரை நான் நல்வாழ்த்துக்களுடன் பாராட்டுகிறேன். கல்வியைத் தேடி, கண்மணிகளாம் மாணவச் செல்வங்கள் அலைந்தது அந்தக் காலம். வானொலி மூலம் கண்மணிகளைத் தேடி, கல்வி வந்து சேருவது இந்தக் காலம்; இந்த அரிய வாய்ப்பினை நன்முறையில் பயன்படுத்திக் கொண்டு அனைவரும் நலம் பெற வேண்டும் என்பது எனது வேட்கையும் வேண்டுகோளும் ஆகும். 'செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்' மற்றும் 'கற்றலின் கேட்டலே நன்று' என்னும் முதுமொழிகளை நடைமுறைப்படுத்தும்வானொலியினுடைய பணி வெல்க. அனைவருக்கும் என் அன்பு வாழ்த்துக்கள்.

வணக்கம்.

**(1987 ஆம் ஆண்டிற்கான கல்வி ஒலிபரப்பைத் தொடங்கி வைத்து 6-7-87 அன்று வானொலியில் ஆற்றிய உரை)**

“ஏழை மக்களின் வாகனமான சைக்கிள்கள், சைக்கிள் ரிக்ஷாக்கள், அதன் உதிரிப் பாகங்கள் ஆகியவற்றின் மீதான வரிவிகிதம் 1980 முதல் ஆறிலிருந்து மூன்று சதவீதமாய் குறைக்கப்பட்டுள்ளது.”



மக்களுக்காக சமுதாயப் பணிகளைச் செய்திட மக்களிடமிருந்து வசூலிக்கப்படுவதே வரியாகும். மாநில அரசின் வருவாயில் 3/4 பகுதிக்கும் மேலாக அங்கம் வகிப்பது வணிகவரிகளே.

மக்களிடமிருந்து வசூலிப்பதனால் ஏற்படும் வரிச்சுமையை மக்களின் அடிப்படைத் தேவைக்கான பொருட்கள் மீது வரியினை முழுவதுமாக நீக்கியும், நடுத்தர மக்கள் பயன்படுத்தும் பொருட்கள் மீது வ்ரி விகிதத்தைக் குறைத்தும், ஆடம்பரப் பொருட்களின் மீது அதிக வரி விதித்தும் தமிழக அரசு சமநிலை பேணி வருகிறது.

தொழில்களை ஊக்குவிப்பதனைக் கருத்தில் கொண்டு அரசு வரி விகித நிர்ணயம் செய்து வருகின்றது.

இவ்வாறு வரி விதிக்கப்பட்டதன் மூலம் வணிகவரி வருவாயில் 87 சதவீதம் ஆண்டொன்றிற்குக்கிடைக்கின்றது.

1976-77-ஆம் ஆண்டில் 55,653 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு ரூ. 1.74 கோடி அதிக வரி வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

# அரசுத் திட்டங்களின் வெற்றி

மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர்

**திரு டி. இராமசாமி**

1976-77-ஆம் ஆண்டில் வணிக வரித் துறை மூலம் வசூலித்த வரி ரூ. 255.58 கோடியாகும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின் பத்தாண்டு காலத்தில், 1986-87-ல் வரி வசூல் ஏறத்தாழ நான்கரை மடங்கு உயர்ந்து ரூ. 1172.44 கோடி வசூலிக்கப்பட்டது.

பொது மக்கள், வணிகர்களின் நலனை மனதில் கொண்டு ஏறத்தாழ 80 சதவீதப் பொருட்களை ஒருமுனை வரி விதிப்பின் கீழ் தமிழக அரசு கொண்டு வந்தது.

இந்த வகையில் உற்பத்தியாளரோ, மொத்த வணிகரோ பொருட்களுக்காக ஒருமுனை விற்பனை வரியைச்செலுத்திவிட்டால், சில்லறை வியாபாரியோ அல்லது பொது மக்களோ இப்பொருட்களை வாங்கும்போது தனியாக வரி ஏதும் செலுத்த வேண்டிய அவசியம் இருக்காது.

ஆயின், 1984-85-இல் 96,744 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு,தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் ரூ. 21.57 கோடி அதிக வரி வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் முதல்வராக 1977-இல் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், குடிசையில் வாழுகின்ற ஏழை உணவான பன், பொறை போன்ற பொருட்களுக்கும், தயிர், வெண்ணெய் ஆகிய வற்றிற்கும் வரி விலக்களித்ததோடு, கையினால் செய்யப்படுகின்ற எம்பிராய்டரிப் பொருட்களுக்கும் வரி விலக்களித்து ஏழை மக்களின் மனதில் மகிழ்ச்சியை ஊட்டினார்.

வெல்லம், பருத்தி, கம்பளித் துணி—இழை ஆகியவற்றின் வரி விகிதம் மூன்று சதவீதத்திலிருந்து இரண்டு சதவீதமாய் குறைத்ததும், தேங்காய் கொள் முதல் வரிக்கு விலக்கு அளித்ததும், ஆண்டிற்கு ரூ.50,000/-க்கு மிகாமல் விற்பனைத் தொகை இருக்கு

மாயின் குடிசைத் தொழிலாய்ச் செய்யப்படும் தீக்குச்சித் தொழிலுக்கு வரி விலக்களிக்கப் பட்டதும் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப்பின்தான்.

பழைய தங்கம், வெள்ளி நகைகளின் மீது கொள்முதல் வரியினை 2 சதம் ஆகக் குறைத்து நடப்பாண்டிலிருந்து முழுவதுமாக விலக்களிக்கப்பட்டுள்ளது.

கோழி இனத்தின் மீதான விற்பனை வரியும், கோவில் பிரசாதங்கள் மீதான விற்பனை வரியும் தமிழக அரசால் விலக்களிக்கப் பட்டுள்ளன.

1978-ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற ஐ. சி. எஸ். அதிகாரி திரு எஸ். ஆர். கெய்வார் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, வரி விதிப்பு முறைகள் நன்கு ஆய்வு செய்யப்பட்டு, அவற்றை எளிதாக்குவதற்கு வழிவகை காணப் பட்டுள்ளது.

ஏழைமக்களின் வாகனமான சைக்கிள்கள், சைக்கிள் ரிக்ஷாக்கள், அதன் உதிரி பாகங்கள் ஆகியவற்றின் மீதான வரி விகிதம் ஜூலை 1980 முதல் ஆறிலிருந்து மூன்று சதவீதமாய் குறைக்கப்பட்டுள்ளது.

அதே ஆண்டு ஜூலை மாதம் அரிக்கன் விளக்குகள், கை விளக்குகள், திரி ஸ்டவ், லாரல் மற்றும் லெமன் கிராஸ் எண்ணெய், அனைத்து வகையான மண்ணெண்ணெய் விளக்குகள், கண்ணாடி சிமினிகள் ஆகியவற்றிற்கும் வரி விலக்களிக்கப்பட்டன.

உணவு விடுதியில் விற்கப்படுகின்ற உணவுகள் மீது வரி விதிக்க மத்திய அரசு சட்டத் திருத்தம் செய்தபோதிலும் அக்டோபர் 1980 முதல் தமிழக அரசு இவ்வுணவுகளுக்கு வரி விலக்களித்தது.

துணிகளில் தைத்து விற்கப்படுகின்ற ஆடைகட்கும், பிற தைக்கப்பட்ட பொருட்கட்கும் 5 சதவீதத்திலிருந்து மூன்று சதவீதமாய் வரி விகிதம் குறைக்கப்பட்டுள்ளது.

15,000 மற்றும் அதற்குக் குறைவாக விற்பனை ஆகின்ற சிறிய செய்தித்தாள்களுக்கு உதவியாக, அவர்கள் வாங்குகின்ற தாள்கள் மீதான வரி எட்டு சதவீதத்திலிருந்து நான்கு சதவீதமாக 1981 ஏப்ரல் முதல் குறைக்கப்பட்டுள்ளது.

தேயிலைத் தொழிலை ஊக்குவிப்பதற்கு கோவை, குன்னூரில் நடைபெறுகின்ற தேயிலை ஏல விற்பனை வரி விகிதம் வெகுவாகக்குறைக்கப்பட்டுள்ளது.

இயற்கை எரி சக்தியினை ஊக்குவிப்பதற்கான சூரிய ஒளி, காற்று, தழை, சாணம் ஆகியவற்றை எரி சக்தியாக மாற்றிடும் கருவிகளுக்கு 1981 அக்டோபர் முதல் வரிவிலக்கும், இச்சக்தியினைச்சேமிக்கின்ற பொருட்களுக்கு 1984 ஏப்ரலிலிருந்து வரி விலக்கும் அளிக்கப் பட்டிருக்கின்றது.

முதியோர் அணிகின்ற கண்ணாடிகளுக்கும் அதன் உதிரிகட்கும் வரிவிலக்கு அளிக்கப் பட்டதோடு, குழந்தைகளின் பல் நலனைக் கருதி இலவச பற்பொடி வழங்குகின்ற திட்டத்திற்கு விற்கப்படுகின்ற பற்பொடிக்கும் வரி விலக்களிக்கப்பட்டுள்ளது.

பட்டுப்புழு வளர்ப்பதில் - தமிழகம் உயர்ந்த இடத்தைப் பெற்று வருகிறது. இத் தொழிலை மேலும் சிறப்பிக்க பட்டுப்புழு, பட்டு நூல், கச்சாப்பட்டு ஆகியவற்றிற்கு 1983 ஏப்ரல் திங்கள் முதல் வரி விலக்களிக்கப் பட்டுள்ளது.

தற்போது பெண்கள் அணிகின்றவெள்ளிக் கொலுசு, குழந்தைகள் அணிகின்ற வெள்ளி அரை ஞாண் இவைகளுக்கு வரி விலக்களிக்கப் பட்டுள்ளது.

தொழில் வளம் பெருகிட போக்குவரத்து வசதிகள் மிகவும் அவசியமாகும்.

அந்த வகையில் பயன்படுகின்ற டிரக், பேருந்துகள் சேசிஸ் மீது விதிக்கப்பட்டிருந்த 15 சதவீத வரி 9 சதவீதமாகவும், பின்னர் 6 சதவீதமாகவும் குறைக்கப்பட்டிருக்கிறது.

கைத்தொழில் தயாரிப்பான சலவை சோப்புகள், டிடர்ஜண்ட் கட்டிகள் விற்பனை, ஆண்டிற்கு இரண்டு இலட்சத்திற்கு மிகாமல் இருப்பின் வரி விலக்கு தரப்பட்டுள்ளது.

ஜிஞ்சர் கிராஸ் எண்ணெய், இருதயத் துடிப்பு அதிகரிப்பான், உலர்த்தியதேங்காய்ப் பூ ஆகியவற்றிற்கும் வரி விலக்களிக்கப்பட்டுள்ளது.

சிறிய வணிக உந்துகளின் மீதான வரியும் 15-லிருந்து 12 சதவீதமாய்க்குறைக்கப்பட்டுள்ளது.

மீனவர்களின் வறிய நிலைமையைக் கருத்தில் கொண்டு கருவாடு, நண்டு, தவளையின் கால்கள் ஆகியவற்றிற்கு, 1984 அக்டோபர் முதல் வரி விலக்களிக்கப்பட்டுள்ளது.

வேளாண்மைத் தொழிலை ஊக்கப்படுத்திட, இயற்கை உரத்திற்கும், சான்று அளிக்கப்பட்ட பருத்தி விதைகட்கும் வரி விலக்களிக்கப்பட்டதோடு, டிராக்டர்கள் மீதிருந்த 9 சதவீத வரியினை 6 சதவீதமாகவும், டிரையிலர்கள் மீதிருந்த 15 சதவீத வரியினை 9 சதவீதமாகவும், விசை சக்தியினால் செயல்படும் டில்லர்களின் மீதான வரியினை 8லிருந்து 6 சதவீதமாகவும், மினரல் மிக்சத்தின் 5 சதவீத பலமுனை வரியினை, ஒரு முனையின் கீழ் 3½ சதவீதமாய்க் குறைத்தும் தமிழக அரசு விவசாயிகளின் வரிச் சுமையை வெகுவாய்க்குறைத்துள்ளது.

மின்னணுவியல் தொழிலை வளர்க்கும் பொருட்டு, மின் அணுப் பொருட்கள் மற்றும் உதிரிகள் மீது, 1986 மார்ச் திங்கள் முதல் 6 சதவீதமாகவும், 1987 மார்ச் திங்கள் முதல் 4 சதவீதமாகவும், வரி குறைக்கப்பட்டுள்ளது.

ஜெனரேட்டர்கள் மற்றும் அதன் உதிரிகள் மீதான வரி 12-லிருந்து 8 சதவீதமாய்க்குறைக்கப்பட்டுள்ளது.

பால் உணவுப் பொருட்களின் மீது 4 சதவீதம் ஒரு முனை வரியாகவும், உயிர் காக்கும் மருந்துகள் 41-ன் மீது 8 சதவீதம் வரியிலிருந்து 4 சதவீதமாகவும், தமிழகத்தில்




முழு விவரங்களுக்கு, அருகிலுள்ள நியூ இந்தியா ஆபீஸ் அல்லது ஏஜெண்டோடு தொடர்பு கொள்ளுங்கள்.

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்

இன்சூரன்ஸ் — நஷ்ட காலத்தில் நம்பகமான ஆதரவு!

(ஜெனரல் இன்ஷ்யூரென்ஸ் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியாவின் துணை நிறுவனம்)

தயாரிக்கப்பட்ட 50 சிசி-க்குட்பட்ட மோட்டார் சைக்கிள்களுக்கு 4 சதவீதமாகவும், மற்ற மோட்டார் இரு சக்கர ஊர்திகளுக்கு 8 சதவீதம் வரியும் விதிக்கப்பட்டிருக்கின்றது.

வணிகர் பதிவு செய்வதற்கான வரம்பு ரூபாய் 50,000 என்பதனை 75,000 ஆக இவ்வரசு உயர்த்தியதோடு, வரி விதிப்பிற்கான குறைந்தபட்ச வரம்பினை ரூபாய் ஒரு இலட்சமாகவும் உயர்த்தியுள்ளது.

வரிக்கான வரம்பு ஒரு இலட்சம் முதல் இரண்டு இலட்சம் வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கேளிக்கை வரி விதிப்பில் மாநகராட்சி அல்லாத இடங்களில் இணைக்க வரி விதிப்பு முழுவதுமாகக் களையப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம், மற்றும், தமிழ்நாடு உள்ளாட்சி நிறுவனங்கள் நிதிச் சட்டம் ஆகியவற்றின் கீழ், தற்போது வசூலிக்கப்படுகின்ற ஆறு விதமான வரிகளுக்குப் பதிலாக ஒற்றை வரி விதிக்க அரசு முடிவு செய்திருக்கின்றது.

முதன் முறையாக தமிழகத்தில் உள்ள வணிகப் பெருமக்களின் கருத்தினை அறிந்து நிதி நிலை அறிக்கை தயாரிக்கும் வகையில் ஒரு குழு அமைத்து, அக்குழு தமிழகத்தில் உள்ள 110 வணிக சங்கப்பிரதிநிதிகளைச் சந்தித்துக் கோரிக்கைகளைப் பெற்றுப் பரிசீலித்துப் பரிந்துரை வழங்கியதையொட்டி 1987-88-ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருப்பது மிகுந்த மகிழ்ச்சிக்குரியதாகும்.

வணிக வரித்துறை அலுவலகங்கள் தனியார் கட்டடங்களில் இயங்கி வந்த நிலையினை மாற்றி அமைத்திட, பல இடங்களில் புதியதாகக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

1983-ஆம் ஆண்டு சென்னை கிரீம்ஸ் சாலையில் பேரறிஞர் அண்ணா பவள விழா நினைவுக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டு, வணிக வரித்துறையின் பல்வேறு அலுவலகங்கள் இங்கே பாங்குற இயங்கி வருகின்றன.

மாநில அளவில் வணிகர்களின் குறைகளைப் போக்கிடவும், அவர்களின் ஆலோசனை பெற்றுச்செயல்படுத்தவும், வணிகவரி அமைச்சர்(என்)தலைமையில் விற்பனை வரி ஆலோசனைக் குழு செயல்பட்டு வருகிறது.

இது போலவே மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஒரு குழுவும், மாநில அளவில் வர்த்தகர் உரிமை நல ஆலோசனைக் குழு ஒன்றும் இயங்கி வருகிறது.

வணிக வரி ஆணையர் அலுவலகத்தில் இணை ஆணையர் தலைமையில் குறைகள் தீர்க்கும் குழு ஒன்று இயங்கி, வணிகர்களின் குறைகளை அவ்வப்போது தீர்த்து வருகிறது.

இவ்வலுவலகத்தில் துணை ஆணையர் தகுதியில், மக்கள் தொடர்பு அலுவலர் வணிகர்களின் சங்கங்களுக்குத் தகுந்த விளக்கங்களை ஆணையரின் ஒப்புதலுடன் அவ்வப்போது அளித்து வருகிறார்.

கர்நாடக மாநிலத்தில் இருப்பதுபோல் கணிப்பக மையம் ஏற்படுத்துகின்ற பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

மக்களின் நலம், வளம் கருதி வணிக வரித்துறை ஆற்றுகின்ற பணிகளுக்கு ஒத்துழைப்பு நல்கவும், தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்கம் விளைவிக்காமல் தமது பங்கினை முறையாக வணிகப் பெருமக்கள் செலுத்திடவும், அரசின் திட்டங்களுக்கும், நோக்கங்களுக்கும் வெற்றி கிடைக்கின்ற வகையில் வணிக வரித்துறை அலுவலர்கள் பணியாற்றவும், இந்த நல்ல தருணத்தில் அன்பான வேண்டுகோளாக வைக்க விரும்புகின்றேன்.

நன்றி! வணக்கம்!

(''வளரும் தமிழ்நாடு'' வானொலி நிகழ்ச்சியில் மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் அவர்கள் 3-8-87 அன்று ஆற்றிய உரை)

## காணாமல்போன அரசு ஊழியரது குடும்பத்திற்கு உடனடி ஓய்வூதியம்

அரசு ஊழியர் எவரேனும் காணாமல் போக நேர்ந்தால் அவரது குடும்பத்திற்கு உடனடியாக ஓய்வூதியம் வழங்க, தமிழக அரசு ஆணையிட்டுள்ளது.

பொதுவாக அரசு ஊழியர் ஒருவர் காணாமற் போய், தகவல் ஏதும் கிடைக்காதிருந்தால் 7 ஆண்டிற்குப் பிறகுதான் ஓய்வூதியம் போன்ற சலுகைகள் அவரது குடும்பத்திற்குக் கிடைக்கும் நிலை இருந்து வந்தது. இதனால் காணாமற் போனவர்களது குடும்பத்தினர் மிகவும் சிரமப் பட்டனர்.

மத்திய அரசைப் பொறுத்தவரை மத்திய அரசு ஊழியர் எவரேனும் காணாமல் போனால் அவர்களது குடும்பத்தினருக்கு உடனடியாக அந்த மாத ஊதியம் அளிக்கப்படுகிறது. ஓராண்டிற்குப் பிறகு குடும்ப ஓய்வூதியம் வழங்கப் படுகிறது.

இது தொடர்பான மத்திய அரசின் உத்தரவுகளைத் தமிழக அரசு ஆராய்ந்தது.

மத்திய அரசு வழங்கும் இதே சலுகைகளை தமிழக அரசு ஊழியர்களுக்கும் உள்ளாட்சி அமைப்பு ஊழியர்களுக்கும் அரசு உதவிபெறும் கல்வி நிலையங்களின் ஊழியர்கட்கும் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

தமிழக அரசின் இந்த ஆணை 1986 ஜூன் 4 முதல் நடைமுறைப்படுத்தப்படுகிறது.



# அரசு ஊழியர்கள் பெறும் சலுகைகள்

அரசு ஊழியர்களின் ஊதிய விகிதங்களை திருத்தியமைப்பதற்காக ஏழு ஆண்டுகளுக்குள் இரண்டு ஊதியக் குழுக்களும், இரண்டு ஒரு நபர் குழுக்களும் நியமிக்கப்பட்டன.

பத்தாண்டுகள் பணிமுடித்த அனைத்து ஊழியர்களுக்கும் தேர்வு நிலை வழங்கப்பட்டு அதிகப்படியான ஊதிய விகிதம் நிர்ணயிக்கப்பட்டது.

இருபது ஆண்டுகள் பணிமுடித்த ஊழியர்களுக்குப் பதவி உயர்வுக்கு வாய்ப்பு இல்லாத பட்சத்தில் சிறப்பு நிலை அளிக்கப்பட்டது.

குறைந்தபட்சம் அடித்தள ஊழியர்களுக்கு அடிப்படைச் சம்பளம் ரூ. 450 என்று நிர்ணயிக்கப்பட்டது.

மத்திய அரசு ஊழியர்களுக்கு அமல்படுத்தி வரும் அகவிலைப்படிக் கொள்கையினைத் தமிழக அரசு ஊழியர்களுக்கும் முழுமையாக அமல்படுத்தப்பட்டது.

அரசு ஊழியர்களின் பிள்ளைகளைக் கல்லூரியில் படிக்க வைக்கும் செலவினங்களை ஈடுகட்ட ரூ. 1000 கடன் வசதி அளிக்கப்படுகிறது.

அரசு ஊழியர்கள் சைக்கிள் வாங்க கடன் ரூ. 800-ஆக உயர்த்தப்பட்டது.

அடித்தள ஊழியர்களின் குழந்தைகள் பள்ளி இறுதி வகுப்பு வரை படிக்க, பாடப் புத்தகங்களின் செலவினை அரசு ஏற்றுக் கொண்டது.

இயற்கையின் கோர விளைவினால் இன்னலுறும் அரசு ஊழியர்களுக்கு நிவாரணக் கடன் வழங்கப்படுகிறது.

கிராமப் புறங்களில் பணிபுரியும் அரசு ஊழியர்களை ஊக்கப்படுத்த தனிப்படியாக ரூ. 20 வழங்கப்படுகிறது.

அரசுப் பணியில் சேரும் வயது வரம்பு 28 ஆக உயர்த்தப்பட்டது.

'சி' மற்றும் 'டி' பிரிவு ஊழியர்களுக்குக் கண்பார்வை மங்கினால், கண்ணாடி பொருத்திக் கொள்ள எற்படும் செலவில் ரூ. 40ஐ அரசு ஈடுகட்டுகிறது.

காது கேளாத அரசு ஊழியர்களுக்கு, காது கேட்கும் கருவி பொருத்திக் கொள்ள ஏற்படும் முழுச்செலவினை அரசு ஏற்றுக் கொள்கிறது.

அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும் வயது 55லிருந்து 58 ஆக உயர்த்தப்பட்டது.

அரசு ஊழியர் பணிக்காலத்தில் இறந்து விட்டால், ரூ. 20,000 வழங்கப்படுகிறது.

அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும்போது குறைந்தபட்சம் ரூ. 5,000 முதல் அதிகபட்சமாக ரூ. 45,000 வரை பெறும் வகையில் ஊழியர் நலத்திட்டம் கொண்டுவரப்பட்டது.

நான்காண்டுகளுக்கு ஒருமுறை இரு வழிப் பயணச் சலுகையில் செல்ல அனுமதிக்கப்பட்டது.

ஈட்டிய விடுப்பில் செல்லாமல் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை 30 தினங்கள் துறந்து பணமாகப் பெற அனுமதிக்கப்படுகிறது.

31.12.77 வரையில் வேலை வாய்ப்பகத்தின் மூலமாக நியமனம் செய்யப்படாத பல்லாயிரக்கணக்கான பணியாளர்களின் பணி வரன்முறை செய்யப்பட்டது.

அரசு ஊழியர்களின் குழந்தைகளுக்குத் திருமணம் செய்ய வழங்கப்படும் திருமணக் கடன் ரூ. 3,000 ஆக உயர்த்தப்பட்டது.

ஒய்வூதியம் ரூ. 300 வரையில் அரசுச் செலவில் பண அஞ்சல் மூலமாக அனுப்பப்பட உத்தரவிடப்பட்டுள்ளது.

ஒய்வூதியம் பெறுவோருக்கு மருத்துவப் படியாக ரூ. 15 வழங்கப்படுகிறது.

ஒய்வூதியம் பெறுவோர் ரூ. 100 பண்டிகை முன்பணம் பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

1.4.77-க்கு முன்னர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வராத குடும்பங்கள் அனைத்திற்கும் குடும்ப ஓய்வூதியம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இறந்த அரசு ஊழியரின் குடும்பத்திற்கு குடும்ப ஓய்வூதியமாக குறைந்தபட்சம் ரூ.235, அதிகபட்சம் ரூ. 800 வழங்கப்படுகிறது.

ஓய்வூதியம் பெறுவோரின் குறைகளைத் தீர்க்க, தனியாக ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆசிரியர்களுக்கும் நகராட்சிப் பணியாளர்களுக்கும் ஓய்வூதியம் உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள சுமார் 4.64 இலட்சம் கடல் மீனவர்களில் சுமார் ஒரு இலட்சம் மீனவர்கள் மீன்பிடி தொழிலில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். மேலும் 60,000 பேர்கள் தமிழ்நாட்டில் உள்நாட்டு மீன் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர்.

தலைமைச் செயலகத்தில் இரகசிய உதவியாளர் தரம் 1ல் பணிபுரிபவர்களின் தேர்வு நிலை ஊதியம் ரூ. 1575-2685 என்று நிர்ணயிக்கப்பட்டது.

வேளாண்மை வருமானவரி அலுவலரின் ஊதியம் ரூ. 1160-1950 எனவும் தேர்வுநிலை ரூ. 1340-2435 ஆகவும் உயர்த்தப்பட்டது.

மாவட்ட சேமிப்பு அலுவலரின் ஊதியம் ரூ. 1160-1950 எனவும் தேர்வு நிலை ரூ. 1340-2435 ஆகவும் உயர்த்தப்பட்டது.

கைத்தறி அலுவலரின் தேர்வு நிலை ஊதியம் ரூ. 1160-1950 எனவும் துணிநூல் கட்டுப்பாடு அலுவலரின் ஊதியம் ரூ. 1160-1950 எனவும் தேர்வுநிலை ரூ. 1340-2435 எனவும் உயர்த்தப்பட்டது.

மோட்டார் வாகனப்பராமரிப்புத்துறை தொழில் நுட்ப உதவியாளரின் ஊதியம் ரூ. 1160-1950 என்றும் தேர்வுநிலை ஊதியம் ரூ. 1340-2435 என்றும் உயர்த்தப்பட்டது.

மோட்டார் வாகனப் பராமரிப்புத்துறை பொது போர்மேன் ஊதியம் ரூ.1160-1950 என்றும் தேர்வு நிலை ஊதியம் ரூ. 1340-2435 என்றும் உயர்த்தப்பட்டது.

மோட்டார் வாகனப் பராமரிப்புத்துறையில் இரும்புப் பரிசோதகரின் ஊதியம் ரூ. 1045-1775 என்றும் தேர்வு நிலை ஊதியம் ரூ. 1160-1950 ஆக உயர்த்தப்பட்டது.

மோட்டார் வாகனப் பராமரிப்புத்துறையில் ஸ்டோர் அட்டண்டராக பணிபுரிவரின் ஊதியம் ரூ. 555-970 என்றும் தேர்வு நிலை ஊதியம் ரூ. 610-1075 ஆகவும் உயர்த்தப்பட்டது.

சென்னை போன்ற பெருநகரங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நகர ஈட்டுப்படி மற்றும் வீட்டு வாடகைப்படி கணிசமான அளவுக்கு உயர்த்தப்பட்டது.

மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை அகவிலைப் படி சம்பளத்தில் சேர்க்கப்படும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் பிரிவு அலுவலர்களுக்கு ரூ.100 சிறப்புப்படியாக வழங்கப்படுகிறது.

அரசு ஊழியர்கள் வீடுகட்டப்பெறப்படும் முன் பணம் ரூ. 1 இலட்சத்து 50 ஆயிரம் வரையில் பெற உயர்த்தப்பட்டது.

சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அப்பாற்பட்டு, தற்காலிகமாகப் பணிபுரிந்து வந்த 12,000 பேர்களை தேர்வாணைக் கழகத் தேர்வுக்குச் செல்லாமல் பணியினை 25.6.84-ல் நிரந்தரம் செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டது.

அரசுப் பணியின் பொருட்டு வெளியூர்ப் பயணம் மேற்கொள்ளும் ஊழியர்களுக்கு வழங்கப் பெறும் பயணப்படி விகிதம் உயர்த்தப்பட்டது.

அரசு ஊர்தி ஓட்டுநர்களுக்கு 'கைத்தறி பாலியஸ்டர்' சீருடை வழங்கப்படுகிறது. பணிக்காலத்தில் இறந்து விடும் அரசு ஊழியர் அரசுக்குச் செலுத்த வேண்டிய கடன்கள் இருந்தால், அவற்றைத்தள்ளுபடி செய்ய உத்தரவிட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியம், நகராட்சிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக்கப்பட்டுள்ளனர்.

தமிழக அரசில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களுக்கும் பொங்கல்பரிசு ஒரே சமமாக ரூ 300 வழங்கப்பட்டது.

அரசுப் பெண் ஊழியர்களுக்குப் பேறு கால விடுப்பு 90 நாட்களாக உயர்த்தப்பட்டது.

ரேடியோ இயந்திரத்தினை இயக்கும் பணியாளர்களுக்குச் சிறப்பு ஊதியமாக ரூ. 20 வழங்கப்பட்டது.

அடித்தள ஊழியர்களுக்கு வழங்கப்படும் சலவைப்படி ரூ. 15 ஆக உயர்த்தப்பட்டது.

மலைப்பகுதிகளில் பணிபுரியும் அரசு ஊழியர்களுக்கு மலைப்படி வழங்கப்படுகிறது.

அரசு ஊழியர்களுக்கு இறப்பு ஓய்வூதியப் பணிக்கொடை ரூ. 36,000லிருந்து ரூ.50,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூ. 235 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

(இன்னும் வரும்)

# தொண்டுக் கருவூலம் காந்தி ஆசிரமம்

இந்திய வரலாறு ஆசிரமத்தின் பிறந்து வளர்ந்ததாகும். கண்வ முனிவர் ஆசிரமத்தில் உதித்த பரதன் பெயரை நாடு தாங்கி நிற்கிறது. இராமாயணம் வால்மீகி ஆசிரமத்தில் தோன்றியது. அக் காவிய நாயகனின் வீர வரலாறும் விசுவாமித்திரன் ஆசிரமத்தில்தான் துவங்கியது. இராமராஜ்யம் காணவிழைத்த மகாத்மா காந்தியும், சாத்வீக வீர வரலாற்றைச் சபர்மதி ஆசிரமத்திலிருந்து ஆரம்பித்தது இயற்கையே. இராமாயணமும், மகாபாரதமும் வள்ளுவமும் புனைந்த ராஜாஜியும் தென்னாட்டு வரலாற்றுக்கு ஒரு ஆசிரமத்திலிருந்தே புதுத்திருப்பம் கொடுத்தார். அரை நூற்றாண்டுக்கு முன் ராஜாஜி, திருச்செங்கோட்டுக்கு அருகில் புதுப்பாளையத்தில் காந்திஆசிரமத்தைத்தோற்றுவித்தார். 1919-லேயே மகாத்மா காந்தி சக்கரஸ்தாபனம் செய்ததன் பலனே இது! சென்னை கதீட்ரல் சாலையில் ராஜாஜி வசித்துவந்த நாளில் நடந்தது. ஒரு, கை ராட்டினத்தையும், நூற்பதற்குரிய பஞ்சையும் ராஜாஜியின் இருப்பிடத்தில் விட்டுச் சென்றார். காந்திஜி இதே இடத்திலிருந்துதான் தன் வருங்கால சாத்விகப் புரட்சியின் முதல் அம்பை எய்தார்; கதர் இயக்கத்துக்கும் அரசியல் போராட்டத்துக்கும் அடிகோலியாகிவிட்டது. ராஜாஜிக்கும், காந்திஜிக்குமிடையில் இணக்கமும்மலர்ந்தது. சுதந்திர இயக்கத்தின் உயிரும், அறிவும் ஒன்றிவிட்டன.



அரசியலில் அன்னிபெஸன்டின் அன்னை வசந்த மாதாவின் - உள்நாட்டு சுயாட்சி இயக்கம் ஓங்கி இருந்த காலம். பால்-லால்-பால் (திலகர் லாலாலஜபதிராய், விபின் சந்திரபால்) தலைமையில் தீவிரவாதிகள் போராடத் துடித்துக் கொண்டிருந்தனர். திலகர் மறைந்தார். நாட்டின் தலைமை மகாத்மா காந்தி கைக்கு வந்தது.

1924 பிப்ரவரியில் காந்தி சேவா சங்கத் துவக்கம்தான், காந்தி ஆசிரமத்துக்கும் கொடியேற்றம் போன்றது. தமிழ்நாட்டில் ராஜாஜி ஆசிரமம் துவக்கியது போலவே, பாட்னாவில் ராஜேந்திரபிரசாத் ஸதாகத் ஆசிரமம் அமைத்தார். சர்தார் வல்லபாய் பட்டேல் பர்டோலியில் ஸ்வராஜ்ஆசிரமம் ஆரம்பித்தார். தேனாபாண்டேயின் குடீர் ஆசிரமம் பெல்காமில் பிறந்தது.

சேலம் மாவட்டத்தில் திருச்செங்கோட்டுக்கு 7 மைலில் உள்ளது புதுப்பாளையம். 12 மைல் போனால்தான் சங்கரிதுர்க்கத்தில் ரயில் ஏறலாம். புதுப்பாளையம் மிட்டாதார் பி.கே.ரத்தின சபாபதி கவுண்டர் இங்கு நிலம் கொடுத்தார். இதையே முதல் பூதானம் என்று கொள்ளலாம். அவர் காந்தி ஆசிரமத்துக்காக 4 ஏக்கர் நிலம் நன்கொடையாக அளித்தார். அதில் குடிசைகள் போட்டு, கட்டடங்கள் கட்டும் வரை ரத்தினசபாபதி கவுண்டரின் வீட்டிலேயே சிறிது காலம் ஆசிரமம் நடந்துவந்தது. அவரும் அவரது மனைவி நல்லம்மாளும் ராஜாஜியிடம் வைத்திருந்த அன்புக்கும், மதிப்புக்கும் எல்லையே இல்லை. ராட்டையில் நூற்பது தங்கள் மரபு என்று ஊராரும் கொண்டாடினர். புஞ்சை நிலங்கள்தான் அதிகம். சுற்றுப்புற கிராமங்களில் நிறைய நெசவாளிகள் இருந்தனர். ராஜாஜியின் சீலமும், எளிமையும் ஆசிரமவாசிகளைப் போலவே மக்களையும் வசீகரித்தது.

ராஜாஜி ஆன்மாவும், காந்தி மரபும் ஒருங்கேஅமைந்த தொண்டுக் கருவூலம் காந்தி ஆசிரமம்.



# அண்ணலின் வாழ்விலே

தன் கையே தனக்கு உதவி என்பதில் காந்தியடிகள் பெரிதும் நம்பிக்கை கொண்டிருந்தார். அவர் இங்கிலாந்தில் மாணவராக இருந்த காலத்தில் தம்முடைய காலை உணவைத் தாமே சமைத்துக் கொள்வது வழக்கமாக இருந்து வந்தது.

தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் எளிய வாழ்க்கையையே மேற்கொள்ள விரும்பினார். வாழ்க்கைச் செலவுகளைக் குறைத்துக் கொள்ளுவதற்காகப் பல அலுவல்களைத் தாமே மேற்கொள்ளவேண்டும் என்பதையும் அவர் உணர்ந்தார். முதலில் தமது உடைகளைத் தாமே தோய்த்துக் கொள்வதென்ற முடிவுக்கு அவர் வந்தார். அக்கலையைத்தாம்பயின்றதுடன், கஸ்தூரி பாய்க்கும் கற்றுக்கொடுத்தார். நாளடைவில் அவர் அக்கலையில் தேர்ந்தவர் ஆனார்.

இதேபோன்று காந்தியடிகள் முடிவெட்டும்கலையிலும் தேர்ச்சி பெற்றார். பிரிட்டோரியாவில் உள்ள வெள்ளைக்கார முடி திருத்தும் தொழிலாளி ஒருவர் காந்தியடிகளின் முடியைத் திருத்த ஒரு சமயம் மறுத்தார். அதுகண்டு மிகவும் மனம் நொந்து உடனடியாக முடிதிருத்தும் சாதனங்களை வாங்கித் தாமே முடி வெட்டிக் கொள்ளலாயினார். முன்முடியை ஒருவாறு திருத்திக் கொள்ள முடிந்த போதிலும், பின்முடி பற்றிய மட்டில் அவரால் சரியாக வெட்டிக்கொள்ள முடியவில்லை. இறுதியில் அக்கலையிலும் அவர் தேர்ந்தவர் ஆனார்.

## உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்

"உயிரினங்கள் அனைத்தும் ஒன்று என்பதில் நான் அசையாத உறுதி கொண்டிருக்கிறேன்....... கீழ்வகைப்பட்ட உயிரினங்கள் மீது நாம் ஆதிபத்தியம் செலுத்தி வருவது, அவற்றைக் கொல்வதற்காக அல்ல. அதற்கு மாறாக பரஸ்பர நலன்தான்முக்கியமாகக் கொள்ளப்படவேண்டும். ஏனெனில், என்னைப்போன்று அவற்றுக்கும் ஒரு ஆன்மா நிச்சயம் இருப்பதாக நான் கருதுகிறேன்" என்று காந்தியடிகள் கூறுவார்.

உதாரணமாக, பசுவை எடுத்துக்கொள்ளுங்கள் காந்தியடிகள் அதைக் கருணையின் கவித்துவ ரூபமாகக் கருதி வந்தார். அவரது கண்களில் பசு, கீழ்வகைப்பட்ட உயிரினங்களுக்குப் பிரதிநிதியாக இருந்து வந்தது. விவசாயிகள் பல விஷயங்களுக்குக் கால்நடைகளையே பெரிதும் நம்பியுள்ளனர். அதனால்தான் இந்துக்கள் புனிதமானதொரு பொருளாகக் கருதி வருகின்றனர்; பசுவியினிடத்திலும் இதரப் பிராணிகளிடத்திலும் எத்தகையதொரு கொடூரத் தன்மையையும் காட்டி வரலாகாது. காட்டுவதும் தவறானதாகும் என்று அவர் கருதி வந்தார்.

பசுவுக்கு எந்த ஒரு வகையிலும் தீங்கு விளைவித்தாலும் காந்தியடிகளால் பொறுக்க முடியாது. கடைசித் துளிவரை பாலைக் கறப்பதில் அதற்குத் துன்பம் ஏற்படுவதனால், ஆவின் பாலைச் சாப்பிடுவதையே அவர் நிறுத்திவிட்டார். பசு வதையையும் அவர் எதிர்த்து வந்தார். எப்படிப் பார்த்தாலும் அது தவறானதொரு காரியமாகும். பசுவைச் சிறந்த வகையில் பராமரித்து வருவதே அதன் வதையைத் தடுப்பதற்கான சிறந்த முறையாகும். நலிந்துபோன பிராணிகளைக்கூட பராமரித்துவரவேண்டும் என்று நமக்கு மதம் போதிக்கிறது.

பிராணிகளை வதைப்பதை, முக்கியமாக தீங்கு விளைவிக்காத பிராணிகளைக் கொல்லுவதை நியாயமானதென்று அவர் கருதவில்லை; "நான் எப்படி பசு ஒன்றைக் காப்பதற்காக மானிடன் ஒருவனைக் கொல்ல மாட்டேனோ, அதேபோன்று மனித உயிரை அது எவ்வளவு மதிப்பு மிக்கதாய் இருந்தபோதிலும் காப்பதற்காகப் பசுவைக் கொல்லமாட்டேன்".

மருத்துவ விஞ்ஞானச் சாதனைகளின் பெயரில் வலியோ உபாதையோ தரக்கூடியதும் சிதைவையோ மரணத்தையோ விளைவிக்கக் கூடியதுமான சோதனைகளுக்குப் பிராணிகளைப் பயன்படுத்துவதை காந்தியடிகள் எதிர்த்து வந்தார். இளம் வயதில், தாம் பிற்காலத்தில் ஒரு டாக்டராக வேண்டுமென்று அவர் ஆசை கொண்டிருந்தார். ஆனால், தவளைகளையோ வேறு இதரப் பிராணிகளையோ அறுத்து, சோதனை செய்வதற்கு அவர் மனம் ஒப்பவில்லை; ஆதலால் அந்த எண்ணத்தைக் கைவிட்டுவிட்டார்.

பிராணிகளுக்குச் சேவை செய்வதில் காந்தியடிகள் ஆழ்ந்த அக்கறை காட்டிவந்தார். மனிதன் தனக்குள்ளான துன்பம் பற்றிப் பிறருக்கு விளக்கிக் கூறமுடியும். அத்துன்பத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளவும் அவனால் இயலும்; ஆனால் பிராணிகளால் அவ்வாறு செய்யமுடியாது. எனவே, பிராணிகளுக்குக் கொடுமைவிளைவிக்காமல் இருப்பது மிகச் சிறப்பான மத அனுஷ்டானமாகும் என்று காந்தியடிகள் கூறுவார்.

## தன்னல மறுப்பு

அண்ணல்காந்தி அடிகள் தென்னாப்பிரிக்காவில் எட்டாண்டுகள் வாழ்ந்து அங்குள்ள தம் நாட்டு மக்களுக்கு அரும் பெரும் சேவை செய்த பின்னர் 1901-ஆம் ஆண்டில் இந்தியாவிற்குத் திரும்ப முடிவு மேற்கொண்டார். பிரியாவிடை கொடுத்த தென்னாப்பிரிக்க இந்தியர்கள் அவருக்குப் பாராட்டுகளை அளித்ததுடன் பெருமளவிலான அன்பளிப்புகளையும் அளித்தனர்; மாலைகளுடன் பொன்னாலான பல்வேறு அணிகலன்கள், கைக்கடிகாரங்கள் முதலியவற்றைப் பெற்று வந்தார். அந்த அன்பளிப்புகளில் கஸ்தூரிபாய்க்கெனவும் அழகிய வேலைப்பாடமைந்த தங்கச் சங்கிலிகள்- முதலியவை பல சேர்ந்திருந்தன.

அவற்றைப் பார்த்து அன்னை பெருமகிழ்ச்சி கொண்டிருந்தார்.

ஆனால் பாபு சிந்தனையில் ஆழ்ந்தார். இத்தனை அன்பளிப்புகளையும் தமக்கெனவும் ஏற்றுக் கொண்டது முறைதானா என்று சிந்திக்கத் தொடங்கினார். பயன் கருதாமல் சமுதாயத்திற்குச் செய்யப்பட்ட உழைப்புக்கு ஊதியமோ, பரிசோ, ஏற்றுக் கொள்ளுவது அறத்திற்குப் புறம்பானது என முடிவு செய்து கொண்டு அவற்றை ஒரு பொது அறநிலையத்திற்கு அளித்து விடுவதெனத் தீர்மானித்தார். ஆனால் பாபு இதற்கு முழுதும் ஒப்பவில்லை. தமது வாழ்நாளில் எத்தகைய பொருளும் சேமிக்காது பொது வாழ்வு வாழ்ந்து விட்டுப் பொதுமக்களின் அன்பளிப்புகளையாவது தங்களுக்கென்று வரவிருக்கும் மருமக்களுக்குப் பயன்படுத்தலாமே என விழைந்தது அந்தத் தாயுள்ளம். அதற்கும் மறுப்பளித்தார் காந்தியடிகள். பாபுவின் பொதுச் சேவையில் தன் பங்கும் பெருமளவு இருப்பதால் தனக்கென அளித்த நகைகளையாவது தனக்குக்கொடுத்துவிட்டால், தனியாக அவற்றை வைத்திருப்பதாகக் கெஞ்சிக் கேட்டார் அன்னை. ஆனால் தியாகத்திற்கு இலக்கணம் வகுத்த அடிகள் இதற்கெல்லாம் சிறிதும் செவி மடுக்கவில்லை. பொருள்களின் பட்டியல் எடுக்கப்பட்டது. அணிகலன்கள் ஒரு வங்கியில் ஒப்படைக்கப்பட்டுப் பொதுப்பணிக்கென்று பயன்படுத்தப்பட்டன.

## என்றுமே மாறாத புன்னகை

உலக வரலாற்றிலேயே பாபுவினைப் போன்று பெருஞ்சுமைகளையும், பொறுப்புக்களையும் தாங்கி நின்றவர்கள் மிகச்சிலரே. ஆனால் தமது நித்தியமான மோகனப் புன்சிரிப்பின் சிறப்பால் எல்லாத் துயரங்களையும் வெற்றி கண்டார். பாபுவின் நகைச்சுவைக்கு அவரது தன்னம்பிக்கை, கடவுள் நம்பிக்கை, அனைத்தும் நன்மைக்கே என்பதில் அசையாத உறுதி, எவற்றிலும் உயர்வே காணுந் தன்மை ஆகிய பண்புகள் அடிப்படைகளாக நின்றன. அவருடைய நகைச்சுவை நிகழ்ச்சிகள் ஏராளம்.

காந்தியடிகளின் டாக்டர் நண்பரொருவர் தம்முடையபற்களை இழந்திருந்தார். பாபு அதுபற்றிக் குறிப்பிட்டு "என்னைப் போன்று இருப்பவர்கள் பொக்கை வாயராக இருக்கலாம் என்றும், இதற்கு வைத்தியம் செய்விப்பவர்களுக்குப் பற்கள் இல்லாதிருந்தால் யாரைப்போய் நம்புவது என்றும் வேடிக்கையாகக் குறிப்பிட்டார்.

1931-ஆம் ஆண்டு லண்டன் சென்றிருந்தபோது பிரபல திரைப்பட நடிகர் சார்லிசாப்ளின் அவரைக் காண வந்திருந்தார். தம்மைப்பற்றி ஏதும் கேள்விப்பட்டதில்லை என்று கூறிய பின்னரும் அரைமணி நேரத்திற்குமேல் அவர்கள் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தனர். காந்தியடிகள் தனது நகைச்சுவையின் மூலம் நகைச்சுவை நடிகரையே சிரிப்பில் ஆழ்த்திக் கொண்டிருந்தார்.

## உடல் உழைப்பின் உயர்வு

'இடைவிடாது உழைப்பில் ஈடுபட்டு வருவதாலேயே மகிழ்ச்சியோடு வாழ்கிறேன்' என்றார் காந்தியடிகள். உழைப்பு தான் அவரது வெற்றியின் ரகசியம். அவ்வுழைப்பில் வேற்றுமைக்கு இடமில்லை. கீழானதெனக் கருதப்பட்ட தொழிலைச் செய்பவர்களும் சமுதாயத்திற்கு ஒத்ததொரு சேவையைத்தான் செய்கிறார்கள். இதனை வலியுறுத்தவே காந்தியடிகள் கீழானதெனக் கருதப்பட்ட தொழிலையும் மகிழ்வோடு செய்தார். துப்புரவு வேலையாகட்டும், தோட்டி வேலையாகட்டும், செருப்புத் தைக்கும் தொழிலாகட்டும் திறமையோடு செய்தவர் காந்தியடிகள். தன்னைச் சிறைப்படுத்திய ஜெனரல் ஸ்மட்ஸுக்கு சிறைக்காலத்தில் அழகிய காலணிகளைத் தயாரித்து அன்பளிப்பாகக் கொடுத்தார்: முடி திருத்தும் பணியினையும் மனமுவந்து செய்தார்.

உழைப்பின் மேன்மையைப் புகட்டவே ஆசிரமங்கள் பல நிறுவினார். அதில் பங்கு கொள்ளும் எவரும் எத்தொழிலையும் மேற்கொள்ளத் தயங்கக்கூடாது என்பது அவர் கொள்கையாகும்.

உழைப்பின் உயர்வினை வலியுறுத்தும் சின்னமாக இராட்டையைச் சிபாரிசு செய்தார். அறிவுத் துறையில் உழைப்பவர்கள் கூட உடலுழைப்பை ஓரளவாவது செய்வதுடன் தன் தேவையினைப் பூர்த்தி செய்யும் வழியையும் கற்பித்தார். அவர், தானே நூற்று, நெய்து ஆடைகளை அணிந்து கொண்டதுடன் அவரது ஊழியர்களையும் இவ்வழியில் ஊக்கினார். மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களின் திருமணத்திற்கு பாபுவின் அன்பளிப்பு அவரது கையால் நூற்ற நூலினால் தயாரிக்கப்பட்ட கதராடைதான்.



## அண்ணலின்

## அமுத

## மொழிகள்!

சத்தியமே
என் கடவுள்;
அகிம்சையே அதைக் காணும் வழி.

* * *

அன்பு என்பது ஒரு போதும் கேட்பதில்லை; எப்பொழுதுமே கொடுக்கும்.

* * *

பெண்களின் நிலை உயரும் போது ஆண்களின் நிலையும் உயரும்; இவ்விருவரின் நிலையும் உயரும் போது மனித சமுதாயத்தின் நிலையே உயர்ந்து விடும்.

* * *

இந்தியாவிற்குத் தேவையானது ஒரே மாதிரியான நல்ல ஆடை அல்ல; ஒரே மாதிரியான நல்ல இருதயமே!

* * *

உங்கள் எண்ணங்களை ஒரு போதும் ஒளித்து வைக்காதீர்கள். அவற்றை வெளியே சொல்வது கேவலமானது என்றால் அவற்றை எண்ணுவது இன்னும் கேவலமானது.

* * *

ஏழைகளுக்குத் தொண்டு புரிவதே என் உள்ளத்தில் குடிகொண்டிருந்த பெருவிருப்பமாகும். இவ்விருப்பமே என்னை எப்பொழுதும் ஏழைகளிடத்தில் கொண்டு போய்ச் சேர்த்தது. ஏழைகளுடன் கலந்து அவர்களில் ஒருவனாகும் ஆற்றலையும் எனக்குத் தந்தது.

* * *

மனிதனைப் பிடிக்கும் நோய்களிலெல்லாம் மிகமிகக் கொடியது—மோசமானது— அச்சம் எனும் நோய்தான்.

## ஆதிதிராவிடர் - மலைவாழ் மக்கள்

# புதிய வீட்டு வசதி

உணவு உடையுடன் தங்குவதற்கான இருப்பிடமும் மனிதனின் குறைந்தபட்சத் தேவையாகக் கருதப்படுகிறது. இதனைக் கருதிய ஐக்கிய நாடுகள் மன்றம் 1987-ஆம் ஆண்டை ''வீடற்றவர்களுக்கு வீடுவழங்கும் அனைத்துலக ஆண்டாக'' அறிவித்துள்ளது. வளரும் நாடுகளுக்கும் இவ்வறிவிப்பிற்கும் நெருங்கிய சிறப்பான தொடர்பு உள்ளது. குடியிருக்க வீடு அளிக்கப்படுவதென்பது வளரும் நாடுகளின் ஒரு மிகப்பெரிய வாழ்க்கைப் பிரச்சினையாகும். நகாப்புறங்களிலும் கிராமப் புறங்களிலும் இருப்பிடங்கள் மிகவும் குறைவாகவே உள்ளன. கட்டுப்பாடு இல்லாத, மற்றும் திட்டமில்லாத நகர்ப்புற வளர்ச்சியினால் நிலைமை சீரற்று உள்ளது.

வீடற்றவர்களுக்கு வீடு வழங்கும் ஆண்டாக, ஐக்கிய நாடுகள் மன்றம் 1987-ஆம் ஆண்டை அறிவித்ததால், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வீடற்றவர்களுக்கு வீடு வழங்கும் திட்டம் மிகச்சிறப்பான வரவேற்பைப் பெறுகிறது. கி. பி. 2000வது ஆண்டிற்குள் வீடில்லாதவர்களுக்கு வீடு வழங்கும் குறிக்கோளை நிறைவேற்றுவதில் இந்தியா திடமான ஓர் உறுதியுடன் இருக்கிறது.

இந்தியாவின் தற்போதைய இருப்பிடங்களின் மொத்தத் தேவை 287 இலட்சமாகும். இதில் 188 இலட்சம இருப்பிடங்கள் கிராமப்புறங்களிலும், 99 இலட்சம் நகர்ப்புறங்களிலும் தேவையாக உள்ளன.

இந்தியாவில் கிராமங்களில் வாழும் மக்களின் எண்ணிக்கையே அதிகம். இவர்களில் ஆதிதிராவிடர்களும் மலைவாழ் மககளும் அடங்குவர். உறைவிடம் என்பது நிலையாக வாழ சில வசதிகளுடன் கூடிய உறுதியான தங்குமிடமாகும். இந்திய நிலையில் சேரிகளில் வாழ்வோர், தெரு ஓரங்களில் வாழ்வோர், கிராமப்புறத் தொழிலாளிகள், கைவினைஞர் ஆகியோரே வீடற்றவர்களாகக் கருதப்படுவர். மக்களுக்கு வீடு அளிக்க வேண்டுமென்பது புதிய இருபது அம்சத் திட்டத்தில் பதினான்காவது அம்சமாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளினின்றும் வேறுபட்ட சூழ்நிலை ஏதும் தமிழகத்தில் இல்லை. இருந்தாலும் கிராமப்புறங்களில் வீடுகட்டும் பல்வேறு திட்டங்களினால் தமிழகம் பெருமையடையக் கூடிய நிலையில் உள்ளது. வீட்டு மனையை அளித்து, அதில் மனை அளிக்கப்பட்டவராலேயே வீடு கட்டிக்கொள்ளுதல் ஒரு முறை. வீடு மனை சொந்தக்காரருக்கு அரசின் நிதியுதவியுடன் வீடு கட்டித் தருதல் இரண்டாம் முறை. இவ்விரண்டு முறைகளில் வீடு கட்டும் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இலவச வீட்டுமனை வழங்கும் திட்டத்தினால் எண்ணற்ற கிராமப்புற மக்கள் பயன்பெற்றுள்ளனர். கிராமப்புற நிலமற்ற ஏழை மக்களுக்கு வீடு கட்டும் பணியில் ஆதிதிராவிடர் நலத்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை ஈடுபட்டுள்ளன. இதனால் வீடற்ற ஏழைகளின் கனவு நனவாகிறது.

வறுமை ஒழிப்புத் திட்டங்களான திட்டமும், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்புறுதித் திட்டமும் கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பு அளித்து வளம்பெறச் செய்வதுடன், வீடற்ற ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினருக்கு வீடு கட்டியும் வசதி செய்கிறது. அந்தந்தப் பகுதிகளில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டும், மனித உழைப்பு ஆற்றல் கொண்டும் ஒப்புதல் அளிக்கப்பட்ட வடிவமைப்பில் வீடுகள் கட்டப்படுகின்றன.



**கருகிட இருந்த அரும்பு மலர்த்தது போல-தேய்ந்த நிலவு திடீரென முழுமதியானதுபோல. ஒரு நாட்டின் வரலாற்றிலேயே ஏற்படுகின்ற உன்னதமான சம்பவம் சுதந்திரம் !**

1983-ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வரும் வறுமை ஒழிப்புத் திட்டமான ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் கிராமப் புறங்களில் ஒரு மாற்றத்தையே ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டம் வறுமையை எதிர்பபதுடன் கிராம வாழ்க்கையில் ஒரு புதிய சூழ்நிலையையே உருவாக்குகிறது. தனிப்பட்ட மற்றும் சமுதாயச் சொத்துக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித்திட்டம் மற்றும் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் முக்கிய அங்கமாக உள்ள கிராமப்புறங்களில் தொகுதி `வீடுகள் கட்டும் பணி உண்மையிலேயே வீடற்ற ஆதிதிராவிட மற்றும் மலைவாழ் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். கிராமங்களில் சொந்த நிலங்களில் உருவாக்கப்பட்ட வீடுகள் வரிசை வரிசையாகவும், சுத்தமாக அமைக்கப்பட்ட தெரு மற்றும் பின்கட்டுடன் கூடியதாகவும் உள்ளன. ஓர் அறைகொண்ட வீடானது காங்கிரீட் தரையும் ஒரு ஓடு போட்ட மேற்கூரையும் இருப்பதால் ஒரு சிறிய குடும்பத்திற்கு அடக்கமான வீடாக அமைகிறது.

சமவெளியில் ஒரு வீட்டிற்கு ரூ. 10,200-ம், மலைப்பகுதியில் ரூ. 12,000-ம் ஆகும். இதில் கழிவு நீருக்கு வசதி செய்தல், குடிநீர் வழங்கல், இணைப்புச் சாலைகள், நிலத்தை மேம்படுத்துதல் போன்ற செலவுகளும் அடங்கும்.

கடந்த மூன்றாண்டுகளில் ரூ. 5475.71 இலட்சம் செலவில் 62,369 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டிற்காக ரூ. 1970 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் மொத்த ஒதுக்கீட்டில் கிட்டத்தட்ட இது 50 சதவீதமாகும்.

கட்டப்படும் வீடுகள் தொகுதியாக அல்லது வரிசையாக வீடுகளுக்கு இடையே போதுமான இடைவெளியுடனும் கட்டப்படுகின்றன. பொதுவாக, கட்டப்படும் தொகுதி வீடுகளின் நிலம் அந்தந்த கிராமத்தின். பகுதியாக அமைந்துவிடுவதால் வீடுகள் கிராமத்தினின்று வேறுபட்ட தோற்றத்துடன் இருப்பதில்லை. இவ்வகை வீடுகளில் வசிக்கும் மக்களுக்குத் ''தனிமையான'' இடத்தில் வாழ்கின்ற உணர்வு ஏற்படுவதில்லை. இந்த வீடு கட்டும் திட்டம் உண்மையிலேயே வீடற்ற, நிலமற்ற கிராம மக்களுக்கு ஒரு பெரும் வாய்ப்பும் வசதியுமாகும்.

# ரத்தம் தந்தோம்





ரெ. நாகராசன்
உதவி ஆணையர், காவல்துறை, அடையாறு

[ '87 ஜூலையில் 1000க்கு மேற்பட்ட காவலர்கள் ரத்த தானம் செய்ததை மையமாகக் கொண்டு தொகுக்கப் பட்ட கவிதையாகும் ]

சென்னைநகர் காவலர்கள் ரத்தம் தந்து
சென்னையையே ரத்தத்தில் மிதக்க விட்டார்!
சென்னை வாழ் மருத்துவ மனையனைத்தும்
சிந்திய நல் ரத்தத்தால் மூழ்க டித்தார்!

''இன்று போய் நாளைவா'' என்று ராமன்
இராவணன் முன்னன்று சொன்ன துண்டு
அன்றுபோல் சென்னையில் டாக்டர் இங்கு
''இன்று போய் நாளைவா'' என்ற துண்டு!

குருதியைக் காவலர் சிந்தும் செய்கை
குவலய மாந்தர்க்குப் புதிதே அல்ல
கருவினில் உருவாகும் போதே ஈசன்
காவலர்க் கவன் இட்ட கட்டளையாம்!

நிலையாக நீதிதனைக் காக்கும் போதும்
நிலைகெட்ட கலகத்தில் தாக்கும் போதும்
கொலைகளவு செய்வோரைப் பற்றும் போதும்
கூடவே காவலரின் ரத்தம் சிந்தும்!

''இரத்தமில்லை என்றிட்ட அட்டை தன்னை
எமதருமைக் காவலர்கள் தூக்கிப் போட்டார்;
இறக்குமுயிர் அத்தனையும் காப்போ மென்று
இவர் தனது மேனியிலே காக்கி போட்டார்!

புத்தீசல் போல் கூடி ரத்தம் தந்து
''புதுக் குருதி'' ஏரியெனத் தேக்கிப் போட்டார்
மொத்தத்தில் இவ்விலக்கை எட்டா வண்ணம்
முடிவிலாச் சாதனையை ஆக்கிப் போட்டார்!

பொது மக்கள் போலீசார் தொடர்பு வேண்டி
பூமியிலே நிகழ்ச்சி பல நாமெடுத்தோம்
புது விதமாய் ரத்தத்தைத் தானம் தந்து
புதிய தொரு சரித்திரம் தாம் படைத்தோம்!

ரத்தமிலா மேனியெலாம் போலீசாரின்
ரத்தமது ஓடுவதே ஒருமைப் பாடாம்
''ரத்தத்தின் ரத்தமெனச்'' சொல்லி வைத்த
ரகசிய மந்திரமே தமிழூர் வீடாம்!



# பழங்காலக் காசுகள் சேகரிப்பு

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையின் தருமபுரி அருங்காட்சியகம் பழங்காலக் காசுகள் சிலவற்றையும் இரண்டு முத்திரைகளையும் அண்மையில் சேகரித்துள்ளது. பழங்காலக் காசுகளில் பல இடங்களிலும் கிடைக்கும் இராஜராஜனுடைய ஈழக்காசு, (காலம் பத்தாம் நூற்றாண்டின் இறுதி) முதற்கொண்டு பிற்காலத்தில் வெளியிடப்பட்ட ராமடங்கா 8 காசுகள் அதில் உள்ளன. கி.பி. 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழன் காசும் அதில் உள்ளது.

ஏறத்தாழ கி.பி. 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ராமடங்கா என்ற வெள்ளிக்காசு இதில் குறிப்பிடத்தக்கது எனலாம். பொதுவாக ராமடங்காகாசுகளை அடையாள நாணயங்களாக (டோக்கன்) முதன் முதலில் அயோத்தியாவில் தயாரித்தார்கள். பெரும்பாலும் அயோத்தியாவிலும் மற்ற முக்கியமான வட இந்திய யாத்திரைத் தலங்களிலும் விற்பனையில் இக்காசுகள் இருந்துள்ளன. ஒருபுறம் இராம இலட்சுமணர் உருவங்களும் ஓரத்தில் தேவநாகரியில் எழுத்துக்களும் இக்காசுகளில் இருக்கும். மறுபுறம் இராமர் பட்டாபிஷேகக் காட்சி பொறிக்கப்பட்டிருக்கும், வட்டமாகப் பெரிய அளவில் இக்காசு உள்ளது.

மற்றொரு காசு, முஸ்லீம் காசாகும். அராபி எழுத்தில் இருபுறமும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ஒருபுறம் லா-இலாஹ - இல் அல்லாஹா - முகம்மத் ரசூல் அல்லா ஹா (அல்லாவையன்றி வேறு கடவுள் இல்லை; அல்லாவின் நபிதான் முகமது) என்றுள்ளது. மறு புறத்தில் முகம்மத் ரையாது ஷா வலதுல் பதுா என்ற சொற்களுடன் ஹிஜிரி ஆண்டு 988 என்று உள்ளது. இக்காசு கி.பி. 1618ல் வெளியிடப்பட்டது எனலாம். வெள்ளியில் செய்யப்பட்ட இக்காசு சதுரமாக உள்ளது. தஹதிப்புசுல்தான் காசும் இக்காசுகளில் குறிப்பிடத் தக்கதாகும். அன்னப்பறவை போன்ற உருவமுள்ள பிற்காலக் காசும் இதில் உள்ளது.

வட்டமான செம்பினாலான வேலைப்பாடுடன் கூடிய முத்திரை ஒன்று குறிப்பிடத்தக்கதாகும். அம்மன் உருவம் நின்ற நிலையில் ஒரு புறமும், அமர்ந்த நிலையில் மறு புறமும் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் எடை 60 கிராம்.

மேலும் வைணவ பிராமணர்கள் தன் உடம்பில் குத்திக் கொள்ளும் முத்திரையும் இவற்றில் உள்ளது. இக் காசுகளையும் முத்திரைகளையும் தருமபுரியைச் சேர்ந்த திரு. டி.கே. ஸ்ரீராமுலு, தொல்பொருள் அலுவலர் திரு ச. கிருஷ்ணமூர்த்தியிடம் நன்கொடையாக வழங்கினார்.

தருமபுரி விருப்பாட்சிபுரத்தில் வாழும் ரூபில் என்கிற முருகேசன் என்பவர் திப்பு சுல்தான் காசு ஒன்றையும் வைணவ மந்திரம் பொறிக்கப்பட்ட முத்திரையையும் வழங்கி உள்ளார். வைணவர்கள் பயன்படுத்தும் செம்பாலான இம்முத்திரையில் தேவ நாகரியில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ''ஓம் ஓம் நமோ நாராணாய ஓம்'' என்றுள்ளது. இம் முத்திரையும் 200ஆண்டுப்பழமை உடையதாகும்.

**பி. பிச்சையா**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**தர்மபுரி.**

---

## மலைவாழ் மக்களுக்கு இலவச இடுபொருட்கள்

**கோயம்புத்தூர் அருகே மலைவாழ் மக்கள் அதிகமாக வாழும் அணைக்கட்டில் நடந்த (ஆகஸ்டு '87) விழாவில் மாண்புமிகு மைய அரசின் இணை அமைச்சர் திரு ஆர். பிரபு அவர்கள் வேளாண் இடு பொருட்களை 150 குடும்பங்களுக்கு இலவசமாக வழங்கினார். இதே விழாவில், மலைவாழ் மக்களுக்காக 'இப்கோவின்' சார்பில் ஆலமரத்துப்பட்டியில் சமுதாயக்கூடம் அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டது.**





# கம்ப்யூட்டர் மூலம் பேருந்துப் பயணச்சீட்டு முன்பதிவு

பேருந்துப் போக்குவரத்தைச் சிறப்பாகச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது.

தமிழ்நாட்டில் துரித வேகப் பேருந்துகளை இயக்குவதற்கென உருவாக்கப்பட்டது திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம். இக்கழகம் தமிழ்நாட்டிலும் அண்டை மாநிலங்களிலும் 750 பேருந்துகளை இயக்கி வருகிறது. சென்னையிலிருந்து மட்டும் 350 பேருந்துகள் சென்று வருகின்றன.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் சென்னை மத்தியப் பேருந்து நிலையத்தில் நாள்தோறும் 4 ஆயிரம் பயணச் சீட்டுகள் முன்பதிவு செய்யப்படுகின்றன. சில சமயங்களில் முன்பதிவுக்காக ஏறத்தாழ 1 மணி நேரத்திற்குக் குறையாமல் காத்திருக்க வேண்டி இருந்தது.

பயணிகளுக்கு ஏற்படும் இச் சிரமத்தைத் தவிர்க்கும் வகையில் கம்ப்யூட்டர் முறையில் பயணச் சீட்டு வழங்கும் புதியமுறை தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக ஓரிரு நிமிடங்களில் முன்பதிவு செய்து கொள்ளக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

ரூ.10 இலட்சம் செலவில் அமைக்கப்படும் இந்தக் கம்ப்யூட்டர் சாதனத்தால் ஒரே சமயத்தில் 1 இலட்சத்து 20 ஆயிரம் இருக்கைகளுக்கு முன்பதிவு செய்யமுடியும். மேலும் எந்த ஊருக்கும் எந்த கவுண்டர்களில் நின்றும் முன்பதிவு செய்து கொள்ளமுடியும்.

இந்த வகையான வசதி ஆசியாவிலேயே முதன்முறையாக சென்னையில்தான் அமைக்கப்பட்டுள்ளது.

கம்ப்யூட்டர் மூலம் பயணச் சீட்டு வழங்கும் புதிய முறையை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சு.முத்துசாமி அவர்கள் 14.9.87 அன்று சென்னை பாரிமுனை விரைவுப் பேருந்து நிலையத்தில் துவக்கி வைத்தார்.

இவ்விழாவில், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் புதிதாக அறிமுகப்படுத்தப்படும் தொடர் பேருந்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார். ரூ.5 இலட்சம் செலவிலான இரண்டு பெட்டிகளைக் கொண்ட இப்பேருந்தில் 125 பேர் உட்கார்ந்து பயணம் செய்யலாம். இப்பேருந்து தாம்பரம் - செங்கல்பட்டு வழித்தடத்தில் விடப்படுகிறது.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்காக ரூ.2 கோடி செலவில் வீடுகள் கட்டும் திட்டத்திற்கான அடிக்கல்லையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாட்டினார். இத்திட்டத்தால், கூடுவாஞ்சேரி பகுதியில் 25 ஏக்கர் நிலத்தில் 450 போக்குவரத்துத் தொழிலாளர்கள் வீட்டுவசதி பெறுவர். இந்த வீட்டு வசதித் திட்டம் விரைவில் மதுரை, சேலம், திருச்சி, நாகப்பட்டினம் ஆகிய ஊர்களிலும் செயல்படுத்தப்பட உள்ளது.

மேலும், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிறுவனத்திற்கு வைப்புத் தொகை வழங்கியவர்களுக்கு நன்றியும் சிறப்பாகச் சேவை புரிந்தவர்களுக்குப்பாராட்டும் இவ்விழாவில் தெரிவிக்கப்பட்டது.

போக்குவரத்துத்துறை ஆணையர் மற்றும் அரசுச் செயலர் திரு ஏ.கே. வெங்கடசுப்பிரமணியன் இ.ஆ.ப. அவர்கள் இவ்விழாவில் தலைமை ஏற்றார்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சு.முத்துசாமி அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''மக்களின் வசதியை அடிப்படையாகக் கொண்டு கம்ப்யூட்டர் மூலம் முன்பதிவு செய்யும் முறை இப்பேருந்து நிலையத்தில் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வசதி விரைவில் சென்னை நகரிலுள்ள மற்ற முக்கிய இடங்களிலும் ஏற்படுத்தப்படும். திருச்சி, கோவை, மதுரை, நாகர்கோவில், பெங்களூர் ஆகிய ஊர்களுக்கும்விரிவுபடுத்தப்படும்.

''மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் ஆட்சியில் போக்குவரத்துத் துறையின் சாதனைகள் பெருகி உள்ளன. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தில் 1977ல் 4½ கோடி ரூபாய் அளவுக்கு டெபாசிட் செய்யப்பட்டிருந்தது. இப்பொழுது இதன் டெபாசிட் தொகை ரூ.100 கோடியைத் தாண்டியுள்ளது.

''இந்நிறுவனத்தில்1000ரூபாய் டெபாசிட் செய்தால் 30 ஆண்டுகள் கழித்து ரூ.1 இலட்சம் திரும்பப் பெறலாம். இத்திட்டத்தில் தொழிலாளர்கள் சேர்ந்து பயன் பெற வேண்டும்.

''சென்னையில் உள்ள திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பணிமனை புதுப்பிக்கப்பட இருக்கிறது. மேலும் மற்ற நகரங்களிலுள்ள இக்கழகத்தின் பேருந்து நிலையங்கள் புதுப்பிக்கப்படுவதுடன் பயணிகளுக்குக் கூடுதல் வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

''திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப்பேருந்துகளை மேலும் சரியாக இயக்க, 'வயர்லெஸ்' மூலம் எல்லா டெப்போக்களையும் இணைக்கும் ஏற்பாடு இந்த ஆண்டுக்குள் முடிந்துவிடும்''

விழாவிற்கு வருகை தந்தோரை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் மு.கோடீசுவரன் வரவேற்றார். தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் திரு. எஸ்.பால சண்முகம் நன்றி நவின்றார்.

—நமது செய்தியாளர்

இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழகத்திற்குத் தனிப்பங்கு உண்டு. தாய் நாட்டுக்காகத் தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தத்தம் செய்த பெருமக்களின் எண்ணிக்கை கணக்கிலடங்காது. அந்தத் தியாக தீபங்கள் ஒரு சிலரின் வரலாறு இங்கே தொகுத்துக் கூறப் பட்டுள்ளது.

# தியாக தீபங்கள்



வட ஆர்க்காடு மாவட்ட விடுதலை வீரர்களின் பணி சிறப்பு மிக்கது. 1926-27-ஆம் ஆண்டு நடைபெற்ற நாகபுரி கொடிப் போராட்டத்தில் பங்கு கொண்டதற்காகத் திருவண்ணாமலை அண்ணாமலைப்பிள்ளை, வேலூர் வி.கே.குப்புசாமி, வேலூர் அ. குப்புசாமி முதலியார் போன்ற தலைவர்கள் கைது செய்யப்பட்டு சிறைத்தண்டனை பெற்றனர். வேலூர் உபயதுல்லா, அரக்கோணம் ராஜகோபாலன், தியாகி கிருஷ்ணசாமி நாயுடு, ராணிப்பேட்டை கல்யாண ராமய்யர், சீனிவாசராவ் ஆகியோரும் சிறந்த தொண்டாற்றினார்கள், விடுதலைப் போருக்கு.

வி.ஜி.ராஜமாணிக்க முதலியார், வாலாஜா சுந்தரவரதன், வல்லம் கிருஷ்ணசாமிநாயுடு, போளூர் காசிமல்லி நாயுடு போன்ற தியாகிகளும் விடுதலைப் போரில் பாடுபட்டவர்கள்.

## முதற்களப் பலி

சுதந்திரப்போர் புரியும் படி இந்தியச் சிப்பாய்களைத் தூண்டி விட்டதற்காக, மங்கள் பாண்டே என்ற இளஞ் சிங்கத்தைப் பிரிட்டிஷார் தூக்கிலிட்டனர். சுதந்திர யுத்தத்தில் முதன்முதலாகத் தன் உயிரைத் தியாகம் செய்த அந்த வீரத்தியாகியைப் பாரதநாட்டு மக்கள் என்றும் மறக்கமுடியாது.

## மகாத்மா காந்தி கதர்நிதி திரட்டுவதற்காக வட ஆர்க்காட்டிற்கு வருகை

30.8.27ல் மகாத்மா காந்தியடிகள் தனது துணைவியார் கஸ்தூரி பாவுடனும், ராஜாஜி, சங்கர்ராவ், தேஷ்பாண்டே ஆகியவர்களுடனும் 3.9.27 வரை கதர் நிதி வசூல், பிரச்சாரம் ஆகியவற்றுக்காக மாவட்டம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்தார்.



# வட ஆர்க்காடு மாவட்டம்

திலகர் சகாப்தத்திலே விடுதலைப்போருக்குத்தமிழ்நாட்டின் பங்கு வ.உ.சியும், சிவாவும் சிறை புகுந்தார்கள் என்றால், காந்தி சகாப்தத்திலே, வேலூரில் இராஜாஜியும், சுப்பிரமணிய சாஸ்திரியும் சிறை புகத் தொடங்கினார்கள் எனலாம்.

வேலூர் மத்திய சிறையில் தான் விடுதலைப் போராட்ட வீரர்கள் எல்லாம் அடைக்கப்பட்டிருந்தனர். உலகப்புகழ் பெற்ற வடபுலத்தலைவர் பலரும் வேலூர் சிறையில் இருந்திருக்கின்றனர்.

வடபுலத்தில் சிப்பாய்ப் புரட்சி தோன்றுவதற்குமுன் ஆங்கிலேயருக்கு எதிராகச் சிப்பாய்ப் புரட்சி நடந்தது வேலூர்க்கோட்டையில் தான்.

## காந்தி சகாப்தம்

1919-மார்ச்சு 20, 21 தேதிகளில் சென்னையில் சத்தியாக்கிரகக் கமிட்டி நிறுவப்பட்டது. அதற்கு காந்திஜி தலைவராகவும், கஸ்தூரிரங்கையங்கார், விஜயராகவாச்சாரியார், உபதலைவர்களாகவும், சி. ராஜகோபாலாச்சாரியார் உள்ளிட்ட 4 பேர் செயலாளர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அதன் செயற்குழுவில் வட ஆர்க்காட்டின் சார்பில் ஆரணி சுப்பிரமணிய சாஸ்திரியார் அங்கம் வகித்தார். அதில் குத்தி கேசவப்பிள்ளை என்பவரும் மிகவும் அக்கறை காட்டி மிகவும் ஒத்துழைத்தார்.

## மகாத்மா பாராட்டிய மௌன குருசாமி

மௌனசாமிகள்: ஊரில்லார்; பேரில்லார்; சித்தோ, ரசவாதமோ, அற்புதமோ, செய்ததில்லை. ஆனால் ஆக்கவழி தேசபக்தர்; வாய் பேசாமலே மெய் வேலைசெய்யும்

காந்தியடிகளாலேயே மதிக்கப் பட்டவர்—

''நாட்டிலுள்ள மற்ற துறவிகளும் அவரைப் பின்பற்றினால் பெரும் நன்மையாகும்.''

—என்று 'யங் இந்தியா' வில் 1927-ல் காந்தியடிகள் தமிழ் நாட்டுக்கு வந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டு திரும்புகையில் மவுன குரு சுவாமிகளை மேற்கண்டவாறு பாராட்டி இருக்கிறார்.

# தென்னார்க்காடு மாவட்டம்

## தெய்வத்தாய்
## அஞ்சலை அம்மாள்

தென்னாட்டில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் 'கடலூரில் அஞ்சலையம்மாளைத் தெரியாத தேசபக்தர் இருக்கமாட்டார். குள்ளமான, ஆனால் பருமனான உருவம். நிறைய மஞ்சள் பூசி, பெரிய குங்குமப் பொட்டுவைத்து மங்களக் கலைபொலியும் முகம். மாறாத புன்முறுவல். தடித்த கதர்ச்சேலை. நிமிர்ந்த நன்னடை; நேர்கொண்ட பார்வை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறியில் மணம்வீசும் பேச்சு. இவரைப் பார்க்க கிராமப் பெண்கள் கூட்டம், படை படையாக வரும். இந்த மாவட்டப் பெண்கள் இவரை ஒரு தெய்வப் பெண்ணாகவே எண்ணினர். மெல்லிய குரலில், கிராமிய நடையில் இனிமையாகப் பேசுவார். இவர் பேச்சில் பெண்கள் வசீகரிக்கப்பட்டு தேச பக்தி கொண்டவர்களாகி விடுவர் எந்த இடத்திலும், எந்த நிலையிலும் எந்த அதிகாரி முன்னரும் கலங்காது நீதியில் நின்று போராடும் வீராங்கனை யாவார். இவருடைய கணவர் முருகப்படையாட்சியும் தீவிர தேசபக்த தியாகி. எளிய கிராம விவசாயி. அஞ்சாமையும், கடமையும் இயல்பாகக் கொண்டவர். இவர் மகளுக்கு 'லீலாவதி' என்ற இனிய பெயரை காந்தி மகான் வைத்தார். வீட்டில் வைத்த பெயர் அம்மாப்பெண். இந்தப் பெண் வார்தா ஆசிரமத்தில் இருந்தவர்.



முருகப் படையாட்சி 1927 வரை குடிப்பழக்கம் உள்ளவராக இருந்தார். சூதாட்டத்திலும் ஈடுபடுவார். 1927ல் காந்திஜி கெடில நதிக்கரையில் பேசியதைக் கேட்டு அன்றே குடியையும், சூதையும் இனித் தொடுவதில்லை என்று பிரமாணம் செய்து புது மனிதராக மாறி சத்தியாக்கிரகியானார்.

அஞ்சலையம்மாள் குடும்பம் முழுதுமே தேச விடுதலையில் ஈடுபட்டுப் பாடுபட்ட தியாகக் குடும்பம்.

லீலாவதி ஒன்பது வயதுப் பெண்ணாகத் தாயுடன் நீலன் சிலை சத்தியாக்கிரகப் போரில் இறங்கிவிட்டாள். இந்தச் சிறுமிக்கு 4 ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டது.

கள்ளுக்கடை இருக்குமிடமெல்லாம் அச்சிட்ட குடியை கைவிடத் தூண்டும் நோட்டீஸ்களை வழங்கிக் கொண்டே அஞ்சலையம்மாள் மறியல் செய்வார்.

தேச விடுதலை இயக்கத்தில் தன்னலம் மறந்து பாடுபட்ட இந்தக் குடும்பத்தைப் பலகாலம் வறுமை வாட்டி வதைத்தது. இவர்களின் வீடு கடனால் ஏலத்திற்கு வந்து விட்டது. ஒரு புண்ணியவான் கடன் அடைத்து வீட்டைக் காப்பாற்றிக் கொடுத்தார்.

அஞ்சலையம்மாள் 20.2.1961 இல் அமரரானார்.

# திருச்சி மாவட்டம்



## தியாகி அருணாச்சலம்

சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றதால் பிரிவு 188-ன் கீழ் 1930-ல் கைது செய்யப்பட்டு 6 மாதங்கள் சிறைத் தண்டனையும், 1933- குற்றச் சாட்டுத் திருத்தச்சட்டத்தின் கீழ் 6 மாதச் சிறைதண்டனையும், இந்தியபாதுகாப்புச்சட்டம் 1941 இன் கீழ் 2 மாதச் சிறைத் தண்டனையும், இந்தியப் பாதுகாப்பு சட்டம் 1942-ன் கீழ் ஓராண்டு சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டு 1942-ல் சிறைக் கைதியாக திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், அலிப்புரம், வேலூர் சிறைகளில் தண்டனை அனுபவித்துள்ளார்.

## திருச்சி சுப்பையா

தனியொருவர் சத்யாக்கிரகப் போரில் பங்கேற்றார்.

ஆகஸ்ட் இயக்கம், 1941.

1942-ல் இந்தியப் பாதுகாப்புச் சட்டம் 1941-ன் கீழ் கைது செய்யப்பட்டு 1 மாத சிறைத் தண்டனை பெற்றார். சென்னை மத்தியச் சிறைச்சாலையில் தண்டனையை அனுபவித்தார்.



# இராமநாதபுர மாவட்டம்



## காந்தி அஸ்தி மண்டபம்

திருச்சி பொது மருத்துவமனை அருகே அண்ணல் காந்தியடிகளின் அஸ்திக் கலசம் வைக்கப்பட்டு எழுப்பப்பட்ட நினைவு மண்டபம்.

சுதந்திரப் போராட்டத்தில் ஆற்றிய தொண்டு திருவேகம்பத்து சமஸ்தான அலுவலகத்தைத் தீயிட்டுக் கொளுத்தியதால் மதுரை ஜெயிலில் 6 மாதமும் பெல்லாரி ஜெயிலில் 3 ஆண்டுகளும் தண்டனை அடைந்துள்ளார். 7 ஆண்டுக் கடுங்காவல் தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்கப்பட்டதில் 3½ ஆண்டு ஜெயிலில் இருந்துள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியைச் சார்ந்த (எம்மே கிராமம்) திரு வேலுச்சாமித் தேவர் 10-12-1941-இல் மதுரையில் வெளிநாட்டுத் துணிகள்



கலந்து, கைது வாரண்டு பிறப்பிக்கப்பட்டு தலைமறைவாகி ஒரு ஆண்டுக்காலம் வெளியில் இருந்த மற்ற சுதந்திர இயக்கத் தோழர்களுடன் இயக்கப் பணியில் இரகசியமாக ஈடுபட்டார்.



இராமநாதபுரத்தைச் சார்ந்த திரு. ஆர். கே. ராமகிருஷ்ணன் அவர்கள் மத்திய அரசு ஓய்வூதியம் ரூ. 500, மாநில அரசு ஓய்வூதியம் ரூ. 100 பெற்று வருகிறார். 1930-ல் வேலூர் ஜெயிலில் ஓராண்டு பெல்லாரி, அலிப்புரம் ஜெயிலில் 6 மாதங்களும் இருந்துள்ளார்.

இராமநாதபுரம் மாவட்ட சருகனி பிர்க்காவைச் சார்ந்த திரு. எம். துரைக்கண்ணு அவர்கள், மத்திய அரசு ஓய்வூதியம் ரூ. 500, மாநில அரசு ஓய்வூதியம் ரூ. 100 பெற்று வருகிறார்.



பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். 1942 செப்டம்பர் 10 முதல் 1943 மார்ச்சு 9 வரை மதுரை மத்திய சிறைச்சாலையில் சிறைத்தண்டனை அனுபவித்தார். தற்பொழுது கிழக்கு இராமநாதபுரம் சுதந்திரப் போராட்ட வீரர் சங்கத்தின் தலைவராக உள்ளார்.

மத்திய அரசு சுதந்திரப் போராட்ட வீரர் ஓய்வூதியம் ரூ. 500, மாநில அரசு ஓய்வூதியம் ரூ. 100 பெற்று வருகிறார்.

திருவாடானையைச் சார்ந்த திரு எம். ஏ. மகாலிங்கம் அவர்கள் மத்திய அரசு சுதந்திரப் போராட்ட வீரர் ஓய்வூதியம் ரூ. 500 பெறுகிறார். 11 வயதில் சுதந்திர இயக்கத்தில் ஈடுபட்டுள்ளார். தமது 13-வது வயதில் திருவாடானையில் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில்



உப்புச் சத்தியாக்கிரக - 144 தடையை மீறியதற்காகக் காஞ்சிபுரத்தில் கைதாகியுள்ளார்.




வடக்கே இமயம் முதல் தெற்கே குமரி வரை பரந்து கிடக்கின்றது பாரதம். கன்னியா குமரியில் முக்கடலும் முத்தமிடும் தென் கோடி முனையிலே அமைந்துள்ளது, தேசப் பிதா மகாத்மா காந்தியடிகளுடைய நினைவு மண்டபம். இந்த மண்டபம் 20-6-1954-ஆம் நாளன்று, மறைந்த திரு. ஆச்சார்யா கிருபளானி அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, 30-10-1956-இல் மேதகு கேரள ஆளுநர் திரு பி.எஸ். ராவ் அவர்களால் திறந்து வைக்கப்பட்டதாகும். இம்மண்டபம் கேரள அரசால் நிறுவப்பட்டதாகும்.

1948-ஆம் ஆண்டு பிப்ரவரித்திங்கள் 12-ஆம் நாள், மகாத்மா காந்தியடிகளின் புனித அஸ்தி, நினைவு மண்டபம் அமைந்திருக்கும் இடத்தில்தான் பார்வைக்காக வைக்கப்பட்டு பூசைகள் செய்து, பின்னர் மண்டபத்தின் தென்பகுதியில் இந்து மகாசமுத்திரத்தில் கரைக்கப்பட்டது. ஆண்டுதோறும் காந்தி பிறந்த நாளாம் அக்டோபர் 2-ஆம்நாள் பகலவனின் கதிர்கள் பகல் 12 மணி முதல் 12.20 முடிய மண்டபத்தின் உட்புறம் அமைந்துள்ள அஸ்தி பீடத்தின்மேல் விழுகின்ற அழகான காட்சி பார்வையாளர்களை வியக்க வைப்பதோடு சிந்திக்கவும் செய்கின்றது.

ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 2-ஆம் நாளில் சூரியனின் கதிர்கள் மேற்குறிப்பிட்டுள்ள நேரத்தில் அஸ்தி பீடத்தின்மேல் விழுகின்ற வகையில் நினைவு மண்டபம் அமைக்கப்பட்ட விதம் ஆச்சரியமாகவுள்ளது.

மகாத்மா காந்தியடிகளின் அறிவுரைகளின்படி, இன, மத வேறுபாடின்றி அனைத்து மதங்களையும் பிரதிபலிக்கும் வகையில் மண்டபம் நிறுவப்பட்டுள்ளது. இதன் முன் பகுதி கிருத்துவர்களுடைய ஆலயமாகவும், நடுப்பகுதி இந்துக்களுடைய கோயிலின் கோபுர அமைப்புக்கொண்டதாகவும் அடுத்து உட்பகுதி முஸ்லீம் மதத்தினருடைய ஜும்மா பள்ளி வாசல் அமைப்பாகவும் மிக கண்ணியமான முறையில் காட்சியளிக்கின்றது. இது பார்வையாளர்களின் எண்ணத்தினைக் கவரும் வண்ணம் அமைந்துள்ளது.

15-1-1937-ஆம் நாளன்று மகாத்மா காந்தியடிகள் கன்னியாகுமரிக்கு வருகை தந்தபோது 'கடலின் எதிரேயுள்ள குமரி முனையிலிருந்து இதனை எழுதுகிறேன். முக்கடலும் கூடி உலகத்தின் இணையற்ற எழிற் காட்சியைத் தருகின்றன. ஏனெனில், இது கலங்களை அழைக்கும் கடற்கரையல்ல. இத் திரு நீலத்துக்குமரி அன்னையைப் போலவே சூழ்ந்துள்ள கடல் நீரும் கன்னித் தன்மை பெற்றதே' என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

இம்மண்டபத்தின் முன்பகுதி உயரம் 78 அடி ஆகும். மண்டபத்தின் பின் பகுதியில் தான் முக்கடல்கள் (இந்து மகா சமுத்திரம், அரபிக்கடல், வங்காள விரிகுடா) சங்கமம் ஆகின்றன.

# கன்னியாகுமரி மாவட்டம்



## விடுதலை வீரர் இராமசாமி

சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்ட பெரியவர் திரு டி. எஸ். ராமசாமி அவர்கள் 8-6-1918 அன்று தேரூரில் சிவ சுப்பிரமணியபிள்ளை- ஆறுமுகம் அம்மாள் அவர்களுக்குப் புதல்வராகப் பிறந்தார்.

1942 ஆகஸ்ட் 8-ஆம் தேதி மகாத்மாகாந்தி உள்பட தேசியத் தலைவர்கள் பம்பாயில் கைது செய்யப்பட்டனர் என்ற செய்தி இந்திய தேசமெங்கும் அன்றிரவே பரவியது. இமயம் முதல் குமரி வரை எங்கும் மாணவர்கள், வாலிபர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் எல்லோரும் கொதித்தெழுந்தனர். 'செய்யுங்கள் அல்லது செத்து மடியுங்கள்' என்ற காந்திஜியின் இறுதி ஆணையைச் சிரமேற்கொண்டு லட்சுமணபுரி பல்கலைக்கழக மாணவர்களும் போராட்டத்தில் குதித்தனர். ஆகஸ்ட் 9-ம் தேதி காலையில் திரு டி. எஸ். இராமசாமி தலைமையில் மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்திலிருந்து அணி வகுத்து லட்சுமணபுரி அமீனுபாத் மைதானத்திற்குச் செல்கையில் நகரத்தினையும் பல்கலைக்கழகத்தையும் இணைக்கும் மங்கி பிரிட்ஜ் என்ற பாலத்தில் குதிரை வீரர், காலாட்படையினர், வெள்ளை ராணுவம் ஆகியோரால் தடை செய்யப்பட்டனர். பின்னர் தடியடிப் பிரயோகம் நடந்தது. மாணவர்கள் படுகாயமடைந்தும் முன்னோக்கிச் சென்றனர். துப்பாக்கிப் பிரயோகமும் நடந்தது. மாணவர் உலகமே இந்தியா எங்கும் கொதித்தெழுந்தது.

சிறையிலிருந்து விடுதலைக்குப் பின்னர் தலைமறைவாயிருந்த திரு. அச்சுத் பட்டவர்த்தன், அருணா ஆசப்அலி ஆகியோருடன் சென்னையில் தொடர்புகொண்டு கோவை, மேட்டூர், சென்னை ஆகிய இடங்களில் தொழிலாளர் இயக்க வேலைகளில் ஈடுபட்டார்.

## விடுதலை வீரர் இளங்கோ

சுதந்திரப் போராட்டத்தில் விடுதலை வீரர் சி.பி.இளங்கோ பங்கு

''நான் சிறுவனாக இருந்த காலத்தில் எனது தந்தை திரு

சி. கே. பிரம்மநாயகம் பிள்ளை, கன்னியாகுமரி தொகுதியைச் சார்ந்த சிறைமடம் என்ற ஊரில் வாழ்ந்து வந்தார். எங்கள் ஊர்ச் சுவர்களில் 'வந்தே மாதரம்' என்று எழுதப்பட்டிருந்ததைப் பார்த்து நான் என் தந்தையிடம் அதன் பொருள் என்ன என்று கேட்டறிந்து கொண்டேன். அப்பொழுது என் தந்தையும் எங்கள் ஊரில் சிலரும் கதராடை அணிந்து வந்தனர். அப்பொழுது கதராடையில் பருத்திக் கொட்டை ஒட்டிக்கொண்டிருக்கும்.



"நாகர்கோவிலுக்குக் காந்தியடிகள் முதன் முறையாக வந்த போது அவர் வடசேரி பிரயாணிகள் விடுதியில் தங்கியிருந்தார். நான் என் தந்தையிடம் காந்தியைத் தரிசிக்கவும், அவரது பேச்சைக் கேட்கவும் மிகவும் விரும்பி வேண்டிக்கொண்டதால் என் தந்தையும் என்னையும் அழைத்துச் சென்றார். அதிலிருந்தே எனக்கு காந்தியடிகளின் நிர்மாணத் திட்டங்களான கதர் அணிதல், தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்குக் கொள்கைகளில் பற்றுதல் ஏற்பட்டது."

## அண்ணா மாவட்டம்

### கவி. ஆறுமுகனார்

கவிஞர் ஆறுமுகனார் ஒரு சிறந்த சுதந்திரப் போராட்ட வீரர். சுதந்திரப் போராட்டக் காலத்தில் சுதந்திரத்தின் எழுச்சி மிகு பாடல்கள் பல பாடியுள்ளார். திண்டுக்கல் ஸ்தலபுராணம் எழுதியுள்ளார். மகாகவி பாரதியார், புரட்சிக்கவி பாரதிதாசன் ஆகியோரிடம் ஈடுபாடு கொண்டவர். சென்னை டி.கே.எஸ். நாடகக் குழுவில் பல நாட்கள் பணி மேற்கொண்டுள்



ளார். அண்ணல் காந்தியடிகள் ஒட்டன் சத்திரம் வருகையின் போது வாழ்த்து மடல் கவிநடையில் எழுதிக் கொடுத்துள்ளார். அரிசன சேவா சங்கத்தின் தலைவரும் ஆவார். நாட்டின் விடுதலைக்காகப் பல பாடல்கள் எழுதியுள்ளார். பாரதியின் பெயரில் நூலகம் அமைத்து நடத்தி வருகிறார். 84-வது வயதிலும் திரு ஆறுமுகக் கவ்யின் உள்ளத்தில் தேசப்பற்று நிலைத்து நிற்கிறது.

### திருமால்வாசி

திருவாளர்கள் திருமால்வாசி, மற்றும்பட்டா பிராமன் ஆகியோர் பெரு முயற்சியின் காரணமாகத் தான் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் 6-10-61-ல் கொடைக் கானலுக்கு வருகை தந்தார். பண்ணைக் காட்டில் வாழ்ந்து வரும் சுதந்திரப் போராட்ட வீரர் திரு டி. ஆர். டி. திருமால் வாசி ஏலக்காய் மாலை போட்டு வரவேற்றார் (முதன் முதலாக நேருஜிக்குப் போடப்பட்ட ஏலக்காய் மாலை இதுவே ஆகும்) இந்த ஏலக்காய் மாலை தற்போது 'தீன்மூர்த்தி பவன்' புது டெல்லியில் உள்ளது. நேரு அவர்களுடன் திரு டி எஸ். பட்டாபிராமன், திரு எஸ். ஆர். கே. வெங்கடாசலம் மற்றும் பெருந்தலைவர் திரு கு. காமராஜ் ஆகியோர் உள்ளனர்.



## மதுரை மாவட்டம்

மதுரை நகரைச் சார்ந்த சுதந்திரப் போராட்டத் தியாகி திரு பா. நாகையா அவர்கள் 1916-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ஆம் நாள் மதுரையில் பிறந்தார். இவர் தியாகிகள் திரு. பி. கே. ராஜகோபால், திரு ராமானுஜம்பிள்ளை. திரு சு.. சுந்தரம், திரு கே. டி. ராமலிங்கம் ஆகியோருடன் 1936-ஆம் ஆண்டு திருமலை நாயக்கர்

### பா. நாகைய்பா



மகாலில் ஆங்கிலேயர் நடத்திய விழாவில் வெடிகுண்டு வைத்த தற்காக கைது செய்யப்பட்டு 6 ஆண்டுக்காலம் சிறையில் அடைக்கப்பட்டார். இவரது பூர்வீகத் தொழில் வாணம் கட்டும் தொழிலாகும். பதினெட்டு வயது வரையில் அச்சகத் தொழில் செய்து வந்தார். வெடிகுண்டு வழக்கில் தண்டனையடைந்த இவர், திருச்சி, வேலூர் ஆகிய சிறைகளில் இருந்தார். மத்திய அரசு தியாகி மானியம் ரூ. 500, மாநில அரசு தியாகி மானியம் ரூ. 100 ஆக மொத்தம் ரூ. 600 மானியமாகப் பெற்று வருகிறார். தற்போது நெசவுத் தொழில் செய்து வருகிறார்.

### வெ. சந்தானம்

மதுரையைச் சார்ந்த சுதந்திரப் போராட்டத் தியாகி திரு வெ.சந்தானம் 1911-ஆம் ஆண்டு செப்டம்பர் 4-ஆம் நாள் மதுரையில் பிறந்தார். 1930-ஆம் ஆண்டு இரகசியப் பிரசுரங்கள் விநியோகித்ததற்காகக் கைது செய்யப்பட்டு 6 மாதம் வேலூர் சிறையில் அடைக்கப்



பட்டார். மத்திய அரசு, மாநில அரசு தியாகி மானியமாக ரூபாய் 700 பெற்று வருகிறார். பெருந் தலைவர் காமராஜர், திரு. சத்திய மூர்த்தி, மூதறிஞர் இராஜாஜி, திரு டி. பிரகாசம் ஆகியோருடன் சிறையில் இருந்தவர். இவர் தினமணி நாளிதழில் ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர் ஆவார். சென்னை இந்து உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்போது இவர் **சைமன் கமிசனை** எதிர்த்து மாணவர்களுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும்போது போலீசாரால் அடிக்கப்பட்டு, பின்னர் தீவிரவாதப் போராட்டத்தில் ஈடுபட்டவர் ஆவார்.

## எஸ். ஏ. ராஜகோபால்



இவர் 1914-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27-ஆம் நாள் மதுரையில் பிறந்தவர். 1930-ஆம் ஆண்டு கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டு ஆறுமாதக் காலம் திருச்சி சிறையில் அடைக்கப்பட்டார். திரு வேலுச்சாமி கவுண்டர், திரு சக்தி வடிவேலு கவுண்டர் ஆகியோர் தலைமையில் தேனியில் போராட்டத்தில் கலந்து கொண்டு கைதானார். மாநில அரசு தியாகி மானியம் ரூ. 250 பெற்று வருகிறார்.

## ஏ. முத்துக்கண்ணுத் தேவர்



இவர் 1915-ஆம் ஆண்டு மே மாதம் 17-ஆம் நாள் பிறந்தார். இவர் கிராமங்களில் கிளர்ச்சி செய்ததற்காக 1940-ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு 4 மாதக் காலமும், 1942-ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு 3 மாதக் காலமும் சென்னைச் சிறையில் அடைக்கப்பட்டார். திரு வைத்தியநாத அய்யர் அவர்களுடன் சிறையில் இருந்தார்.

# பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்



## மாணிக்கம்

இந்திய சுதந்திரத்திற்காகத் தங்கள் பங்காக, தாங்களும் ஏதாவது செய்தாக வேண்டுமென்று துடித்துக் கொண்டிருந்த லட்சக்கணக்கான இந்திய இளைஞர்களில் திரு. மாணிக்கமும் ஒருவர்.

திரு மாணிக்கத்தின் சுதந்திர வேட்கைக்கு வடிகாலாக அமைந்தது, 1930ஆம் ஆண்டு நடைபெற்ற வேதாரண்யம் உப்புச் சத்தியாக்கிரகம்.

திரு ராஜாஜி தலைமையில், ஜி. ராமச்சந்திரனைக் கேம்ப் தலைவராக ஏற்று அந்த இளைஞர் போராட்டத்தில் கலந்து கொண்டார்.

இதற்காக திரு ராஜாஜி, திரு சங்கு சுப்பிரமணியம், திரு தினமணி ராமரத்தினம் போன்றோரோடு பெல்லாரி ஜெயிலில் மாணிக்கம் ஓர் ஆண்டு சிறைத் தண்டனை அனுபவித்தார்.

விடுதலையாகி வந்து, அவர் பிறந்த ஊரான திருப்பத்தூரில் (ப. மு. மாவட்டம்) காங்கிரஸ் கமிட்டி கிளையின் செயலாளராகப் பொறுப்பேற்றார்.

1939-ன் பிற்பகுதியில் சதுர் வேதமங்கலத்தில் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசிக்கொண்டிருந்த போது மாணிக்கம் மேடையில் கைது செய்யப்பட்டார். வேலூரில் இரண்டாண்டு சிறைத் தண்டனை பெற்றார்.

அப்போது அதே சிறையில் திரு முத்துராமலிங்கத் தேவர், திரு என். ஜி. ரங்கா, திரு ஸ்ரீநிவாச ராவ் ஆகியோர் பாதுகாப்புக் கைதிகளாகத் தண்டனை அனுபவித்துக் கொண்டிருந்தனர். தண்டனைக் காலம் முடிந்த பிறகும் மாணிக்கம் பாதுகாப்புக் கைதியாகச் சிறையில் வைக்கப்பட்டிருந்தார்.

மாணிக்கம் 1942 ஆகஸ்ட் போராட்டத்தில் விவசாயிகள் கிளர்ச்சிக்கு (கிருங்காக் கோட்டைக் கலவரம்) ஆதரவு தந்து அதில் கலந்துகொண்டு கைது செய்யப்பட்டார். ஓராண்டுச் சிறை தண்டனை விதிக்கப்பட்டு, மதுரை ஜெயிலில் தண்டனை அனுபவித்தார்.

தாமிரப்பத்திரம் பெற்றுள்ள தியாகி மாணிக்கத்தை, திருப்பத்தூர் பகுதி மக்கள் இன்றும் 'தொண்டர் மாணிக்கம்' என்றே அழைக்கிறார்கள்.

# காமராஜர் மாவட்டம்

## அமரர் தியாகி பி.எஸ். குமாரசாமி ராஜா வாழ்க்கைக் குறிப்புகள்

1898-ஆம் ஆண்டு இராஜபாளையத்தில் பிறந்தார்.

1917-ஆம் ஆண்டு முதல் 'ஹோம் ரூல் லீக்' நடவடிக்கைகளில் ஈடுபட ஆரம்பித்தார்.

1920-ஆம் ஆண்டில் சத்தியமூர்த்தி, ராஜாஜி, டாக்டர் நாயுடு போன்ற தலைவர்களுடன் தொடர்பு ஏற்பட்டது.

1934-இல் டெல்லி சட்டசபைக்கு மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களின் பிரதிநிதியானார்.

1940-இல் டிசம்பரில் நடைபெற்ற தனிப்பட்டோர் சத்தியாக்கிரகத்தில் 9 மாதத் தண்டனை பெற்றார்.

1946-இல்பிரகாசம் மந்திரிசபையில் விவசாய மந்திரியாக விளங்கினார்.

1947-இல் ஏப்ரல் மாதம் முதலமைச்சராகப் பதவியேற்றார்.

1948-இல் ஒரிசா கவர்னரானார்.

1957 மார்ச் 16-ஆம் தேதி மறைந்தார்.

## அமரர் தியாகி காந்தி அரங்கசாமி ராஜா வாழ்க்கைக் குறிப்புகள்

1916-இல் பிரமஞானசங்கம் தோற்றுவித்தல்.

1917-இல் ஹோம்ரூல் இயக்கம் இராஜபாளையம் நகரில் துவக்கம்

1920-இல் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு பெற்றார்.

1921-இல் காந்தியடிகள் மதுரை வருகை-காந்தியைச் சந்தித்தார். அவரைப் பின்பற்றி சட்டை போடுவதை விட்டு விடல்.

1927-இல் நகரில் கதர்க் கூட்டுறவு இயக்கம் துவக்கினார்.

1931-இல் ஒத்துழையாமை சட்டமறுப்பு இயக்கங்கள்-வேதாரண்யம் உப்பு சத்தியாக்கிரகம் பங்கேற்பு ; கைது; 1 ஆண்டு கண்ணனூர் சிறை.

1947-இல் நாடு சுதந்திரம் அடைந்ததும் அரங்கசாமி ராஜாவை யானை மீது அமர்த்தி நகரில் ஊர்வலம் நடத்தினார்கள்.

## தியாகி பி.எஸ். வசந்தன் வாழ்க்கைக் குறிப்புகள்

1921-இல் பிறப்பு.

1935-இல் விஸ்வநாததாஸ் உடன் நாடகங்களில் நடித்தல்.

சக்கராஜா கோட்டையில் கொடிகள் ஏற்றுதல்; போலீசார் கொடிகளை அகற்றல்; மேலும் மேலும் கொடிகள் ஏற்றல்.

சஞ்சீவிமலை 32 அடுக்குப் பாறையில் பேப்பர் கொடி ஏற்றல்.

'சுதந்திரச் சங்கு', 'இந்தியா' இதழ்கள் விநியோகம்.

1935-இல் ஜீவகாருண்ய சங்கம் தொடக்கம்

பெருமாள் தேவன்பட்டி பலிநிறுத்த மறியல்.

1941-இல் தொழிற்சங்க வேலைகள்.

1942-இல் 'வெள்ளையனே வெளியேறு' முழக்கத்தைச்சுவர்களில்எழுதுதல்; போராட்டம்; ஊர்வலம் ; போலீஸ் ஸ்டேஷன் தாக்குதல்; தந்திக்கம்பிகள் அறுத்தல்;

போராட்ட வீரர்களைக் காட்டிக் கொடுக்காமல் இருந்து சிறைசெல்லல்.

## தியாகி பி.டி. சுப்பராஜா வாழ்க்கைக் குறிப்புகள்

1913-இல் பிறப்பு.

1930-இல் சென்னையில் ஊர்வலத்தில்; கைது.

1932 இராஜபாளையத்தில் கைது ; 6 மாதம் திருச்சி சிறை.

1940-இல் தனிப்பட்டோர் சத்தியாக்கிரகம் செய்து கைது; அலிப்புரம், பெல்லாரி சிறைவாசம்.

"கிராமங்களில் நடைபெற்றுவந்த கைத்தொழில்கள் எல்லாம் மறந்து போனதால் அவைகள் அழிந்து போகும் நிலையில் இருக்கின்றன. அவற்றை மீண்டும் உயிர்ப்பிப்ப தால்தான் கிராமங்களை உயிர்ப்பிக்க முடியும்" என்றார் அண்ணல் காந்தியடிகள்.

இன்று அண்ணலின் கனவுகள் நனவாகி வருகின்றன. கிராமங்களில் புதிய மறுமலர்ச்சிகளும் வளர்ச்சிகளும் உருவாகி வருகின்றன. அரசின் அரும்பணிகளாலும் செயல் திட்டங்களாலும் பிற அமைப்புகள் ஆற்றிடும் பணிகளாலும் கிராமப்புறங்கள் உயிர்ப் பிக்கப்பட்டுள்ளன.

எடுத்துக்காட்டாக, வாழ்க்கைக் கல்விமுறைகளில் தேர்ந்தவர்களாக கிராம மக்கள் உள்ளனர். அவர்களிடம் புதியமுறையில் கேட்கப்பட்ட "வினாடி வினா"க்களில் சில இங்கே தரப்படுகின்றன. உங்களால் பதில் சொல்ல முடியுமா?

# வினாடி வினாவில் ஒரு புதுமை

1. (அ). பயிர்க்காப்புத் (Insurance) திட்டத்தில் என்னென்ன பயிர்கள் நன்மை பெறுகின்றன?

(ஆ) சாகுபடி செய்த பயிர், பயன் தராமல் நஷ்டம் ஏற்பட்டால் அதிகபட்சம் எவ்வளவு நஷ்டஈடு கிடைக்கும்?

(இ) பயிர்ப்பாதுகாப்புத் திட்டத்தில் பிரிமியம் எவ்வளவு வசூலிக்கப்படுகிறது?

2. பசுந்தழை உரத்தின் அவசியத்தை நீங்கள் அறிவீர்கள். அவற்றுள் கொழுஞ்சியும் அவுஞ்சியும் முக்கியமானதாகும். இளஞ் செடியாக இருக்கும்போது இரண்டும் ஒன்றுபோல் தோன்றும். இள நிலையில் எது கொழுஞ்சி, எது அவுஞ்சி என்று எப்படிக் கண்டு பிடிப்பது?

3. ஆடுதுறை நெல் ஆராய்ச்சிப் பண்ணை அண்மையில் ஐ.ஆர்.50 ரகத்தைக் காட்டிலும் அதிக மகசூல் தரவல்ல புதிய ரகத்தை வெளியிட்டுள்ளது. அந்த ரகத்தின் பெயர் என்ன?

4. வறட்சியைத் தாங்கவல்லதும் அதிக வைக்கோல் தருவதும், அதே சமயம் ஐ.ஆர்.20ரகத்தைக் காட்டிலும் அதிக மகசூல் தரவல்ல நெல் ரகம் எது?

5. இந்தியாவில் வேளாண்மைத் துறை அறிவியல் அறிஞர்களால் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட நெல் ரகத்திலேயே அதிக அரவைத்திறம் கொண்ட நெல் ரகம் எது?

6. தைப்பட்டத்தில் எள் சாகுபடி செய்கிறோம். எள்ளுக்கு வேளாண்மைத்துறை பரிந்துரை செய்யும் நுண்சத்து எது?





## மனங்கவரும் இனியமொழி தமிழ்

தென்னாப்பிரிக்காவில் தமிழ் மக்கள் புரிந்த துணையைப் போல் வேறு எந்த இந்தியரும் புரியவில்லை. அவர்களுக்கு நன்றியறிதல் காட்ட அவர்கள் நூல்களைப் பயில வேண்டுமென்று நினைத்தேன். அப்படியே அவர்கள் மொழியைப் பயில்வதில் மிக ஊக்கமாக ஒரு திங்கள் கழித்தேன். அம்மொழியைப் பயிலப் பயில அதன் அழகை உணரலானேன். அது மனங்கவரும் ஓர் இனியமொழி. தமிழ் மக்களுள் பண்டை நாளிலும் இந்நாளிலும் கூடப்பல அறிஞர் இருந்தனர், இருக்கின்றனர் என்பதை அம்மொழியின் அமைப்பாலும் பயிற்சியாலும் அறிய முடிந்தது. இந்தியாவில் ஒருமைப்பாடு ஏற்படவேண்டுமானால் சென்னை மாநிலத்திற்கு அப்புறமுள்ளவரும் தமிழ் உணர்தல் வேண்டும்.

7. வறட்சியின் கொடுமையால் மானாவாரி கடலை எதிர்பார்த்த பயனை அளிக்கவில்லை. எனவே இறவைப் பயிரில் கடலை மகசூலை சரிக்கட்ட வேண்டும். இறவைக் கடலையில் ஓரளவு வறட்சியைத் தாங்கி அதிக மகசூல் தரவல்ல ரகம் எது?

8. தீவனச் சோளம் பயிரிடச் சிறந்த ரகம் எது?

9. புரதச் சத்துப் பற்றாக்குறை அதிகரித்துவரும் இந்நாளில் அதிகப் புரதச்சத்து தரும், மிகக் குறைந்த காலத்தில் பயன் தரும் பயறு எது?

10. மண் பரிசோதனையின் அடிப்படையில் உரம் இடும் பழக்கம் இப்போது இருக்கிறது. மண் பரிசோதனைக்கு எவ்வளவு மண் தேவை?

11. தண்ணீர்ப்பரிசோதனைக்கு எவ்வளவு தண்ணீர் தேவை?

12. நாம் பயிரிடும் SAI துவரை ஆறுமாதப் பயிர். இந்த வறட்சிக் காலத்தில் 6 மாதம் பயிர்சாகுபடி செய்ய முடியவில்லை. இனிவரும் காலத்தில் கடலையுடன் துவரையும் ஊடு பயிராகச்சேர்த்துப் பயிர் செய்ய ஏற்ற துவரை ரகம் எது?

13. (அ) நெற்பயிருக்கு தழை, மணி, சாம்பல் சத்துடன் நுண் மணிச்சத்தும் பரிந்துரைக்கப்படுகிறது. அது என்ன?

(ஆ) ஒரு ஏக்கருக்கு எவ்வளவு? எப்படி இடவேண்டும்?

14. சிறு குழந்தையின் பெயரில் சிறு குழந்தையின் நன்மைக்காக கணக்குத் தொடங்க விரும்புகிறீர்கள். கணக்கு யார் பெயரில் எப்படி இருக்க வேண்டும்.?

15. சென்னை கல்லூரி விடுதியில் தங்கியுள்ள உங்கள் பையனுக்கு ரூ.700 பணம் அனுப்ப வேண்டியுள்ளது. வங்கியில் டி.டி. மூலம் அனுப்ப எவ்வளவு கமிஷன் செலவாகும்? இதையே மணி ஆர்டர் மூலம் அனுப்ப எவ்வளவு செலவாகும்.?

16. பயிர்க்கடனாக ரூ.4,500 கடன் வாங்கினால் வட்டி விகிதம் என்ன?

17. பயிர்க்கடனாக ரூ.5,700 வாங்கினால் வட்டி விகிதம் என்ன?

18. (அ) ஒரு சிறு விவசாயி வண்டி மாட்டுக் கடனாக ரூ.5,000 கடனாக வாங்கினால் என்ன வட்டி விகிதம் ?

(ஆ) அதே விவசாயி பயிர்க் கடனாக ரூ.5,000 வாங்கினால் என்ன வட்டி விகிதம்?

(பாங்க் ஆப் பரோடா' தமிழ் நாட்டில் கோபிச் செட்டிப் பாளையம் அருகிலுள்ள நம்பியூர், மதுரை மாவட்டம் காமய கவுண்டன் பட்டி, முசிறி அருகிலுள்ள மோரப்பட்டி, செங்கற்பட்டு மாவட்டம் மாங்காடு ஆகிய ஊர்களில் கிராமப்புற விவசாய மக்களுக்காக நடத்திய வினாடி வினா நிகழ்ச்சிகளில் இருந்து)

தொகுப்பு — மாமூலன்

### விடைகள்

1. (அ) நெல், தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துகள்.

(ஆ) கடனாகப் பெற்ற தொகையைப் போல ½ மடங்கு.

(இ) பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தில் பிரிமியம் எண்ணெய் வித்துக்கு 1 சதம்; நெல், தானிய வகைக்கு 2 சதம்.

2. இலையின் நரம்பு ஓட்டத்தில் வித்தியாசம் இருக்கும் கொழுஞ்சி இலை நேராகக் கிழியாது. அவுஞ்சி இலை நேரே கிழியும்.

3. ADT 37 - நவரை, சுவர்ண வாரிக்கு ஏற்றது.

4. ADT 38 - IR 20 க்கு மேல் 25% அதிகம் மகசூல் தருகிறது.

5. ADT 38 - 68 சதவிகிதம்

6. மங்கனீசு சல்பேட் ; ஏக்கருக்கு 2 கிலோ.

7. JL 24

8. CO 25; CO 26

9. T9 உளுந்து ; 65 நாள்

10. 500 கிராம் மண்

11. 1 லிட்டர் தண்ணீர்

12. CO 5; மூன்றரை மாதம்

13. (அ) Zine Sulphate

(ஆ) ஒரு ஏக்கருக்கு 12 கிலோ சம பங்கு மணலுடன் கலந்து மேலாகத் தூவ வேண்டும்.

14. குழந்தை + தந்தை அல்லது தாய்.

15. வங்கியில் ரூ. 5. மணிஆர்டர் கட்டணம் ரூ 28

16. 11.5%

17. 12.5%

18. (அ) 10%

(ஆ) 11.5%



# கோவை மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிகள்


**என். கோவிந்தன், இ.ஆ.ப,**
**மாவட்ட ஆட்சித் தலைவர்,**
**கோயம்புத்தூர்**


கடுமையாக உழைக்கக் கூடிய மக்கள் நிறைந்த மாவட்டம் கோவை மாவட்டம். சிறப்பான தொழில் வளம் மட்டும் இன்றி செழிப்பான பயிர் வளமும இங்கு உண்டு. அதற்கேற்ற நீர்வளம், நில வளம் நிறைந்தது இம்மாவட்டம் என்றெல்லாம் பெருமை பேசக் கூடிய சிறப்புப் பெற்றது கொங்கு மண்டலமாம் கோவை மாவட்டம்.

பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டம் செயல்படத் தொடங்குமுன் வறட்சியால் நிரந்தரமாகப் பாதிக்கப்பட்ட மாவட்டமாக இருந்து வந்தது இம்மாவட்டம். அத்திட்டம் கொண்டு வரப்பட்ட பின், பாலைவனமாக இருந்த இம் மாவட்டத்தின் பெரும் பகுதி சோலைவனமாகியது. எங்கு பார்த்தாலும் எழில் கொஞ்சும் இயற்கைக் காட்சிகள்! பசுமை கொஞ்சும் வயல் வெளிகள்! செல்வம் கொழிக்கும் தென்னந்தோப்புகள், வளம் கொழிக்கும் வாழைத் தோட்டங்கள், திராட்சைத் தோட்டங்கள்!

அவை எல்லாம் இன்று வெறும் வண்ணக் கனவுகளாகி விட்டன. அமுதசுரபியாய், பாசனத்திற்குத் தண்ணீர் வழங்கிய அணைகள் இன்று வறண்டு கிடக்கின்றன. பரம்பிக்குளம் அணையின் மொத்த நீர்மட்ட உயரம் 92 அடி. இன்று இருப்பதோ 13 அடி அளவு நீர் தான். அமராவதியின் மொத்த நீர் மட்ட உயரம் 76 அடி. இன்று 29 அடி அளவே நீர் உள்ளது. 57 அடி நீர் மட்டம் உயரம் உள்ள திருமூர்த்தி அணையில் இன்று உள்ளதோ வெறும் 6 அடி அளவிற்குத்தான்!

அணைகளில் நீர்மட்டம் குறைந்து விட்டது. மழையின்மையால் மாவட்டத்தில் ஆங்காங்கே உள்ள குளம், குட்டைகளிலும் நீர் இல்லை. கோவை மாவட்டம் மழையைக் கண்டு மாதங்கள் பல, ஏன்? ஆண்டுகள் பல ஆகிவிட்டன. அதிலும் இவ்வாண்டு நிலைமை மிகவும் கவலைதரும் அளவிற்கு வந்துள்ளது.

இம்மாவட்டத்தில் சராசரியாக ஆண்டு முழுவதும் 10968 மி.மீட்டர் அளவு மழை பெய்யும். வறட்சி நிலவிய கடந்த ஆண்டில் 5745 மி.மீட்டர் அளவே மழை பெய்தது. நடப்பாண்டிலோ 1402 மி.மீட்டர் தான் மழை பெய்துள்ளது. இது மிகக் குறைவான அளவு ஆகும்.

பாசனத்திற்குத் தேவைப்படும் தண்ணீர் கிடைக்காததால் கோவை மாவட்டத்தில் வேளாண்மை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் இலட்சத்து 35 ஆயிரம் எக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்ய வேண்டியது வறட்சியின் காரணமாக இவ்வாண்டு 46 ஆயிரம் எக்டேர் பரப்பளவில் தான் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் திங்கள் முதல் ஜூலைத் திங்கள் வரையிலான காலத்தில் 6800 எக்டேர் நிலப் பரப்பில் நெல் பயிரிடப்பட்டிருக்க வேண்டும். ஆனால் 3133 எக்டேரில் தான் நெல் பயிரிடப்பட்டுள்ளது. கரும்பு 6200 எக்டேருக்குப் பதில் 2600 எக்டேரிலும், நிலக்கடலை 32600 எக்டேருக்குப் பதில் 15 ஆயிரம் எக்டேரிலும் மட்டுமே பயிர் செய்யப்பட்டுள்ளது. 52 ஆயிரம் எக்டேரில் பயிர் செய்திருக்க வேண்டிய சோளம் 12 ஆயிரம் எக்டேரிலும், 5600 எக்டேரில் பயிர் செய்திருக்க வேண்டிய கம்பு தொள்ளாயிரம் எக்டேரிலும், 4000 எக்டேரில் பயிர் செய்திருக்க வேண்டிய ராகி வெறும் 300 எக்டேரிலும் தான் பயிர் செய்யப்பட்டுள்ளது.

பருவ மழை தவறி விட்டது. நீர் வளம் குறைந்து விட்டது. நிலத்தடி நீரும் 200, 300 அடிக்கும் கீழே சென்று விட்டது. இதன் விளைவாக மாவட்டத்தில் கடுமையான வறட்சி நிலவுகிறது.

வளம் கொழிக்க வேண்டிய பயிர்கள் வாடி விட்டன. காய்த்துக் குலுங்க வேண்டிய தென்னை மரங்கள் காய்ந்து விட்டன. விறகுக் கடைக்கு அனுப்ப வேண்டிய நிலையில் அவை வெட்டி வீழ்த்தப்படுகின்றன. வீழ்வது மரமல்ல- கிராமத்தின் பொருளாதாரமே என்று கணிக்கக் கூடிய அளவிற்குப் பலன் தரும் தென்னை மரங்கள் ஆயிரக் கணக்கில் பலனற்றுப் போய் விட்டன.

விவசாயப் பெருங்குடி மக்களின் உற்ற தோழனாக விளங்கும்

**கிராமப் பகுதிகளில் 64 லட்சத்து 51 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 73 லட்சத்து 66 ஆயிரம் ரூபாய் செலவிட்டு 667 குடிநீர்க் கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டுள்ளன.**



கால்நடைகளுக்குத் தீவனம் இல்லை. தண்ணீரும் இல்லை. மாவட்டத்தில் உள்ள ஐந்தரை இலட்சத்திற்கும் மேற்பட்ட கால்நடைகளில் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்டவை தீவனப் பற்றாக் குறையினால் பாதிக்கப்பட்டுள்ளன. விவசாயியினுடைய வறுமையின் சின்னமாய், அவை, எலும்பும் தோலுமாய்க் காட்சி அளிக்கின்றன. கனத்த இதயத்தோடு விற்பனைக்காக அவற்றை அண்டை மாநிலத்திற்கு அனுப்புகின்றனர்.

கால்நடைகளுக்கு மாத்திரம் அல்ல இந்தத் துன்பம்! மக்கள் குடிப்பதற்கும் தண்ணீர் கிடைப்பது அரிதாகி விட்டது. நிலத்தடி நீர் வழங்கப்பட்டு வந்த இடங்கள் பலவற்றிலும் தற்போது நீர் வற்றிவிட்ட நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் வறட்சியைச் சமாளிக்கப் பல்வேறு நிவாரணப் பணிகள் இம் மாவட்டத்தில் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. கிராமங்களுக்கு நிரந்தரப் பலன் தரும் சமுதாய சொத்துக்களாக இப்பணிகள் உருவாக வேண்டும் என்ற அடிப்படையில் திட்டங்கள்தீட்டப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

புதிய கிணறுகள் அமைத்தல், கிணறுகளை ஆழப்படுத்துதல், புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல், ஒருங்கிணைந்த குடிநீர்த் திட்டம் உருவாக்குதல், குளம் குட்டைகளை மேம்படுத்துதல் போன்ற பல்வகைப்பட்ட வறட்சி நிவாரணப் பணிகள் இம்மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கோவை மாவட்டத்தில் 4 கோடி ரூபாய் அளவிற்கு இதுபோன்ற பணிகளை மேற்கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது.

ஊராட்சி ஒன்றியம், பேரூராட்சி மற்றும் நகராட்சிப் பகுதியில் ஒரு கோடியே 97 இலட்ச ரூபாய் செலவில் 591 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 200 ஆழ்குழாய்க் கிணறுகள் 80 இலட்ச ரூபாய் செலவில் அமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியம் மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் புதிய கிணறுகள் அமைக்க 28 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதில் 17 இலட்சத்து 29 ஆயிரம் ரூபாய் இதுவரை செலவிடப்பட்டுள்ளது. 31 புதிய கிணறுகள் அமைக்கும் பணியில் 12 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. மற்ற வேலைகள் முன்னேற்ற நிலையில் உள்ளன.

கிராமப் பகுதிகளில் 64இலட்சத்து 51 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 723 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாய் செலவிட்டு 687 குடிநீர்க் கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டுள்ளன.

ஆழ்குழாய்க் கிணறுகளைப் பழுது பார்க்கவும் சுத்தம் செய்யவும் 4 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதில் 184 வேலைகள் முடிக்கப்பட்டு, முழுத் தொகையும் செலவிடப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியம், பேரூராட்சி மற்றும் நகராட்சியின் பகுதிகளில் லாரிகள் மூலம் குடிநீர் வழங்க இதுவரை 35 இலட்சத்து 79 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டு சீரான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

68 ஆயிரம் ரூபாய் செலவில் 4 கூட்டுக் குடிநீர்த் திட்ட மேம்பாட்டுப் பணிகள் உடுமலைப் பேட்டை நகராட்சிப் பகுதியில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

வேலை இழந்து நிற்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் பொருட்டு, அரசு 100 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் 45 இலட்சத்து 9 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டு 486 பயனுள்ள பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 9 கசிவு நீர்க் குட்டைகள் அமைக்கும் பணியும் தொடங்கப்பட்டு அவை முன்னேற்ற நிலையில் உள்ளன. இத்திட்டத்தின் மூலம் 4.5 இலட்சத்திற்கும் மேற்பட்ட மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டன.

சிறுமுகை பேரூராட்சி குடிநீர்த் திட்டத்திற்குத் தனி மின் பாதை அமைக்கும் பணி மேற்கொள்ள, தற்போது ரூ. 5 இலட்

# நவீன நீர்ப்பாசனக் கருவி



வறட்சிக்காலங்களில் தேவையான மழை இல்லாமல் அழிந்து போகும் மானாவாரிப் பயிர்கள் அல்லது இறவைப் புஞ்சைப் பயிர்களான வேர்க்கடலை, சோளம், கேழ்வரகு, கம்பு மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்களை நீர் இறைத்துப் பாதுகாக்கப் புதிய வடிவமைப்பு கொண்ட தெளிப்பு நீர்ப்பாசனக் கருவி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நீர்ப்பாசனக் கருவி 25-8-87 அன்று முசரவாக்கம் அரசுப் பண்ணையில் விவசாயிகள் வேளாண்மை அலுவலர்கள் முன்னிலையில் செயல்படுத்தப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஐந்து குதிரைச் சக்திகொண்ட ஆயில் என்ஜினுடன் சுமார் 100 அடி நீளம் கொண்ட இரண்டு ரப்பர் குழாயின் முனையில் ஒரு அங்குலம் விட்டம் அளவு கொண்ட இரும்புக் குழாய்க் கருவியில் 24 நாசில்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. இது டிராலி மவுண்ட் அமைப்புடன் உள்ளதால் எங்கும் எளிதாக நகர்த்திச் செல்லலாம். ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து 1.5 ஏக்கர் பரப்புள்ள நிலத்துக்கு நீர் தெளிக்கலாம். இதன் மொத்த மதிப்பு சுமார் ரூ. 12,000 மட்டுமே.

**இந்தக் கருவியினால் என்ன நன்மை?**

சாதாரணமாக, கால்வாய்மூலம் நீர் பாய்ச்சினால் ஏக்கர் 1க்கு 2 இலட்சம் லிட்டர் நீர் தேவைப்படும். ஆனால், இந்தக் கருவியின் மூலம் நீர் தெளிப்பு அளித்தால் ஒரு ஏக்கருக்கு 30 ஆயிரம் லிட்டரே போதுமானது. இதை ஏறக்குறைய 2 மணி நேரத்தில் முடித்து விடலாம். மண்ணில் போதுமான 3'' அளவுள்ள ஈரம் இதன் மூலம் கிடைக்கிறது. ஆகவே, இக்கருவியின் தெளிப்பு நீர்ப்பாசன முறையில் ஏக்கருக்கு 1 இலட்சத்து 70 ஆயிரம் லிட்டர் நீரைப் பாசனத்தின் மூலம் மிச்சப்படுத்தலாம். சாதாரணமாக, கால்வாய்ப் பாசனத்தின் மூலம் 1 ஏக்கரை 8 மணி நேரத்தில் நீர்ப்பாசனம் செய்ய வேண்டுமென்றால், இக்கருவியின் மூலம் 4 ஏக்கர் நிலத்துக்கு நீர்த்தெளிப்பு செய்துவிடலாம். எனவே, இதன் மூலம் தண்ணீரும் மிச்சம். நேரமும் சேமிப்பு.

இந்தக் கருவியை வாடகைக்கு விட்டு ஒரு நாளைக்கு ரூ. 50 ஈட்டலாம். பூச்சி மருந்து தெளிக்கவும் இதைப் பயன்படுத்தலாம். இது ஸ்பிரிங்குலர் டிரிப்டு நீர்ப்பாசன (Springlar Drift Irrigation) செலவை விடக் குறைவானது. மேடு, பள்ளம் உள்ள நிலத்தில் உள்ள பயிர்களுக்கு நீர் இதன் மூலம் இறைப்பதற்கு ஏற்றது. மழை போன்ற நீர் தெளிப்பதால் பயிருக்குத் தேவையான காற்றில் உள்ள நைட்ரஜன் பயிருக்குச் செலுத்துவதோடு கோடைக் காலத்தில் இம்முறையினால் காற்றில் வெப்பத்தையும் குறைக்கும்.

சம் நிதி ஒதுக்கீட்டினை அரசு அனுமதித்துள்ளது. இப்பணி விரைவில் தொடங்கப்படும்.

கால்நடைச் செல்வத்தையும் கைவிடக்கூடாது என்ற அடிப்படையில் கால்நடைகளுக்குத் தேவையான 150 டன் வைக்கோல், அரசு செலவில் தஞ்சை மாவட்டத்திலிருந்து இங்கு கொண்டு வரப்பட்டு 33 விநியோக மையங்கள் மூலம் விவசாயிகளுக்குச் சலுகை விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. வாடிநிற்கும் தென்னை மரங்கள் மேலும் பட்டுப்போகாமல் காக்கும் முயற்சியாக, இருக்கின்ற நீரைக் கொண்டு 'உயிர் தண்ணீர்' அளித்து அவற்றை க் காப்பாற்றும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்க அரசு பல்வேறு பணிகளை இம்மாவட்டத்தில் மேற்கொண்டு வருகின்றது. வறட்சியின் கொடுமைக்கு அடிக்கடி இலக்காகும் திருப்பூர், பல்லடம், அவினாசி, சூலூர், சுல்தான்பேட்டை, கிணத்துக்கடவு போன்ற பகுதிகளில் வறட்சி போக்கி வளம் காணும் விதத்தில் 'ஒருங்கிணைந்த வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்' என்ற புதியதோர் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும்.

மாபெரும் திட்டமாக உருவாகும் இப்புதிய பலனுள்ள திட்டத்திற்கான கருத்துரு தயாரிக்கும் பணி நிறைவேறும் நிலையில் உள்ளது. மிக அதிக அளவில் இப்பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு கூடுதலாக 6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யுமாறு அரசிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அரசின் மூலம் ஆக்கப் பணிகள் முழுமூச்சாகச் செயல்படுத்தப்பட்டு வரும் அதே வேளையில் இம்மாவட்ட மக்கள் அனைவரும் தம்முடைய துயர் தாங்கி, வறட்சி நிவாரணப் பணிகள் சிறப்பாக நடைபெற ஒத்துழைப்புத் தந்து வருவது குறிப்பிடத்தக்கது. அதே நேரத்தில் வறட்சி நிவாரணப் பணிகள் எந்நாளும் சமுதாயத்திற்கு நன்மை தரும் விதத்தில் இருக்க வேண்டும். இயற்கை இன்னல் மேலும் ஏற்பட விடக்கூடாது என்ற அடிப்படையில் மழை தரும் மரங்களை அனைவரும் நடுவது வீட்டுக்கும் நன்மை தரும்; நாட்டுக்கும் நன்மை பயக்கும்! நீர் வரத்துக் கால்வாய்களில் ஆக்கிரமிப்புச் செய்யாமல் இருப்பதும், அவற்றைப் பலனில்லாமல் போகச் செய்வதும் தவிர்க்கப்பட வேண்டும். அதன் மூலமே நாம் வறட்சியை நிரந்தரமாகத் தவிர்க்கவும் இயலும்.

வறட்சி நிவாரணப் பணிகளைக் கோவை மாவட்டத்தில் தொய்வின்றித் தொடர்ந்து மேற்கொள்ளுவோம். அதன் மூலம் வறட்சியை வெல்லுவோம். ■

# லைப்பாய் இருக்குமிடம்... அதுவே
# ஆரோக்கியம் இருக்குமிடம்!




**லைப்பாய்**

**அழுக்குடனே கிருமிகளை அறவே கழுவிக் களைகிறது**

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

LINTAS L 98 203 TM

# புதிய பயிர் ரகங்கள்

**கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகம் 13 புதிய உயர் விளைச்சல் இரகங்களை அறிமுகப்படுத்தி உள்ளது. அவை, நெல்லில் ஒன்று, கரும்பில் ஒன்று, சிறுதானியங்களில் நான்கு, பயறுகளில் இரண்டு, எண்ணெய் வித்தில் ஒன்று, பழத்தில் ஒன்று, காய்கறியில் ஒன்று மற்றும் நறுமணப் பயிரில் ஒன்று ஆகும்.**

**கோ**வை, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் 13 புதிய உயர் விளைச்சல் இரகங்களை அறிமுகப் படுத்தியுள்ளது. நெல்லில் ஒன்று, கரும்பில் ஒன்று, சிறுதானியங்களில் நான்கு, பயறுகளில் இரண்டு, எண்ணெய்வித்தில் ஒன்று, பழத்தில் ஒன்று, காய்கறியில் ஒன்று, புதிய உணவுக் காளான் ஒன்று மற்றும் நறுமணப் பயிரில் ஒன்றுமாக 13 இரகங்கள் வெளியிடப்பட்டன. இப்புதிய இரகங்கள் யாவும், இப்பல்கலைக் கழக விஞ்ஞானிகள் பலரின் அயராத உழைப்பினாலும் தீவிர ஆராய்ச்சியினாலும் உருவாக்கப் பட்டவை. இந்த இரகங்கள், உயர் விளைச்சலுடன் முக்கிய பூச்சி - நோய்களையும் தாங்கி வளரும் தன்மை பெற்றவை. இப் புதிய இரகங்களின் முக்கிய சிறப்பியல்புகள் பின்வருமாறு:

**நெல் டிபிஎஸ் 2:** இந்தப்புதிய நெல் இரகம், குமரி மாவட்ட பிசான பருவத்திற்கென பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டது. இது உயர்விளைச்சல் இரகங்களான ஐ. ஆர். 26 மற்றும் கோ. 40 இரகங்களின் இனக் கலப்பாகும். இதன் வயது 125 முதல் 130 நாட்கள். சாயாத தன்மை கொண்டது. திருப்பதிசாரம் நெல் ஆராய்ச்சி நிலையத்தில் நடத்தப்பட்ட விளைச்சல் திறன் ஆய்விலும் குமரி மாவட்டத்தில் நடத்திய அனுசரணை ஆய்விலும் ஐ. ஆர். 20 நெல் இரகத்தைவிட 22.5 சதம் கூடுதல் நெல் மகசூலும், 34 சதம் கூடுதல் வைக்கோல் மகசூலும் தந்துள்ளது. இதன் சராசரி எக்டேர் விளைச்சல் 4,296 கிலோ. இந்தப் புதிய இரகம், 90 முதல் 95 செ.மீ. உயரம் வளரும். அதிக காற்றடித்தாலும் நெல் மணிகள் வயலில் கொட்டுவதில்லை. புகையான், இலைச்சுருள் புழு, வெள்ளை இலைநுனி நூற்புழு, குலைநோய், இலைக்கருகல் நோய் ஆகியவற்றுக்கு நடுத்தர எதிர்ப்புச்சக்தி கொண்டது. டிபிஎஸ். 2 இரகத்தின் அரிசி வெள்ளையாகவும் பருமனாகவும் இருப்பதால் குமரி மாவட்ட மக்கள் பெரிதும் விரும்பி ஏற்றுக் கொள்வர்.

**கோ. க. 86062 புதிய இரகக் கரும்பு :** தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் ஏற்ற அதிக மகசூலும், சர்க்கரையும் தரவல்லது. அதிகம் பூக்காத, சரியாத முன் பட்ட நடவிற்கு (மார்கழி-தை) ஏற்ற இரகம் தேவைப்படுகிறது. தற்சமயம் பயிரிடப்படும் கோ. க. 671 இரகம் அதிகம் பூக்கும் மற்றும் சாயும் தன்மையுடையது. இதன் மகசூல் எல்லா மாவட்டங்களிலும் ஒரே சீராக இருப்பதில்லை. ஆகவே கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையத்திலிருந்து கோ. க. 86062 என்ற புதிய இரகம் முன்பட்ட நடவிற்கு சிபாரிசு செய்யப்படுகிறது.

இப்புதிய இரகம், தமிழகமெங்கும் சோதனையிட்டதில் சராசரியாக 131 டன் கரும்பு மகசூலும் கட்டைப் பயிரில் 133.5 டன் கரும்புமகசூலும்தரவல்லது. இந்த இரகம் கோ. க 671ஐ விட நடவுக் கரும்பில் 4 டன்னும் கட்டைக் கரும்பு சாகுபடியில் 12டன்னும் அதிக மகசூல் கொடுக்கக்கூடியது. அதிக சர்க்கரைச்சத்து கொண்டது.

இது தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் ஒரே சீரான அதிக மகசூலும் சர்க்கரைச் சத்தும் கொடுக்கக்கூடியது. கரிப்பூட்டை நோயை அதிகம் எதிர்க்கும் சக்தி கொண்டது. கட்டைக் கரும்பு சாகுபடிக்கு மிகவும் ஏற்ற இரகம். இந்த இரகம் 300 முதல் 330 நாட்களுடையது. செவ்வழுகல் நோயைத் தாங்கி வளரக் கூடியது. இருமண் பாங்கான நிலங்களில் அதிக மகசூல் கொடுக்கக்கூடியது.




**கேழ்வரகு டிஆர்ஒய். 1 :** இந்த இரகம், களர்—உவர் நிலங்களுக்காகப் பிரத்தியேகமாகத் தெரிந்தெடுக்கப்பட்டுப் பரிந்துரை செய்யப்படுகிறது. பொதுவாக, கேழ்வரகுப் பயிர் ஓரளவு களர் - உவர்த்தன்மை தாங்கி வளரக்கூடிய தென்றாலும் இந்தப் புதிய இரகம், மற்றெல்லாவற்றையும் விட களர் - உவர் தன்மையைத் தாங்கி வளர்ந்து மிகஅதிக அளவு விளைச்சல் தரும் சிறப்புத்தன்மை வாய்ந்தது. இது திருச்சி களர் - உவர் ஆராய்ச்சி நிலையத்தில் தேர்வு செய்யப் பட்டது. மண்ணின் பிஎச். 8.5க்கு மேல் 10.00 வரை உள்ள நிலங்களுக்கு இப்புதிய கேழ்வரகு இரகம் பரிந்துரைக்கப்படுகிறது. இதன் வயது 102 நாட்கள், எக்டேருக்கு 4,676 கிலோ சராசரி மகசூல் தந்துள்ளது. இது கோ. 12 ராகி மகசூலைவிட 24 சதம் கூடுதலாகும். தானியத்தின் தரமும் மேன்மையானது. இந்த இரகத்தினை குலைநோய் மற்றும் பூச்சிகள் தாக்குவதில்லை. தமிழ்நாட்டிலுள்ள 1 இலட்சம் எக்டேருக்கு மேற்பட்ட களர்-உவர் நிலங்களில் சாகுபடி செய்ய வாய்ப்புள்ளது.

**சாமை பையூர் 1 :** பையூர் மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் தேர்வு செய்யப்பட்டது. சந்தூர் நாட்டு இரகத்திலிருந்து தனி வழித் தேர்வு செய்யப்பட்டது.

இதன் வயது 110 நாட்கள். தர்ம புரி, சேலம் மாவட்டங்களுக்கு மிகவும் ஏற்றது. அதிக தானியமும் தாளும் தரவல்லது. எக்டேருக்கு சராசரி 870 கிலோ தானியமும் 2.6 டன் தாள் மகசூலும் தரும். முன் பருவ வறட்சியையும் தாங்கும். சாயாது. உரமேற்கும் தன்மை பெற்றது. பூச்சி நோய்கள் அதிகம் தாக்குவதில்லை.

**பனிவரகு கோ. 4** : கோவை மாவட்ட நாட்டு இரகத்திலிருந்து தனிவழித்தேர்வு செய்யப்பட்ட இரகம். தமிழ்நாட்டில் 7 ஆண்டுகளும், நாடு முழுவதுமுள்ள மற்ற மாநிலங்களில் 4 ஆண்டுகளும் பயிரிட்டு, சோதனை செய்ததில் எக்டேருக்கு 1,400 கிலோவுக்கு மேல் தானிய மகசூலும் 4.8 டன் தாள் மகசூலும் தந்துள்ளது. கர்நாடகத்தில் நடத்திய ஒரு ஆய்வில் எக்டேருக்கு 3,670 கிலோ வரை தானிய மகசூல் தந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இது குறுகிய கால இரகம். வயது 75 நாட்கள். பொன்னிறமான தானியங்கள்.

**தினை கே. 3** : கோவில்பட்டி சிறுதானியம் மற்றும் பருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் தேர்வு செய்யப்பட்டது. இந்தப் புதிய தினை, வறட்சியைத் தாங்கி வளரும். சாயாது. பூச்சி - நோய்களைத் தாங்கி வளரும். கே. 2, கோ-5 இரகங்களைவிட அதிக மகசூல் தரவல்லது. தரத்திலும் சிறந்தது. 82 நாட்களில் அறுவடைக்கு வரும். செப்டம்பர்-அக்டோபர் பருவத்தில் விதைக்க ஏற்றது.

**உளுந்து வம்பன் 1** : இந்த இரகம், புதுக்கோட்டை தேசிய பயறுவகை ஆராய்ச்சி மையத்தில் உருவாக்கப்பட்டு வெளியிடப்படும் முதல் இரகமாகும். இந்த இரகம், மஞ்சள் தேமல்நோய்க்கு எதிர்ப்புச் சக்தி கொண்டது. வேர் அழுகல் நோயையும் தாங்கும் திறன் வாய்ந்தது. இதன் விளைச்சல் திறன் எக்டேருக்கு 800 கிலோ. வயது 60 நாட்கள். மானாவாரி மற்றும் இறவை இரண்டுக்கும் ஏற்றது.

**உளுந்து ஏடிடீ 4** : இந்தப் புதிய உளுந்து இரகம், நெல் தரிசுக்கென, பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டது. டி.9, ஏடிடீ2 மற்றும் பந்த்யூ. 14 ஆகியவற்றின் இனக் கலப்பாகும். இதன் வயது 70 நாட்கள். தஞ்சை மாவட்டத்தில் பழைய மற்றும் புதிய டெல்டா பகுதிகளில் பயிரிடப்பட்டு வரும் ஏடிடீ 3 உளுந்தைவிட 26 சதம் அதிக விளைச்சல் தந்துள்ளது.




தஞ்சை மாவட்டத்தில் நடத்தப்பட்ட அனுசரணை ஆராய்ச்சியில் எக்டேருக்கு சுமார் 600 கிலோ மகசூல் கிடைத்துள்ளது. இது, மஞ்சள் தேமல், வைரஸ் மற்றும் வேர்அழுகல் நோய்களைத் தாங்கி வளரும் தன்மை கொண்டது.

**நிலக்கடலை ஏஎல்ஆர். 1** இந்த நிலக்கடலை இரகம், ஆழியார் நகர் விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் உருவாக்கப்பட்டது. இது, துருநோயை எதிர்த்து வளரும் தன்மை பெற்றது. பின் பருவ இலைப்புள்ளிநோயும் தாக்காது. ஜேஎல் 24 மற்றும் கோ. 2 நிலக்கடலை இரகங்களைவிட 23 சதம் முதல் 26 சதம் வரை கூடுதல் மகசூல். எக்டேருக்கு சராசரி 1,840 கிலோ மகசூல் தரும். வயது 120 நாட்கள்; மானாவாரிக்கேற்ற இரகம். குறிப்பாக, பொள்ளாச்சிப்பகுதியில் பயிரிடச் சிறந்தது.

**கலப்பின வெண்டை கோ. 2** : கோவையிலுள்ள காய்கறித் துறையில் உருவாக்கப்பட்டது. ஏ. ஈ. 180 மற்றும் பூசா சவானி ஆகிய இரு இரகங்களின் வீரிய ஒட்டுச்சேர்க்கையாகும். வயது 90 நாட்கள். எக்டேர் மகசூல் 16.5 டன். கோ. 1 எம்டியூ 1 மற்றும் பூசா சவானி இரகங்களைவிட 26 சதம் முதல் 64 சதம் வரை கூடுதல் மகசூல் தந்துள்ளது. எல்லாப்பருவத்திற்கும் ஏற்றது. வீட்டுக்காய்கறித்தோட்டம் மற்றும் வியாபாரத்திற்காக பெரிய அளவிலும் சாகுபடி செய்யலாம். காய்கள் பெரியனவாகவும் நன்சுவையாகவும், சத்தும் கொண்டவையாகவும் இருக்கும். எனவே சந்தையில் நல்ல மதிப்பு உள்ளதால் விற்பனையும் எளிது. அதிக விலையும் கிடைக்கும்.

**ஆப்பிள் கொடைக்கானல் பியூட்டி** : -பார்லின்ஸ் பியூட்டி' என்ற இரகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டது. கொடைக்கானல்தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த ஆப்பிள் இரகம், எக்டேருக்கு 22டன் வரை மகசூல் அளிக்கவல்லது. தென்னிந்திய மலைப்பகுதியில் நிலவும் மிதகுளிர் தட்பவெப்ப நிலைகளிலும் அதிக மகசூல் அளிக்கும் திறன் வாய்ந்தது. பழங்கள் நடுத்தர பருமனுள்ளது. பழத்தின் சராசரி எடை 170 கிராம். பழங்கள் உருண்டை வடிவமானவை. ஜூலை - ஆகஸ்ட் மாதங்களில் பழங்கள் அறுவடைக்கு வரும். பழங்கள் கவர்ச்சியாகவும் நல்ல சுவையுடனும் இருக்கும்.

**ஜெரேனியம் கொடைக்கானல் 1** : ஒரு உயர்ந்த அளவு தரமுள்ள வாசனை எண்ணெய் அளிக்க வல்ல பயிர். கொடைக்கானல் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் அல்ஜீரியன் இரகம் ஒன்றிலிருந்து தேர்வு செய்யப்பட்டது. ஒரு எக்டேரிலிருந்து 45.2 டன் தழையும் 54.4 கிலோ வாசனை எண்ணெய்யும் தரவல்லது. நட்ட 8 மாதங்களில் முதல் அறுவடையும் பிறகு 3 மாத இடைவெளியிலும் அறுவடை செய்யலாம். இதில் 65 சதம் ஜெரேனியம் வாசனை எண்ணெய் அடங்கியுள்ளது.

**வெள்ளை சிப்பிக்காளான் கோ. 1** : பழனி மலைத்தொடர் அடிவாரத்தில் கானல் காடு அருகில் சேகரிக்கப்பட்டு கோவை பயிர் நோயியல் துறையில், இதன் உற்பத்தி நுட்பங்கள் உருவாக்கப்பட்டன. இந்தப் புதிய வகைசிப்பிக்காளான் ஏற்கெனவே உள்ள சிப்பிக்காளானைக் காட்டிலும் 13 சதம் கூடுதல் மகசூல் தரும். அளவிலும் பெரியது. நல்ல வெண்மையானது. எனவே மக்களால் விரும்பி உண்ணப்படுவதுடன், விற்பனை வாய்ப்பும் அதிகம் கொண்டது. புது சிப்பிக்காளான், படுக்கை தயாரித்த 18-20 நாட்களில் தோன்றும். அதாவது பழைய சிப்பிக்காளானைவிட ஒருவாரம் முன்பே அறுவடைக்கு வரும். ஒரு படுக்கையிலிருந்து 40 நாட்களில் 414 கிராம் காளான் கிடைக்கும்.

புதிய இரகங்களுடன், பயிர் நிர்வாக முறைகள், புதிய சிக்கன பாசன முறைகள், ஒருங்கிணைந்த பயிர்ப்பாதுகாப்பு, நவீன பதனப்படுத்திச் சேமிக்கும் முறைகள் ஆகியவற்றிலும் கண்டுபிடிக்கப்பட்ட பல்வேறு தொழில் நுட்பங்களையும் விவசாயிகள் தெரிந்து கையாள வேண்டும். வேளாண்மையோடு, கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, மீன்வளர்ப்பு, மரம் வளர்ப்பு ஆகிய பலவற்றையும் கடைபிடித்தால் விவசாயிகள் அதிக வருவாய் பெறலாம். ■

**தகவல் தொடர்பு நிலையம்**
**வேளாண்மைப் பல்கலைக்கழகம்,**
**கோயம்புத்தூர்.**



திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட

# வேளாண்மை வளர்ச்சிப் பணிகள்

எம். அண்ணாமலை,
செய்தி மக்கள் தொடர்புத்துறை,
திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்.

அருள் வழங்கி ஆருயிர் போற்றும் ஈசன் அன்னை காந்திமதியாளுடன் – நெல்லையப்பன் என்ற நாமம் தாங்கி தாமிர சபைத் தலைவனாகத் தரித்திருக்கும் நெல்லை, திருவளர்க்கும் நெல் பயிரை வேலியாக உடைத்து உயிர் வளர்க்கும் பணியை ஏற்று திருநெல்வேலி என்று பெயர் பெற்று விளங்கி வருகின்றது. இத்திருநெல்வேலி பொருனையாற்றின் கரையில் பொங்கும் எழில் சேர்த்து ஆற்றா மாக்கள் அரும்பசி தீர்க்கும் அமுதசுரபியாக இலங்குகிறது.

'வளரும் நெல்லை வழங்கிடும்
நெல்லை'
முளரிக்குமரி முகை பல பூக்கும்
வளரும் நெல்லை வழங்கிடும்
நெல்லை.

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் தொன்று தொட்டே வேளாண்மைப் பணிகள் சிறப்புடன் இருந்துள்ளன என இலக்கியச் சான்றுகள் உள்ளன.

இம்மாவட்டத்தில் நிகரமாக வேளாண் பயிர்கள் சாகுபடி செய்யும் பரப்பு 1.602 இலட்சம் எக்டேர் ஆகும். வேளாண் வளர்ச்சிக்கு இயற்கை துணை புரிந்தாலும் குறிப்பிட்ட இடுபொருட்கள் அவசியமாகின்றன. இடுபொருட்களில் முக்கியமாக விதை உற்பத்தி மற்றும் விநியோகமாகும். 25 ஆண்டுகளுக்கு முன்பு தாமிரபரணிப் படுகையில் கொட்டாரம், சம்பா, கார்ச் சம்பா போன்ற இரகங்களும் குளத்துப் பாசனங்களில் புழுதி பிரட்டி போன்ற இரகங்களும் சாகுபடி செய்யப்பட்டு, எக்டேருக்கு 2 முதல் 3 டன்கள் வரை மகசூல் பெறப்பட்டது. இன்று ஐ. ஆர். 8 முதல் ஐ. ஆர். இரகங்களும், ஐ. ஆர். 50 வரை சாகுபடி செய்யப்படுகின்றன. இன்று கார்ப்பருவத்திலும் பிசானப்பருவத்திலும் சாகுபடி செய்யப்படும் எ.எஸ்.டி. 16, எ.டி.டீ. 36, டி.கே.எம். 9, ஐ.ஆர். 50, ஐ. ஆர். 20, பொன்னி போன்ற நெல் ரகங்கள் எக்டேருக்கு 5 முதல் 7 டன்கள் வரை சராசரியாக மகசூல் தரும் நிலையைக் காண்கிறோம். நெற்பயிர்ப் பரப்பளவில் ஒவ்வொரு ஆண்டிலும் படிப்படியாக உயர்ந்து இன்று சராசரியாக 1.07 இலட்சம் எக்டேரில் நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. நெற்பயிர் தவிர சிறு தானியங்களில் குறிப்பாக சோளம் சாகுபடியில் கோவில்பட்டி நெட்டை, கோ. 25 மற்றும் கே. 4 போன்ற உயர் வள இரகங்கள் சென்ற ஆண்டில் 3,000 எக்டேர் பரப்பில் வறட்சியிலும் சாகுபடி செய்யப்பட்டது. கம்பு சாகுபடியில் டபிள்யு.சி.சி. 75 கம்பு மற்றும் எக்ஸ். 5 கம்பு போன்ற இரகங்கள் இம்மாவட்டத்தில் 10 ஆயிரம் எக்டேருக்கும் அதிகமான பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. கேழ்வரகில் பி. ஆர். 202 மற்றும் கோ. 7 போன்ற இரகங்கள் இம்மாவட்டத்தில சாகுபடி செய்து உயர் மகசூல் கிடைத்துள்ளது. கேழ்வரகு சராசரியாக 2 ஆயிரம் எக்டேர் பரப்பில் சாகுபடியாகிறது. சிறு தானியங்களில் குறிப்பாக மானாவாரி சோளம் சாகுபடி செய்திடப்படும் பகுதிகள் கரிசல் நிலப் பகுதிகள் ஆகும். கரிசல் நிலத்திற்கு ஏற்ற இரகம் கோவில்பட்டி நெல்லை இரகமாகும். மானாவாரியிலும் எக்டேருக்கு 2 டன் தானிய மகசூல் தர வல்லஇரகம் கோவில் பட்டி நெட்டை இரகமாகும்.

இம்மாவட்டத்தின் சிறப்பு வேளாண்மைப் பணிகளில் இன்று பாரதப் பிரதமர் அவர்கள் கூறும் மானாவாரி மற்றும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டங்களாகும். தரிசு நிலங்களின் மேம்பாட்டுத் திட்டத்தை ஒரு முன்னோடித் திட்டமாகத் தயாரித்து, சங்கரன் கோவில் வேளாண்மைக்கோட்டத்தில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 3 உபரித் திட்டங்களாகத் தயாரித்து,செயலாக்கப்படுகிறது. முதல் உப திட்டம் மானாவாரி தரிசு நில மேம்பாட்டுத்திட்டம்எனக்குறிப்பிட்டு களப்பாகுளம், மலையன்குளம் மற்றும் செவல்குளத்தில் 186 எக்டேர் பரப்பில் சோளம், கருவேல் போன்ற மானாவாரிப் பயிர்கள் சாகுபடி செய்யத் திட்டம் வகுத்துச்செயல்படுத்தப்படுகிறது. இரண்டாம் உப திட்டம் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் எனக் குறிப்பிட்டு 145 எக்டேரில் திட்டம் துவக்கப்பட்டது. கோ. மருதப்புரம், குருக்கள்பட்டி ஆகிய கிராமங்களில் 40 எக்டேருக்கு பாரத வங்கி கடன் வழங்கியுள்ளது. இதனில் சோளம் விதைக்கப்பட்டது. கருவேல் நடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மூன்றாம் உப திட்டம் தரிசு நில மேம்பாட்டுத்திட்டம்மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம் மூலம் திட்டமிடப்பட்டு,160 எக்டேரில் மானாவாரிச் சோளம் சாகுபடி செய்யப்பட்டது. வரும் ஆண்டில் ஒவ்வொரு வேளாண்மைக் கோட்டத்திலும் குறைந்தது 100 எக்டேர் பரப்பில் இத்தகைய வேளாண்மைக் காடுகளை மானாவாரித்தரிசு நிலங்களில் ஏற்படுத்திட வேண்டுமெனத் திட்டமிடப்பட்டுள்ளது. பண்டைய காலத்தில் இருந்து வந்த காடுகள் காலப்போக்கில் அழிந்து வந்ததால் மழையளவு குறைந்து வருகிறது என்று சான்றோர் உணர்த்தி வருவதைக் கருத்தில் கொண்டு இத்தகைய வேளாண் காடுகள் அமைத்திடும் பணிகளைச் செவ்வனே செய்திடச் செயல்திட்டங்கள் தமிழக அரசால் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழக அரசின் நல் ஆட்சியில் அமிழ்தான வளர்ச்சிப் பணிகள் தொடர்ந்து நடைபெறுவதால் விவசாயிகள் உச்ச விளைச்சல் கண்டு, உயர்ந்த வருவாய் பெற்று, உன்னத வாழ்வு பெறுவர் என்பதில் பெருமையடைவோம். ■



# தென்னை நார்க் கழிவு எருவாகிறது

சுமார் 11 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பில் ஆறாயிரம் மில்லியன் தேங்காய்களை அறுவடை செய்து, உலக அரங்கில் இந்தியா மூன்றாம் இடத்தை வகிக்கிறது. இந்தியாவில் கேரள மாநிலத்திற்கு அடுத்தபடியாக, தமிழகம் சுமார் 1100 மில்லியன் தேங்காய்களை அறுவடை செய்கிறது.

தமிழ்நாட்டில், சராசரியாக ஒரு எகடேர் நிலப்பரப்பிலிருந்து சுமார் 10,000 காய்கள் வரை உற்பத்தியாகிறது. 10,000 மட்டைகளிலிருந்து சுமார் ஒரு டன் எடையுள்ள கயிறு கிடைக்கிறது. அதேசமயம் அதே ஒரு டன் எடையுள்ள தென்னை நார்க் கழிவும் கிடைக்கிறது. தமிழ்நாட்டில் மட்டும் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 1.7 இலட்சம் டன் கழிவு கிடைப்பதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இந்தக் கழிவினை எந்த உபயோகத்திற்கும் கொள்ளாது சாலை ஓரங்களிலும் புறம்போக்கு இடங்களிலும் கொட்டியும், எரித்தும், அழித்தும் வருகிறோம். இதனைப் பயனுள்ள பொருளாக மாற்ற பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தத் தென்னை நார்க்கழிவுகள் நீரை நன்கு உறிஞ்சிவைத்துக் கொண்டு மண்ணின் ஈரத்தைப் பாதுகாக்க வல்லவையாகத் திகழ்கின்றன. இக்கழிவு சுமார் 500 சதவிகிதம் நீரை உறிஞ்சி வைத்துக் கொள்ளும் இயல்பு கொண்டது என ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன. எனவேதான் பற்பல தென்னந்தோப்புகளில் இதனை ஈரத்தைப் பாதுகாக்க நிலத்தின்மீது பரப்பி வருகின்றனர். இக்கழிவினைத் தக்க முறையில் இட்டு நிலத்தின் களர் உவர் தீங்கையும் ஓரளவிற்குக் குறைக்கலாம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. மக்கிய கழிவுகளைக் கொண்டு நிலக்கடலை மகசூலும் பெருக்கப்பட்டுள்ளது.

தென்னை நார்க்கழிவுகள் வெகு எளிதிலும் விரைவிலும் மக்கி விடுவதில்லை. இதற்குக் காரணம், இவற்றில் உள்ள எளிதில் மக்க வல்லாத லிக்னின் என்ற பொருளாகும். இந்த லிக்னின் நொதித்துப் போனால்தான், தென்னை நார்க்கழிவும் மக்கும். தென்னை நார்க்கழிவுடன் 5 புட்டிகள் பூஞ்சாளத்தையும் (பிரிரோடஸ் வகை) 5 கிலோ யூரியாவும் கலந்து சுமார் 30 நாட்கள் கழித்து நோக்குகையில் லிக்னின் விளைவு மிகக் குறைந்து காணப்படும். இத்துடனில்லாது எந்த அங்ககப் பொருளும் மக்கும் முன்பும் மக்கியபின்பும் அதிலுள்ள கரிமச்சத்து, தழைச்சத்து விகிதம் மிகவும் இன்றியமையாததாகும். மக்கும் முன்பு 112க்கு ஒன்று என்றவிகிதத்தில் இருந்த கரிமச்சத்து, தழைச்சத்து விகிதம் மக்கிய பின்பு 24க்கு ஒன்று என்று மாறி இந்த நார்க்கழிவைச் சிறந்த ஒரு மக்கிய எருவாக மாற்றியும் விட்டது.

எனவே, நார்க் கழிவினைத் தக்க முறையில் பூஞ்சாளம் கலந்து பயன்படுத்துங்கால், சத்துப் பொருட்கள் நன்கு வெளிப்படுவதுடன், அது அனாவசியமாக இடத்தை ஆக்கிரமித்துக் கொள்ளாது. சுற்றுப்புறச் சூழ்நிலைக்குத் தீங்கு விளைவிக்காது. ஒரு சிறந்த எருவாக மாறியும் விடுகிறது. எனவே, வழக்கிலுள்ள குப்பை எரு, தொழுஉரம், பசுந்தாளுரம் போன்று 'தென்னை நார்க்கழிவு உரம்' என்ற ஒரு இயற்கை உரமும் சேர அதிக நாளில்லை.

ஆர். நாகராசன்
டி. என். மாணிக்கம்
ஜி. வி. கோதண்டராமன்

மண்ணியல்துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோவை.

## மின்பாதிப்பு இல்லாத தமிழகம்

பருவ மழை தவறியதால் நீர் மின் உற்பத்தி நிலையங்கள் பாதிக்கப்பட்டிருந்தும், தமிழ்நாட்டில் மின்சார விநியோகம் தட்டுப்பாடு இல்லாமல் இருந்து வருவது பற்றி பி.டி.ஐ. செய்தி நிறுவனம் நடத்திய ஆய்வு ஒன்று தமிழக அரசைப் பாராட்டி உள்ளது.

மின்சார விநியோகம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் எந்த முறையில் உள்ளது என்பது குறித்து இந்நிறுவனம் ஆய்வு ஒன்று நடத்தியது. மற்ற மாநிலங்களைவிட தமிழகத்தில் மின்சார விநியோகம் சிறப்பான முறையில் இருப்பதாக அது பாராட்டி உள்ளது. அது வருமாறு :

கடந்த ஒரு சில ஆண்டுகளாகவே தமிழகத்தில் பருவ மழை பொய்த்துவிட்டது. மழை பொய்த்ததால் நீர் மின் நிலையங்களில் உற்பத்தி பெருமளவு குறைந்து விட்டது. நீர் மின் நிலையங்களுக்குப் பதிலாக அனல் மின் நிலையங்களால் நல்ல முறையில் தமிழகம் மின் உற்பத்தியைச் செய்து வருகிறது.

மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டாலும் அண்டை மாநிலங்களின் உதவியை அதிகம் நாடாமல் தன்னுடைய மின் உற்பத்தியையே தமிழகம் நம்பியிருப்பது பாராட்டத்தக்கது. கல்பாக்கத்திலிருந்து கிடைக்கும் மின்சாரமும் தமிழகத்துக்குப் பயன் அளித்து வருகிறது.

தொழிற்சாலைகளுக்கு 40 சதவிகிதம் மின்வெட்டு அமல்படுத்தப்பட்டாலும் தொழில்களுக்குப் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. வீடுகள் மற்றும் குடியிருப்புகள், மருத்துவமனைகள் ஆகியவற்றையும் மின்வெட்டு பாதிக்கவில்லை.

பொதுவாக, தமிழக மக்கள் மின்சாரப் பாதிப்பு எதுவும் இல்லாமல் இருந்து வருகிறார்கள்.




செங்கல்பட்டு மாவட்டத்தின் சார்பிலான முன்னாள் படைவீரர் இல்லத்திற்கு மேதகு ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்கள், மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் முன்னிலையில் 15.9.87 அன்று சென்னையில் அடிக்கல் காட்டினார்.

# படமும் செய்தியும்

சென்னை மாநகராட்சியின் 300வது ஆண்டு தொடக்கத்தை முன்னிட்டு சிறப்பு அஞ்சலக முத்திரையிட்ட சிறப்பு அஞ்சல் உறையை மாண்புமிகு உணவு மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ச. இராமச்சந்திரன் அவர்கள் 29.9.87 அன்று வெளியிட்டார்.



# பல் நலம் பேணுவோம்

உணவை நன்றாக மெல்லுவதற்கும் தெளிவான பேச்சுக்கும் வலுவான, ஆரோக்கியமான பற்கள் அவ்சியம். பல்லை நன்றாகப் பாதுகாப்பதன் மூலம் நம்மை பாதிக்கும் கடுமையான தொற்று நோய்களை நாம் தவிர்க்கலாம்.

பற்களைப் பாதுகாப்பது, வாயிலும், பற்களிலும் ஏற்படக்கூடிய நோய்களைத் தவிர்ப்பது போன்ற பல்நலம் பற்றிய கருத்துக்களை மக்களில் பெரும்பாலோர் சரிவர அறியாமலே இருக்கின்றனர்.

பல்நல வாரத்தையொட்டி வாய், பல் பரிசோதனை மற்றும் பல் அடைத்தல், சுத்தம் செய்தல், அகற்றுதல் போன்றவை தொடர்பான பல் மருத்துவ ஆலோசனைகள் மட்டுமின்றி சிகிச்சைகளும் இலவசமாக பொது மக்களுக்கும் மாணவர்களுக்கும் வழங்கப்பட்டன.

வாய், பல் நோய்கள், தடுப்பு மற்றும் பாதுகாப்பு முறைகள் பற்றிய மாதிரிகள், ஓவியங்கள், புகைப்படங்கள் அடங்கிய பல் நலக் கண்காட்சி ஒன்றும் சிறப்புற அமைக்கப்பட்டிருந்தது.




பல்நல விழிப்புணர்ச்சியை சமுதாயத்தில் தூண்டவும், பல் நலம் பற்றிய கருத்துக்களை மாணவர்களுக்கு எடுத்துக்கூறுவதற்குமான வாய்ப்பு ஒன்றினை சென்னை மருத்துவக் கல்லூரியில் 7.9.87 முதல் 11.9.87 வரை நடைபெற்ற பல்நல வாரம் ஏற்படுத்தியது.

இந்தப் பல்நல வாரத்தை இந்தியப் பல் மருத்துவ சங்கத்தின் சென்னைக் கிளையும், சென்னை பல் மருத்துவக் கல்லூரியும் மற்றும் இந்திய கால்கேட் பாமாலிவ் நிறுவனமும் இணைந்து நடத்தின.

திரைப்படங்கள் மூலமும் பல் நலம் பற்றிய விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

பல் நல வாரத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. ப.உ. சண்முகம் அவர்கள் 7.9.87 அன்று சென்னை மருத்துவக் கல்லூரியில் துவக்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மக்கள் நல்வாழ்வுத்துறை ஆணையர் மற்றும் அரசுச் செயலர் திரு ஆர். சண்முகம் அவர்கள் 'பள்ளிப் பருவத்தினருக்கான பல் பாதுகாப்பு என்ற நூலை வெளியிட்டு உரையாற்றினார்.

பல்நலப் பாதுகாப்பு முகாமை துவக்கி வைத்த மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் எஸ். ஆறுமுகம் அவர்கள், பெரும்பாலான நோய்களைத் தவிர்க்க பற்களைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தை விளக்கிக் கூறினார்.

பல்மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் பி.பி.இராஜன் அவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமையேற்று பல்மருத்துவக் கல்லூரி சார்பில் நடைபெற்றுவரும் ஆய்வுகள் பற்றி எடுத்துக் கூறினார்.

பல்நல வாரத்தையும் பல் மருத்துவக் கண்காட்சியையும் துவக்கி வைத்த மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு ப.உ. சண்முகம் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

"பல்மருத்துவக் கல்லூரிக்காக ரூ. 1 கோடியே 25 இலட்சம் செலவில் 9 மாடிக் கட்டடம் கட்ட அரசு அனுமதி வழங்கி உள்ளது. அதற்கு முதல் கட்டமாக ரூ. 25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

"பல்மருத்துவத்தை விளக்கும் செய்திப் படங்களைத் தயாரித்து வெளியிடலாம். இதனால் பல் பாதுகாப்பு குறித்து மக்களிடம் விளக்கமாகக் கூற இயலும்.

"தமிழ்நாட்டில் அனைத்து வட்ட மருத்துவமனைகள், ஆரம்பச் சுகாதார நிலையங்களில் பல் மருத்துவர்களை நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது."

பல்நல வாரத்தில் சென்னையைச் சுற்றிலுமுள்ள 250 பள்ளிகளின் மாணவ மாணவியர்க்கு பல்சிகிச்சை அளிக்கப்பட்டது. இதுதவிர பொதுமக்களும் சிகிச்சை பெற்றனர். மொத்தம் 50 ஆயிரம் பேர் அவ்வாரத்தில் சிகிச்சை பெற்றனர்.

பல்நல வாரத்தையொட்டி, பள்ளியில் பயிலும் பிஞ்சு உள்ளங்களில் பல்நல விழிப்புணர்ச்சி வேரூன்ற பள்ளி மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டி புன்னகைப்போட்டி, ஆகியன நடத்தப்பட்டன. வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பல்நல வார நிறைவுவிழாவில் பரிசுகள் வழங்கப்பட்டன.

# நூல்நயம்

**அகர ஓசை**

ஆசிரியர்: ஏ.பி.சண்முகம்

வெளியிட்டோர்: தாய் நூலகம்,
4-8, பொன்னியம்மன்
கோயில் தெரு, நாச்சியார்
கோயில்-612 602
தஞ்சை மாவட்டம்.

பக்கம்:155 விலை ரூ. 9

பதினைந்து தலைப்புக்களின் கீழே, பாங்கான சிறுகதைகள் 'அகர ஓசை'யில் தொகுத்துத் தரப்பட்டிருக்கின்றன. ஆசிரியர், சிங்கப்பூர்க் குடிமகன் என்பதாலோ என்னவோ -தமிழ்நாட்டில் பிறந்தவராயிருந்தும்-அந்த மண்ணின் மணம் கதைகளிலெல்லாம் கமழக் காண்கிறோம்.

சரளமான எளிய தமிழ்நடையிலே கதைகள் யாவும் சிறப்புற பின்னப்பட்டிருக்கின்றன. சமுதாயத்தின் கீழ்மட்டத்திலிருப்போரின் வாழ்க்கை மேம்பாடு தான், ஏறத்தாழ எல்லாக் கதைகளுக்குமே அடித்தளமாக அமைந்திருக்கிறது.

சிறுகதை இலக்கியம் மெலிந்து வரும் இந்நாளில்-ஒரு நல்ல சிறுகதைத்தொகுப்பைப் படித்த நிம்மதி, படிப்போருக்கு ஏற்படும் வகையில் வெளிவந்துள்ள ஒரு நல்ல நூலிது.

**மாயக் கட்டங்கள்**

ஆசிரியர்: டாக்டர்
மெ.மெய்யப்பன்

வெளியிட்டோர்: நியு செஞ்சரி
புக் ஹவுஸ் பிரைவேட்
லிமிடெட்,41-பி,சிட்கோ
எஸ்டேட்,
சென்னை-600 098.

பக்கம்: 116 விலை ரூ:10

வாழ்க்கையில் நாம் எந்தத் துறையிலே ஈடுபட்டிருப்போராவாலும் சரி; ஏதாவதொரு வகையிலே கணக்குப் பார்க்கும் அவசியம் ஏற்படவே செய்கிறது. கணக்கறியாதான் வாழ்வு சீர் குலைந்து போவதை உணர்கிறோம்; காண்கிறோம்.

மனக்கணக்கு, கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல், கணக்குப் போல,சில கட்டங்கள் போட்டு அவற்றை எண்களால் நிரப்பி எளிதில் விடைகள் கண்டு பிடிக்கும் புதுவகைப் புதிர்க் கணக்கு வகையொன்று இந்த 'மாயக் கட்டங்கள்' நூல் மூலம் ஆசிரியரால் நமக்கு அறிமுகம் செய்து வைக்கப்படுகிறது.

கொஞ்சம் பழகிவிட்டால் இந்த வழிமுறை எளிதாகிவிடும். கணக்கோடு விடைகளும், கண்டு பிடிப்பு முறைகளும் இதில் தரப்பட்டிருக்கின்றன. படித்துப் பயன்பெறலாம்.

**வினாடி வினா 1000**

ஆசிரியர்: மு.முத்துக்காளத்தி
விற்பனை உரிமை: பாரி நிலையம்
184, பிராட்வே,
சென்னை-108

விலை: ரூ. 9 பக்கம்: 108

ஹாலி வால்நட்சத்திரம் எப்பொழுது வானில் தென்படும்?

இந்தியாவில் எத்தனை வன விலங்குக் காப்பகங்கள் இருக்கின்றன?

உலக மக்கள் தொகை எவ்வளவு?

இப்படி 1000 வினாக்களுக்கு இந்நூலில் விடைகள் உள்ளன. எல்லாம் படிக்கச் சுவையானவை. பாட சம்பந்தமாகவும் உள்ளன. பொது அறிவை வளர்த்துக் கொள்ள உதவுபவை. மாணவர்கள் மட்டுமல்ல, பெரியவர்களும் படிக்கலாம்.

—'கிரிஜா'

**கவிதை உறவு—தொடரும்**

தொகுப்பாசிரியர்: ஏர்வாடி எஸ்
இராதாகிருஷ்ணன்,

வெளியீடு: சுதா பதிப்பகம்,
4, முத்துமுதலி தெரு,
புரசைவாக்கம்
சென்னை-600007.

விலை: ரூ. 7 பக்கம்:88

பல கவிஞர்களால் எழுதப்பெற்ற, பல்வேறு தலைப்புகளில் அமைந்த கவிதைகளின் தொகுப்பு இது.

காதல், வீரம், இயற்கை, உரிமை முதலான கருத்துக்கள் இழைந்தோடும் கவிதைகள் நிறைய உள்ளன. கற்பனை சிறகடிக்கும் கவிதைகள் படித்து இன்புறத்தக்கன.

**அன்புள்ள கீதாவுக்கு**

ஆசிரியர்: ஏர்வாடி எஸ். இராதா
கிருஷ்ணன்,

வெளியீடு: சுதா பதிப்பகம்,
4, முத்துமுதலி தெரு,
புரசைவாக்கம்,
சென்னை-600007.

விலை: ரூ.10 பக்கம்: 134

இந்நூலில் ஏழு நாடகங்கள் உள்ளன. வானொலியிலும், தொலைக்காட்சியிலும் ஒலி-ஒளி பரப்பானவை. நடிப்பதற்குமட்டுமல்ல, படிப்பதற்கும் ஏற்ற நாடகங்கள். கதையம்சம், உரையாடல் யாவும் கச்சிதமாக உள்ளன. இன்றைய சமுதாயத்தைப் படம் பிடித்துக் காட்டும் காட்சிகள் நிறைய உண்டு.

—பி.வி.ஜி.

## வரப்பெற்றோம்

**கீரிழிவு**

இயற்கைச் சிகிச்சை,

பேராசிரியர் க. அருணாசலம்

வெளியீடு

தமிழ்நாடு இயற்கை மருத்துவச் சங்கம்,

மதுரை-625000

**வானவில்**

பாலகவி வீரா. விநாயகம்
தங்கம் பதிப்பகம்,
ஆரணி-632 301.

**அம்மா சிரிக்கிறாள்**

எஸ். இரகுநாதன்

எஸ். சேஷாச்சலம்

வெளியீடு:
சந்திரா பதிப்பகம்
C-391,சந்திரசேகர் சாலை,
பெரியார் நகர்,சென்னை-82.

**தேவாரம்**

புலவர் மாவண்ணாதேவராசன்

வெளியீடு:
விசாலாட்சி பதிப்பகம்,
இராயப்பேட்டை,
சென்னை-600 014.

## அநுபவ தையற்கலை
## நீடில் ஒர்க்ஸ்-டிரஸ் மேக்கிங்

ஆசிரியர்: பேராசிரியர்
ஆ. சுகுமாரன்,
வெளியிட்டோர்: உமா பதிப்பகம்,
58, ஐயப்ப செட்டித்தெரு,
மண்ணடி, சென்னை-600001
பக்கம்: 200 விலை: ரூ. 17.00

தையற்கலையைப் பாடமாக ஏற்றுப் படித்து அரசுத் தேர்வுக்குச் செல்லும் மாணவ மாணவிகளுக்கு ஏற்றபடியும், தைப்பதே தொழிலாகக் கொண்டவர்களுக்கு வழிகாட்டுவதாயும் இந்த நூலை உருவாக்கியிருக்கிறார் நூலாசிரியர்; 'பாணர் வளர்த்த கலை' என்ற புலியூர்க்கேசிகன் அணிந்துரையோடு வெளியிடப்பட்டிருக்கிறது.

தையலின் வரலாறு, தையல் என்பது என்ன?, தைக்க உதவும் உபகரணங்கள், தையற் பொறி, அடிப்படைத் தையல் வகைகள், தையல்பகுதிகளும் மடிப்புகளும், காலர் வெட்டும் விதம், துணியை வெட்டுவதற்கு முன் - என்பது போன்ற 23 முக்கியத் தலைப்புகளோடும், பலவகைத் துணைத் தலைப்புகளோடும் தையல் கலை பற்றிய பலவகை விளக்கங்கள்-செயல் முறைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டிருக்கின்றன. துணியில் பூப்பின்னுதல், ஜிப் வைத்தல் போன்ற சில செய்திகள் படங்களுடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

தையல் தொழில் கற்றோருக்கு மட்டுமல்ல; கற்க நினைப்போருக்கும் உதவும்படி நல்ல வண்ணம் வெளியிடப்பட்டிருக்கும் நூலே 'அநுபவ தையற்கலை-(நீடில் ஒர்க்ஸ் டிரஸ் மேக்கிங்).

## சாண அடுப்பும் சூரிய அடுப்பும்

ஆசிரியர்: ஆண்டாள் பிரியதர்சினி
வெளியிட்டோர்: ஆண்டாள் பதிப்பகம்,
அஞ்சல்பெட்டி எண்: 1068
சென்னை-600015
பக்கம்: 32 விலை ரூ. 5

புதினம் எழுதுவதில் கைதேர்ந்தவரான ஆசிரியை, கதைபோல எல்லார்க்கும் எளிதில் புரியும் விதத்தில் இந்த நூலைத் தயாரித்திருக்கிறார்.

மத்திய அரசின் முதியோர் கல்வித்துறைப் பரிசு மட்டுமல்ல; அறிஞர் அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக் கழகப் பாராட்டும் பெற்ற நூலிது.

பெட்ரோலியம், சமையல் எரிவாயு தட்டுப்பாடு அடிக்கடி ஏற்படும் காரணத்தால் மாற்று எரிபொருள் தேவைப்படுகிற காலம் இது. ஆகவே, சாண அடுப்பும், சூரிய அடுப்பும் மிக எளிதில் நமக்குப் பயன்விளைப்பதாக இருக்கும் என்று கூறுகிற நூலாசிரியை, அவற்றை அமைக்க அரசு மூலம் கிட்டும் உதவிகள் பற்றியும் இந்நூலில் தெரிவித்திருக்கிறார்.

வசதி படைத்தவர்களுக்கு மட்டுமல்ல; வசதியற்றவர்களுக்கும் கிட்டக்கூடிய அறிவியல் முன்னேற்றத் தொடர்பான நூலாகும் இது.

—பி.எல்.ஆர்.

## பொது அறிவுக் களஞ்சியம்

ஆசிரியர்: நவீன்குமார்,
வெளியீடு: குமரிப்பதிப்பகம்,
15, நீலா தெற்கு வீதி,
நாகப்பட்டினம்-61001
விலை: ரூ. 11 பக்கம்: 129

பொது அறிவு பெறுவதற்கான கேள்வி பதில்களை உள்ளடக்கியது இந்நூல். சரித்திரம், அறிவியல், மொழியியல், கலை, பூகோளவியல், போன்ற பல்வேறு துறைகளிலும் ஏறத்தாழ ஆயிரத்திற்கும் மேற்பட்ட கேள்விகளுக்கு மிகச்சரியான பதில்கள் இடம் பெற்றுள்ளன. மாணவர்கள் மற்றும் வேலைவாய்ப்புத் தேர்வுகளுக்குச் செல்வோர்க்கு மட்டுமின்றி, படிப்பறிவு பெற்றோர் அனைவரும் படித்துப் பொது அறிவு பெற வேண்டிய பயன்மிக்க தொகுப்பு நூலிது.

## புரட்சிப் பூக்கள்

வெளியீடு: இலக்கியவட்டம்,
மனை எண் 386,
27வதுதெரு, 6வது பிரிவு,
கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை-500078
விலை: ரூ. 3 பக்கம்: 40

மனித உருக் கொண்டவர்களை மனித உள்ளம் கொண்டவர்களாக மாற்றுவதை நோக்கமாய்க் கொண்ட ஒரு அமைப்பு இலக்கிய வட்டம். இந்த இலக்கிய வட்டத்தில் உருவான இளங்கவிஞர்கள் படைத்த கவிதைகளின் தொகுப்பே இந்நூல்.

''உடையால் தோற்றத்தால்
மனிதன் உள்ளபடியே இவன்
மனிதனா? உணர்விலே இவன்
மனிதனா? பகுத்தறிவு ஏதுமின்றி
மொழியுணர்வு சிறிதுமின்றி
தூய நல சிந்தனையுமின்றி இல்
லாத ஒன்றைத் தினமும் இருக்
குது என்றே கூறி நாளும் கைப்
பொருள் யாவும் செலவிட்டுக்
காலத்தை வீணே கழிக்கின்
றானே!''

கவிதைகளில்தான் எத்தனை எத்தனை மனித நேயம், பகுத்தறிவு, தமிழ் உணர்வுக் கருத்துக்கள்! சிந்திக்கச் செய்யும் சீரிய படைப்பு நூல் இது.

—வி.இராவணன்

# பார்த்தோம் படித்தோம்

16.8.87 இதழ் மிகவும் சிறந்த முறையில் வெளிவந்துள்ளது. பெரிதும் பாராட்டற்பாலது. 40வது சுதந்திரத் திருநாள் தொடர்பாக நடைபெற்ற விழாக்களின் படங்கள் மலருக்குச் சீரும் சிறப்பும் தந்து, நறுமணமும் கண்குளிரும் காட்சியும் தருவனவாக அமைந்துள்ளன.

தியாகி.எல்.கிருஷ்ணசாமிபாரதி,
நயினாரகரம்
திருநெல்வேலி.

இந்தியச் சுதந்திரத்தின் நாற்பதாண்டு நினைவுச்சிறப்பிதழ்கண்டேன். அருமையான தொகுப்பு. இளந்தலைமுறைகள் படித்துப் பயன்பெறும் வகையில் அமைந்துள்ளது. படித்துப் பத்திரப் படுத்தி வைக்க வேண்டிய இதழ்.

—'ரகமி'
சென்னை-5

சுதந்திரத்தைப் பெற்றுத் தந்த வீரர்களின் வரலாறு அத்தனையும் மொத்தமாக அமைந்த தேன்கூடு. இடை இடையே பாரதிப் பாடல்கள், கூட்டில் உள்ள தேன். மொத்தத்தில் எங்கள் நாவிற்கு இனிப்பைத் தந்த ''தமிழரசு''க்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எச்.பாண்டியன்,
திருவையாறு.

இந்திய சுதந்திரத்தின் நாற்பதாவது நிறைவுச் சிறப்பிதழில், விடுதலைப் போராட்டக் கால கட்டங்களில் விடுதலையின் விதியை, வியர்வையிலும் விலா எலும்புகளிலும் எழுதிய மூன்று முத்தான பாடல்களைக் கண்டேன்.''விடுதலைப் போராட்டப் பாடல்கள்'' என்ற தலைப்பில்.

பூமிபாலகதாஸ் — விஸ்வநாததாஸ்: மதுரபாஸ்கரதாஸ் போன்ற பழம் பெரும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் கனவில் செதுக்கிய காந்தச் சிலையாக வன்றோ அப்பாடல்கள் இருந்தன!

ப.முருகேசபாண்டியன்,
கரப்பாடி.

மாணவர் பக்கம்

# புத்தகம் ஒரு மாயவிளக்கு

ஒரு நல்ல புத்தகத்தை நீங்கள் படிக்கும்பொழுது, நீங்கள் பலசாலிகளாகவும், அறிவாளிகளாகவும், தூயவர்களாகவும் இருப்பதாக உணர்வீர்கள்.

—ஜானிஸ் சுத்ராப்.

எண்ணற்ற புத்தகங்களைப் படித்த ஒருவர், பல பெரிய மனிதர்களின் வாழ்க்கையைவிட மேலாக வாழ்ந்து விட்டவராகும்.

—பாவ்லென்கோவ்.

புத்தகங்கள் இல்லாத வீடு இன்பமில்லாமல் வெறிச்சோடிக் காணப்படும்.

—மாக்ஸிம் டாங்க்

புத்தகங்களுக்கு முன்னால் ஒவ்வொன்றும் வெளிறியாகிப் போகும்.

—ஆண்ட்டோன்செக்கோவ்

,புத்தகங்களை வெறுத்த ஒரு குடும்பம் ஆன்மீக ஊனம் அடைந்ததாகும்.

—பாவ்லென்கோவ்.

புத்தகங்கள் மனிதனைப் பிரபஞ்சத்தின் எசமானனாக ஆக்குகின்றன.

—பாவ்லென்கோவ்

புத்தகங்கள் மக்களுக்கு இறக்கைகளைக் கொடுக்கின்றன.

— ஹஃப்யோடோர் க்ளாட்கோவ்

ஒரு நல்ல புத்தகம் ஒரு உண்மையான விருந்து ஆகும்.

—மாக்ஸிம் கார்க்கி.

புத்தகங்களை எவ்வாறு உபயோகிப்பது என்று நீங்கள் தெரிந்துகொள்ளும் காலம் வரை அவை மிகப் பெரிய பொருள்களாகும்.

—அலெக்சாண்டர் ப்ளாக்.

ஒரு புத்தகம் என்பது மாய விளக்காகும். மனிதனுக்கு அவனது வாழ்க்கையின் மிக நெடிய மற்றும் இருண்ட பாதை ஊடே வெளிச்சத்தைக் கொடுப்பதாகும்.

—அண்ட்ரேஜ் உபிட்ஜ்.

புத்தகங்கள் மரியாதையுடன் போற்றப்படும் குடும்பங்களில் நல்ல நன்னெறி மற்றும் கடின உழைப்பாளிகள் வளர்வார்கள்.

—சுகோம்லின்ஸ்கி.

கெட்ட படிப்பானது களி மண்ணால் தெளித்த சன்னல் போன்றது. அதனூடே நீங்கள் எதையும் பார்க்க முடியாது.

—சுகோம்லின்ஸ்கி.

தொகுத்தவர் :

**—சோ. சேசாசலம்**

## விளையும் பயிர்



தருமபுரி மாவட்டம், மெணசி, அரசினர் மேல் நிலைப் பள்ளியில் 12—ஆம் வகுப்பு கணிதப் பிரிவில் படிக்கும் மாணவன் மா. சத்தியவேல். இவர், தர்மபுரி மாவட்ட அளவில் நடைபெற்ற மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கிடையே நடந்த, 40-வது சுதந்திரதினப் பேச்சுப் போட்டியில், முதற்பரிசு பெற்றுள்ளார். கட்டுரைப் போட்டிகளிலும் இவர் பரிசுகள் பெற்றுள்ளார்.



மதுரை மாவட்டம், திருமங்கலம், பி. கே. என். பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 11-ஆம் வகுப்பு பயிலும் மாணவி ம. அமுதா. இவர் கரகம், காவடி முதலான கிராமியக் கலைகளிலும் நடிப்பு, பலகுரல், இசை முதலான துறைகளிலும் சிறந்து விளங்கிப் பரிசுகள் பெற்றவர். பதினைந்து வயது நிரம்பிய இம் மாணவி, சாரண சங்கம் நடத்திய போட்டிகளிலும் பரிசுகள் பெற்றுள்ளார்.

## ~இது உங்கள் பக்கம்~

மாணவ மணிகளே!

இது உங்கள் பக்கம்.

குட்டிக்கதைகள், கட்டுரைகள், பொது அறிவுத் துணுக்குகள், கவிதைகள் முதலானவை எழுதி அனுப்பலாம். கதை, கட்டுரை, கவிதைகள் சொந்தமானவையாக இருத்தல் வேண்டும். துணுக்குகளுக்கு ஆதாரம் இருத்தல் வேண்டும்.

கல்வியோடு கதை, கட்டுரை எழுதுதல், விளையாட்டு, நாடகம், ஓவியம், பேச்சு முதலான வற்றில் திறமையுள்ள மாணவ, மாணவிகள் தங்களைப் பற்றிய குறிப்புடன், பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தையும் இணைத்து, வகுப்பு ஆசிரியர் கையொப்பமுடன் அனுப்பி வைக்கலாம்.

பள்ளி சார்பில் நடக்கும் நாட்டு நலப்பணித் திட்டம் (என். எஸ். எஸ்.) பற்றிய செய்திகளையும் புகைப்படத்துடன் ஆசிரியர்கள் அனுப்பி வைக்கலாம்.

—ஆசிரியர்



# காந்தி மகான்

அ. சுப்பையன்

காந்தித் தாத்தா நல்லவராம்;
கருணை உள்ளம் கொண்டவராம்!
சாந்த மூர்த்தி பாபுவென
சகலரும் போற்ற வாழ்ந்தவராம்!

சத்திய சோதனை செய்தவராம்;
சாந்த சொரூபி ஆனவராம்!
முத்திரை பதித்துச் சென்றவராம்!
முழுமை பெற்றுத் திகழ்ந்தவராம்!

மனித தெய்வம் காந்திமகான்;
மகாத்மா வான காந்திமகான்!
புனித அண்ணல் காந்திமகான்!
புண்ணிய வாளர் காந்திமகான்!

அன்பால் உலகை ஆண்டமகான்;
அகிம்சா மூர்த்தி காந்திமகான்!
பண்பால் உலகைக் கவர்ந்தமகான்;
பாரே போற்றும் காந்திமகான்!

# அறிவுச் சுடர்

● லிக்னைட் சுரங்கம் இந்தியாவில் எங்கே இருக்கிறது?
நெய்வேலியில்

● உலகிலேயே மிக அதிகமாக நெல் ஏற்றுமதி செய்யும் நாடு எது?
பர்மா

● இரவு நேரத்தில் மலரும் மலரின் நிறம் என்ன?
வெள்ளை

● மணிகள் செய்யப் பயன்படும் உலோகக் கலவை எது?
மணி வெண்கலம்

● மின் தடையினால் அதிகம் வெப்பம் பெறும் கருவிகள் இரண்டு கூறு.
மின் அடுப்பு, மின் இஸ்திரிப் பெட்டி.

● வர்த்தகக் கப்பல்களில் அதன் பக்கங்களில் வரையப்பட்டிருக்கும் கோடுகளின் பெயரென்ன?
பிளிம்சால் கோடுகள்

● மரத்தைப் பாதுகாக்கப் பயன்படும் பொருள் யாது?
கிரியோசோட் எண்ணெய்



# சோவியத் நாட்டில் தாகூர் நூல்கள்

பிரேம்சந்த், தாகூர், முல்க்ராஜ் ஆனந்த், கிருஷ்ன்சந்தர் மற்றும் இந்திய எழுத்தாளர்களது படைப்புக்கள் சோவியத் நாட்டில் வெளிவந்துள்ளன. ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக இந்திய எழுத்தாளர்களின் 100 படைப்புகள், பல்வேறுமொழிகளில்பதிப்பகங்களால் வெளியிடப்படுகின்றன. 1947க்குப் பின்னால் இதுவரை 1,200 இந்திய நூல்கள் 37 சோவியத் மொழிகளில் 4 கோடியே 50 லட்சம் பிரதிகளாக வெளிவந்துள்ளன.

இதில் ரவீந்திரநாத் தாகூரின் படைப்புகள் மட்டும்174 பதிப்புகள் வெளிவந்துள்ளன. மொத்தம் 65 லட்சம் பிரதிகள் அச்சிடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## அதிக சக்திவாய்ந்த தொலைநோக்கி

சாதாரணத் தொலைநோக்கிகளால் பார்க்கக்கூடிய தூரத்தைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிக தூரத்துக்கு விண்வெளியை ஆராயும் சக்திவாய்ந்த தொலைநோக்கியொன்று கலிபோர்னியா தொழில்நுட்பக்கழகத்தின் மேற்பார்வையின்கீழ் தயாரிக்கப்பட்டு வருகின்றது. ஹவாய் தீவில் உள்ள 'டபிள்யூ.எம். கெக்' வானியல் ஆய்வுக்கூடத்தில் இந்தத் தொலைநோக்கி பொருத்தப்படும். உலகிலேயே அதிக சக்தி மிக்க வான ஆராய்ச்சித் தொலைநோக்கியாக இது திகழும். தற்போது, கலிபோர்னியா தொழில்நுட்பக் கழகத்தின் பாலோமர் வானியல் ஆய்வுக்கூடத்தின் தொலைநோக்கிதான் அதிக சக்தி மிக்கதாக உள்ளது.

# குறளார் போற்றும் குறள் மணி

'திருக்குறளைத் தெரியுமா?' என்று கேட்டால், ஒரு சில குறள்களைச் சொல்லலாம், அல்லது சற்று அதிகமாகவேகூடச் சொல்லலாம் பார்க்காமல்! ஆனால் *1330* குறட்பாக்களையும் அப்படியே ஒப்புவிக்க முடியுமா?

'முடியும்' என்கிறார் திரு. சி. வெற்றிவேல் என்னும் 25 வயது இளைஞர்.

*1330* குறள்களையும் ஒப்புவிக்க இவர் எடுத்துக்கொள்ளும் நேரம் 90 நிமிடங்களே!

திருக்குறளில் ஒரு குறளைச் சொல்லி, அது எந்த அதிகாரத்தில் வருகிறது என்று கேட்டாலும் சரி, குறளின் முதல் அடியைச் சொன்னாலும் அல்லது முடிவைச் சொன்னாலும் சரி, உடனே இவர் அந்தக் குறளை அப்படியே சொல்கிறார்.

இந்தப் பழக்கம் இவருக்கு எப்படி வந்தது?

இவர் ஆறாம் வகுப்பு படிக்கும் போதே ஆர்வம் வந்ததாம். அப்போதே இவர் 150 திருக்குறளை ஒப்புவிப்பாராம்.

திருக்குறளை முழுக்க மனப்பாடம் செய்தது 1982-ல், இவர் இப்படி மனப்பாடம் செய்வதற்குத் தூண்டுகோலாக இருந்த ஒரு நிகழ்ச்சி, உலகத்தமிழ்



மாநாட்டில், முத்தமிழ்க் காவலர் திரு சி.ஆ.பெ.விசுவநாதம் அவர்கள் பேசும்போது, 'ஏதாவதொரு நூலை மனப்பாடம் செய்ய வேண்டும்' என்று கேட்டுக்கொண்டதுதான்.

'என்னுடைய இலட்சியம், திருக்குறளை ஆராய்ச்சி செய்வதுதான்' என்று மகிழ்ச்சியுடன் கூறும் இவர், திருக்குறள் ஒப்புவித்தல் போட்டிகளில் பரிசுகள் பெற்றுள்ளார். தேரழுந்தூர் கம்பன் விழாவில் பேச்சுப்போட்டியில் முதல் பரிசும், தெய்வத் தமிழ்மன்றத்தின் சார்பில் 'திருக்குறள் மணி' என்னும் விருதும் பெற்றுள்ளார்.

வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திரு வெற்றிவேல், திருக்குறளைத் தவிர, மனிதனுக்குள்ள நூறு சிறப்புகளை ஒரே நிமிடத்தில் மின்னல் வேகத்தில் கூறுகிறார். அதுமட்டுமல்ல, தமிழ் மொழிக்குரிய 40 சிறப்புகளை இருபதே நொடிகளில் கூறிவிடுகிறார் இவர்!

சென்னை வள்ளுவர்கோட்டத்தில் வாரந்தோறும் நடக்கும் திருக்குறள் வகுப்புக்குத் தவறாமல் போகும் இவரை, திருக்குறளார் திரு வி.முனிசாமி அவர்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

**பி.வி. கிரி**

---

**இந்தியாவிலேயே கூட்டுறவுத் துறையின் மூலம் விற்பனை ஆகும் பொருட்களில் மூன்றில் ஒரு பாகம் தமிழகத்தில் உள்ள கூட்டுறவுத் துறைகளின் மூலம் விற்பனை ஆகிறது.**

**தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தின் மூலம் இதுவரை 256 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. தமிழில் 125 நூல்களும், சமஸ்கிருதத்தில் 80 நூல்களும், தெலுங்கில் 17 நூல்களும், மராத்தியில் 31 நூல்களும், ஆங்கிலத்தில் 3 நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன.**

**2001ல் பம்பாய் மக்கள் தொகை 1 கோடியே 70 இலட்சமாகவும், கல்கத்தாவில் 1 கோடியே 60 இலட்சமாகவும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

**புற்றுநோய்க்கான சிகிச்சைகளை மேற்கொள்ள சித்த மருத்துவர்களுக்குத் தமிழ்நாடு அரசு பயிற்சி அளித்து வருகிறது.**

**குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைச் சிறப்பாக அமல்படுத்தியதற்காக, தமிழ்நாடு மூன்றாவது முறையாக 'பி' பிரிவில் முதல் பரிசு ரூ 2 கோடியே 50 இலட்சம் பெற்றுள்ளது.**

**கி. பி. 2001-வது ஆண்டில் சென்னை நகரின் மக்கள்தொகை 1 கோடியே 5 இலட்சத்தைத் தாண்டும் என உலகநாடுகள் சபையைச் சேர்ந்த டாக்டர் இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார். தற்போது சென்னை நகரின் மக்கள் தொகை 35 இலட்சமாகும்.**

# ஜனநாயகத்தின் உயிர்நாடி

## — அண்ணல் காந்தியடிகள் —



சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் அண்ணல் காந்தியடிகள்.

நான் வாழ்க்கையில் பல கடுமையான சோதனைக்குள்ளாகியிருக்கிறேன். அவையனைத்தும் எனக்கு ஒழுங்குக் கட்டுப்பாட்டின் அவசியத்தைப் போதித்துள்ளன.

நம்மில் பெரும்பாலோர் ஒழுங்குக் கட்டுப்பாடற்று இருந்து வருகின்றனர். அற்ப காரணங்களுக்காக ஒருவரோடொருவர் சண்டை போடுவதும், ஒருவரையொருவர் திட்டிக்கொள்வதும் நமது அன்றாட அனுபவங்களாக இருந்து வருகின்றன.

ஒழுங்குக் கட்டுப்பாட்டை அனுசரிப்பது கடினமாக இருக்கலாம். ஆனால் அது இன்றியமையாதது என்பதையும், சிறந்த நற்பயனை அளிக்கவல்லது என்பதையும் நான் உணருகிறேன். ஸ்தாபனங்களுக்கு ஒழுங்குக் கட்டுப்பாடு எவ்வளவு அவசியமோ அத்துணை அளவு தனி நபர்களுக்கும் அது அவசியமாகும்.

ஒழுங்குக் கட்டுப்பாட்டின் அனுசரிப்பில் அந்தஸ்து வேறுபாடு எதுவும் இருக்க முடியாது. ஒழுங்குக் கட்டுப்பாடு ஜனநாயகத்தின் உயிர்நாடியாகும். எனவே ஜனநாயகவாதிகள் அனைவரும் ஒழுங்குக் கட்டுப்பாட்டைக் கண்டிப்புடன் அமல் நடத்துபவர்களாக இருக்க வேண்டும்.

அகிம்சைத் தத்துவத்தின் கீழ் வரம்பு வரையறையின்றி செயல்படுவது முடியாது. ஏனெனில் அது ஒழுங்குக் கட்டுப்பாட்டைப் பெரிதும் அடிப்படையாகக் கொண்டதொரு தத்துவமாகும்.

எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகச் சுதந்திரம் உள்ளதோ, அவ்வளவுக்கு அவ்வளவு ஒழுங்குக் கட்டுப்பாடும், பணிவுணர்ச்சியும் இன்றியமையாததாகும். எப்படி ஒரு தீயையோ, நீர் வீழ்ச்சியையோ வைத்துக் கொண்டு வந்து, மிகத் திறனுடன் கட்டுப்படுத்தாமல் பயன்படுத்த முடியாதோ அதேபோன்று கட்டுப்பாடு இன்றி தெளிவுணர்ச்சியும் பயன்படாது போகும்.

சமூக விடுதலைக்கு முதல் அவசியம் சுயகட்டுப்பாடேயாகும்.

வாழ்க்கையில் ஏற்படும் இடுக்கண்களே நமக்கு ஒழுங்குக்கட்டுப் பாட்டைப் போதிக்கின்றன. எத்தகைய காப்பும் இன்றி பொறுப்பான வேலைகளில் ஈடுபடுவதற்குப் பயிலுவித்துக் கொள்ளும்போது தான் இளைஞர்கள் பொறுப்பும் ஒழுங்குக் கட்டுப்பாடும் யாது என்பதை நன்குணர்வார்கள்.

நாம் நீடித்த ரீதியிலான மாபெரும் சாதனை எதையும் சித்திக்கப் பெறுவதற்கு இரும்பு போன்று உறுதியான ஒழுங்குக் கட்டுப்பாட்டை அமலுக்குக் கொண்டுவரவேண்டும். மாபெரும் நாடாகத் திகழ விருப்பம் கொண்டுள்ள மக்களுக்கு ஒழுங்குக் கட்டுப்பாடு அத்தியாவசியமும் இன்றியமையாததுமாகும்.



## அண்ணலின் கருத்துகள்

எத்தகைய பெரும் இலட்சியத்தை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம்; அதைச் சாதிப்பதற்கு எத்தனை பேர் முன் வருகிறார்கள் என்ற எண்ணிக்கை முக்கிய மல்ல; அதற்காக முன் வருபவர்கள் எத்தகைய மனப்பாங்குடையவர்கள் என்பதே வெற்றியை நிர்ணயிக்கும் வாயிலாகும்.

குழந்தையின் உடற்பண்பையும் உயிர்ப் பண்பையும் வளர்க்கும்போது, இதயப் பண்பையும் வளர்த்து வந்தால்தான் உள்ளம் வளர்ச்சியடைய முடியும். இவை மூன்றையும் தனித்தனியே பிரிக்க முடியாது. ஒன்றாய் இயங்குவன அவை.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி - மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
DIPR/Efficient

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23



# தமிழகத்தில் புதுமையான தொழிற் புரட்சி!

## டிட்கோவின் எதிர்காலத் தொழிற் திட்டங்கள்

- ரூ. 125 கோடி செலவில் கண்ணாடி (ஃப்ளோட் கிளாஸ்) தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 18 கோடி மூலதனத்தில் டெலிபோன் கேபிள் தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 250 கோடி செலவில் உருவாகும் 210 மெகாவாட் திறனுடைய மின் நிலையம்.
- ரூ.5.5 கோடி செலவில் மரவள்ளிக் கிழங்கிலிருந்து ப்ரக்டோஸ் திரவம் உற்பத்தி செய்யும் தொழிற்திட்டம்.
- ரூ. 6 கோடி செலவில் இண்டஸ்ட்ரியல் டைமண்ட் தொழிற்திட்டம்.
- ரூ. 40 கோடி செலவில் உருவாகும் 'பென்சிலின்' மருந்து தயாரிக்கும் தொழிற்திட்டம்.
- ரூ. 25 கோடி மூலதனத்தில் உருவாக்கப் படவிருக்கும் லாம்ப் மற்றும் லாம்ப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 10 கோடி செலவில் பேப்பர் லாமினேட்ட் எச்.டி.பி.இ. (HDPE) பைகள் தயாரிக்கும் தொழிற் திட்டம்
- ரூ. 12 கோடி மூலதனத்தில் உருவாகும் செராமிக் டைல்ஸ் தொழிற் திட்டம்



ஈ.வெ.கி. சுலோசனா சம்பத்
தலைவர்

டிட்கோ

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்**

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
735, அண்ணா சாலை, சென்னை-600 002